Design: Siraan

www.alhasanath.lk

# அல்ஹஸனாத்

الحسنات إسلامية شهرية تصدرها الجماعة الإسلامية السريلانكية

மலர்: 41 இதழ்: 04 ஏப்ரல்: 2015 ஜு.அல்ஆகிரா: 1436



PUBLIC LIBRARY
JAFFNA

## இகாமதுத் தீன் பணியின் பங்காளர்கள் யார்?

## செயற்களத்தில் முன்னோர்கள்

ISLAMIC MONTHLY இஸ்லாமிய இலட்சியக் குரல் 60/-

மாவனல்லையில்

# MITT

வழங்கும் தமிழ் மொழி மூல தொழில் நுட்பப் பாடநெறிகள்

## O/L முடித்துவிட்டீர்களா?

# வெற்றிகரமான எதிர்கால வாழ்க்கைக்கு

## இதோ மாவனல்லை MITT வழங்கும்


# தொழில்நுட்பப் பாடநெறிகள்.

| Courses | Duration Months |
|---|---|
| Automobile Mechanic | 18 |
| AC & Refrigeration Mechanic | 12 |
| Automobile Electrician | 12 |
| Power Electrical (Wiring) | 12 |
| Multi Skills | 12 |
| Mobile Phone Repairing | 2 |
| Diploma in Computer Studies | |



பதிவுகளுக்கு உங்கள் பெயர், விலாசத்துடன் MITT என Type செய்து 0777 412097 எனும் இலக்கத்திற்கு SMS அனுப்பவும்

**விண்ணப்ப முடிவுத்திகதி 2015 மே 15**




தேவையானோருக்கு விடுதி மற்றும் உணவு வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

ஸகாத் பெறத்தகுதியான மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வசதிகள் செய்து கொடுக்கப்படும்

**இப்பயிற்சி நெறி.........**

- கோட்பாடுகள் மற்றும் செயல் முறைகளைக் கொண்டது
- தேர்ச்சியும் அனுபவமும் வாய்ந்த விரிவுரையாளர்களை உள்ளடக்கியுள்ளது.

எமது நிறுவனம் அரசாங்க அங்கீகாரம் பெற்றுள்ளது. (TVEC PO8/0073)

Smart - Mawanella

MITT

Established: 1983


**MAWANELLA INSTITUTE OF TECHNICAL TRAINING**

UDATHENNAWATTA, GANETHENNE, HINGULA, MAWANELLA

TEL: 035 2240944 | 0777 412097 || EMAIL: techmaw@gmail.com

INSIGHT

PUBLIC LIBRARY
JAFFNA



# வாழும் சிந்தனைகளும் ஆளும் சிந்தனைகளும்

இஸ்லாமிய வாழ்வியலை ஒழுங்குபடுத்துவதில், மேம்படுத்துவதில், கண்காணிப்பதில், உறுதிப்படுத்துவதில் இஸ்லாமிய ஆட்டசிசார் சிந்தனைகள் இன்றியமையாதவை. எந்த ஓர் ஆட்சியினதும் நோக்கமாக இருக்க வேண்டியது, மனிதனையும் மனிதத்துவத்தையும் பாதுகாத்து மனித வளத்தை அபிவிருத்தி செய்து நெறிப்படுத்துவதாகும். அந்த வகையில் சட்டத்தின் ஆட்சி, சமநீதி, பாரபட்சத்துக்குட்படுவதிலிருந்து பாதுகாப்பு, தமது சமயத்தை, கலாசாரத்தைக் கற்று அதனைப் பின்பற்றி மற்றவருக்கு போதிக்கும் சுதந்திரம் என்பன முக்கியத்துவம் பெறுகின்றன.

இலங்கையில் இன்று நடைமுறையிலுள்ள அரசியல் யாப்பிலாயினும் சரி, புதிதாக முன்மொழியப்படுகின்ற யாப்பிலாயினும் சரி மேற்கூறப்பட்ட ஆட்சியியல் விழுமியங்கள், தனி மனித சுதந்திரம், வாழ்வதற்கான உரிமைகள் என்பன அத்தாட்சிப்படுத்தப்பட்டுள்ளன. யாப்பிலும் சட்டத்திலுமுள்ள அத்தகைய உரிமைகளை நடைமுறைப்படுத்துவதிலுள்ள தவறுகளை திருத்துவதற்காகவும் தனி ஒருவரின் கைகளில் அதிகாரம் குவிவதை தவிர்ப்பதற்காகவும் சட்டத்தின் முன் யாவரும் சமம் என்பதை நடைமுறையில் காண்பிப்பதற்குமான முயற்சிகள் இன்று பரவலாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இன்று நல்லாட்சி, கொள்கை அரசியல், ஆட்சியியல் விழுமியங்கள், சமத்துவம் முதலான பதப் பிரயோகங்கள் முன்னெப்போதுமில்லாத வகையில் அலசப்படுகின்றன. இனம், சமயம், பிரதேசம் என்பவற்றுக்கு அப்பால் நின்று இலங்கையர் யாவரும் தமது தேசியம் குறித்து பெருமிதப்படுவதை உறுதிப்படுத்தும் முயற்சிகளாக இவற்றைக் கொள்ளலாம்.

இஸ்லாம் போதிக்கின்ற விழுமியங்கள், ஆட்சிக் கோட்பாடுகள் சமூகத்தின் அனைத்துத் தரப்பினரதும் பேசுபொருளாக மாறியுள்ள சூழலில், இஸ்லாத்தை விளங்கி, ஏற்றுப் பின்பற்றுவதாகக் கூறும் முஸ்லிம் சமூகத்தின் பங்கேற்பு எந்த மட்டத்தில் உள்ளது என்பதும் சீர்தூக்கிப் பார்க்கப்பட வேண்டும். எத்தனை முஸ்லிம்களுக்கு அமைச்சர் பதவி கிடைக்கும் அல்லது எத்தனை முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவார்கள் என்று அங்கலாய்ப்பதும் ஆராய்வதும் மட்டுமல்லாமல் அதற்காக உழைப்பதும் காத்திரமான முயற்சிகள் என்றிருந்தாலும்கூட அந்த முயற்சிகளில் இனவாதம், மதவாதம், பிரதேசவாதம் தொனிப்பது கவலைக்குரியதாகும்.

கடந்த காலங்களில் இலங்கை முஸ்லிம்களுக்கெதிராக நிகழ்த்தப்பட்ட பௌதிகரீதியான, உளரீதியான கொடுமைகளின்போது இந்நாட்டின் இடதுசாரிகள், மனித உரிமை ஆர்வலர்கள் தமது ஜனரஞ்சகத்தையும் இனத்துவத்தையும் பணயம் வைத்து முஸ்லிம்களுக்காக குரல் கொடுத்தபோது அதிக எண்ணிக்கையில் அரசாங்கக் கட்சியிலும் எதிர்க் கட்சியிலும் இருந்த முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களின் முன்னெடுப்புக்கள் எவ்வாறு அமைந்திருந்தன என்பது எல்லோரும் அறிந்த விடயம். தேசியப் பிரச்சினையின்போதும் அரசியலமைப்பு மாற்றங்களின்போதும் மனித நேயம், சமத்துவம், சமநீதி ஆகியவற்றை வலியுறுத்த வேண்டியவர்களாக நம்மவர்களில் எவரும் இல்லையே என்று கவலைப்படும் நிலையே உள்ளது.

இந்நாட்டில் நாம் நல்லாட்சியின் விழுமியங்களை விதைப்பவர்களாக மாற வேண்டும். நாட்டின் சுதந்திரத்தை, மனித உரிமைகளைப் பாதுகாப்பவர்களாக, அவற்றை மேம்படுத்துபவர்களாக மாற வேண்டும். ஒரு சிலரின் பதவிகளுக்கு துணைபோகும் இனவாதிகளாக நாம் ஒருபோதும் மாறக் கூடாது. எமது உரிமைகளை கேட்கும்போதுகூட அது ஏனையவர்களின் உரிமைகளைக் கேள்விக்குட்படுத்துவதாக இருக்கக் கூடாது.

ஜனநாயகத்தில் சிறுபான்மையினர் உரிமைகள் பாதுகாக்கப்படுவது மிக முக்கிய அம்சம். அதனை சகல சிறுபான்மை இனங்களுடனும் சேர்ந்து ஜனநாயக விழுமியங்களின் அடிப்படையில் முன்னெடுக்கும் சக்தியாக நாம் மாற வேண்டும். இந்த நாட்டு நலனே நமது நலன்; இந்த நாட்டு மக்களின் நல்வாழ்வே நமது நல் வாழ்வு என்ற சிந்தனையும் அதனை உறுதிப்படுத்தும் செயற்பாடுகளும் நம்மிடையே வரவேண்டும்.



# பிற சமூகங்களுடனான உறவு:
## இஸ்லாத்தின் எதிர்பார்ப்பு என்ன?

மௌலவி எம்.எச்.எச்.எம். முனீர், அதிபர், இஸ்லாஹிய்யா பெண்கள் அரபுக் கல்லூரி, புத்தளம்

*“(தீன்) மார்க்கம் தொடர்பான விடயத்தில் எவர்கள் உங்களுடன் போர் புரியவில்லையோ, உங்களை உங்கள் வீடுகளிலிருந்து வெளியேற்றவில்லையோ அவர்களிடம் நீங்கள் நல்ல விதமாகவும் நீதியுடனும் நடப்பதிலிருந்து அல்லாஹ் உங்களைத் தடுப்பதில்லை. திண்ணமாக அல்லாஹ் நீதி செலுத்துவோரை நேசிக்கின்றான்.”*

*(அல்மும்தஹினா: 8)*

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களது இஸ்லாமிய இயக்க போராட்ட வாழ்வில் ஹிஜ்ரத்திற்கு பிந்திய நாட்களில் தனது நேச, பகை அணிகளுடன் உறவாடுதல் குறித்த வழிகாட்டலை ஸூரதுல் மும்தஹினா பேசுகின்றது. ஸூராவின் 8ஆம் வசனம் இஸ்லாமிய அணியுடன் அமைதி பேணும் மக்களோடு நடந்து கொள்ள வேண்டிய வாழ்வியல் விழுமிய அடிப்படை குறித்து பேசுகிறது.

மானுடம் பேணல், மனித நேயம், சகவாழ்வு, சகிப்புத் தன்மை முதலான சொல்லாடல்களுக்கிடையே ஸூரா மும்தஹினாவின் 8ஆம் வசனம் பாராயணம் செய்யப்படுகிறது. இவ்வசனம் பல்வேறு விதங்களில் அர்த்தப்படுத்தப்படுவதோடு, மேலோட்டமான விளக்கங்களும் வழங்கப்படுவதை அவதானிக்கலாம். எனவே இது குறித்த கலந்துரையாடல் அவசியம்.

இஸ்லாம் அமைதியின், சமாதானத்தின் மார்க்கமாகும். அன்பும் நேசமும் அதன் கோட்பாடாகும். அது முழு உலகுக்கும் தனது நிழலின் கீழ் நிழல் கொடுக்க விரும்புகிறது. அதன் உயர்ந்த திட்டத்தின் அடிப்படையில் உலகை நிர்வகிக்க விரும்புகிறது. பரஸ்பரம் அன்பு கொண்டவர்களாகவும் பரஸ்பர அறிமுகத்துடன் கூடிய சகோதரத்துவம் பாராட்டும் மனிதர்களை அல்லாஹ்வின் கொடியின் கீழால் ஒன்றிணைக்க விரும்புகிறது என இவ்வசனத்துக்கு விளக்கம் செல்கிறார் அல்லாமா அஷ் ஷஹீத் செய்யித் குத்ப் (ரஹிமஹுல்லாஹ்)

முஸ்லிம் உம்மத் பெரும்பான்மையினருக்கு மத்தியில் சிறுபான்மை சமூகமாக, சிறுபான்மைகளை நிர்வகிக்கும் பெரும்பான்மையாக, பெரும்பான்மைகளை நிர்வகிக்கும் சிறுபான்மையாக என எவ்வடிவத்தில் இருந்தபோதும் அதன் தலைமைகளிலிருந்து சாதாரண குடிமக்கள் வரை சாதாரண, அசாதாரண சூழல்களில் இருக்க வேண்டிய சமூக உறவுகள் குறித்த கொள்கையும் மனப்பாங்கும் நடத்தையும் இங்கு முன்வைக்கப்பட்டுள்ளது.

இணைவைப்புடன் இருந்த ஹுதைபா என்ற பெண் தனது மகள் அஸ்மா பின்த் அபீபக்ர் (ரழியல்லாஹு அன்ஹா) அவர்களுக்கு ஓர் அன்பளிப்புடன் வந்தபோது வீட்டுக்குள் நுழைவதற்கும் அன்பளிப்பை ஏற்றுக் கொள்வதற்கும் அஸ்மா மறுத்துவிட்டார்கள். இது குறித்து ஆயிஷா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்கள் மூலம் நபியவர்களின் தீர்ப்பை அஸ்மா (ரழியல்லாஹு அன்ஹா) எதிர்பார்த்தார். அப்போது அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் அன்பளிப்பை ஏற்றுக் கொள்ளுமாறும் வீட்டுக்குள் அனுமதிக்குமாறும் பணித்தார்கள். (அல்புகாரி, முஸ்லிம்)

அவர்கள் நீதியின்பால் நின்று அநீதத்தை இல்லாமலாக்குபவர்கள்; வெளிச்சத்துக்குள்ளிருந்து இருள்களை அகற்றுபவர்கள்; உண்டு, கொழுத்து, வானளாவ வீடுகள் அமைத்து வாழாது ஒடுக்கப்பட்ட மக்களுக்காகவும் உழைக்கும் வர்க்கங்களுக்காகவும் போராடக்கூடியவர்கள் என முஸ்லிம் அல்லாதவர்கள் இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் புரிந்து கொள்ள வழியமைப்பதே “அவர்களோடு நல்ல முறையில் நடந்து நீதம் பேணுங்கள்” என்பதன் எதிர்பார்ப்பாகும்.

ஒரு முஸ்லிம் மிக உயர்ந்த நம்பிக்கைக் கோட்பாடுகளையும் மிகச் சரியான வழிபாட்டுத் தன்மைகளையும் கட்டுப்பாடுகளுடன் கூடிய வாழ்வொழுங்கையும் கொண்டவன். அதற்கு நேர் எதிரான போக்கைக் கொண்ட மனிதர்களுடன் எவ்வித சலனமும் இன்றி இதய சுத்தியுடன் உறவாடுமாறு அல்குர்ஆன் பணிக்கிறது. (உறவாடுதல் என்பது வேறு, உற்ற நண்பர்களாக, பாதுகாவலர்களாக எடுத்துக் கொள்ளுதல் என்பது வேறு)

உங்களுடன் எவ்விதத்திலும் பகைமை பாராட்டாது உங்களது மார்க்கத்தை தனி மனித, சமூக வாழ்வில் பின்பற்றி வாழ்வதற்கு இடமளித்துள்ள மக்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள். அவர்களுடனான இரத்த உறவுகள், அண்டை அயலவர் உறவுகள், குடும்ப கோத்திர உறவுகளைப் பேணுங்கள். இன்று உலகம் ஆதி சமூகக் கட்டமைப்புக்களைத் தாண்டி மிக இறுக்கமான, உறுதியான, நிறுவனமயப்படுத்தப்பட்ட, நவீன அரசியல், சமூக அமைப்பைச் சார்ந்தது. இந்த யதார்த்தங்களுக்குள் நின்று இஸ்லாத்தின் உயர்ந்த விழுமியங்களை எவ்வாறு நடைமுறைப்படுத்தலாம் என்பது பற்றி ஒரு முஸ்லிம் கற்றுக் கொள்ள வேண்டும்.

"நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள்" என்பதற்கு أَنْ تَبَرُّوهُم எனும் சொற்பிரயோகத்தை அல்குர்ஆன் கையாண்டுள்ளது. பெற்றோர்-பிள்ளைகளுக்கு இடையிலான உறவு குறித்து அல்குர்ஆன் கையாண்டுள்ள அதே சொல்லாட்சி இங்கு பிரயோகிக்கப்படுவது உணர்வுகளுடன் கூடிய உறவு நிலையையும் பரஸ்பர கட்டுப்பாடுகளையும் கொண்டுள்ளதைப் புரிந்து கொள்ள முடியும். முஸ்லிம் அல்லாத இரத்த உறவுகளிலிருந்து தேசத்தின் உச்ச நிர்வாக அலகு வரை நல்ல முறையில் உபகாரத்தன்மையுடன் நடந்து கொள்ளல் என்ற எண்ணக்கரு மிகத் தெளிவாகவும் விசாலமாகவும் புரிந்து கொள்ளப்பட வேண்டும்.

இறைமையுடன்கூடிய நிலம், அரசு, அரசாங்கம், இராணுவம் அனைத்தையும் தன்னகத்தே வைத்திருந்த சமூகத்தை நோக்கித்தான் அல்லாஹ் முஸ்லிம் அல்லாத சமூகங்களுடன் இவ்வளவு உயரிய நாகரிகத்துடன் நடந்து கொள்ளுங்கள் என்கிறான். இது இயலாமையின், பலவீனத்தின் வெளிப்பாடல்ல. இது இஸ்லாத்தின் மனித நேய, சர்வதேச உறவுகளுக்கான கோட்பாடாகும். முஸ்லிம்கள் முடியுமான அளவு இஸ்லாத்தைப் பின்பற்றுவதற்கு அவர்கள் வாழும் நிலம், அவர்களுடைய தேசமாகும். அந்த தேசத்தின் மீது அன்பு கொள்வது அதன் இயல்பைச் சார்ந்ததாகும். அதன் வரலாற்றுப் பெருமைகளையும் கௌரவத்தையும் பாதுகாப்பது அவர்களது தார்மிகக் கடமையாகும். அதன் பாதுகாப்புக்கும் அபிவிருத்திக்கும் பங்காளர்களாக இருக்க வேண்டியவர்கள் முஸ்லிம்கள்.

முஸ்லிம் சமூகம் தனது பௌதிக இருப்பை உறுதி செய்வதற்கான இராஜ தந்திர நிகழ்ச்சித் திட்டமல்ல இது. மாறாக, அது நன்மைகளை வாழவைத்து தீமைகளை இல்லாமலாக்கும் சிறப்புச் சமூகம். இஸ்லாத்தின் எல்லாப் பக்கங்களையும் சொல்லாலும் செயலாலும் சான்று பகரும் நடுநிலைத் தன்மை கொண்ட நெறியாளர்களையும் சமாதானத் தூதுவர்களையும் கொண்ட பொறுப்புச்சொல்ல வேண்டிய பதவிவழிச் சமூகம் என்ற நிலையில் ஏனைய சமூகங்களுடன் ஒட்டி உறவாட வேண்டியது அதன் மார்க்கக் கடமையாகும்.

முஸ்லிம் சமூகம் தனது பௌதிக இருப்பை உறுதி செய்வதற்கான இராஜ தந்திர நிகழ்ச்சித் திட்டமல்ல இது. மாறாக, அது நன்மைகளை வாழவைத்து தீமைகளை இல்லாமலாக்கும் சிறப்புச் சமூகம்.

ஒரு சிறுபான்மை முஸ்லிம் சமூகம் தனது பெரும்பான்மை சமூகத்தின் நிர்வாகம் செல்வாக்குச் செலுத்தும் இடங்களான பாதைகள், போக்குவரத்து ஏற்பாடுகள், வைத்தியத்துறை, சுகாதார வசதிகள், கல்வி நிறுவனங்கள், பொழுது போக்குத் தலங்கள், ஊடகத்துறை, அரசியல் இயக்கங்கள், அரசியல் கட்சிகள் முதலான அலகுகளிலிருந்து பிரிக்க முடியாத உறவு நிலையைக் கொண்டது. இந்த அனைத்துத் தளங்களிலும் உரிமைகளைப் பெறுதல் என்ற நிலைக்கு அப்பால் கடமைகளை, உபகாரத்தை, ஒத்துழைப்பை, நீதத்தை பரிமாறிக் கொள்ள வேண்டிய பொறுப்பு முஸ்லிம் சமூகத்தின் அனைத்து சாராரையும் சார்ந்ததாகும்.

முஸ்லிம் அல்லாத ஏனைய சமூகங்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்ளுதல் என்பது இஸ்லாத்தின் அடையாளங்களை ஒட்டுமொத்தமாக வெளிப்படுத்துவதாக அமைய வேண்டும். இஸ்லாம் அனைத்துத் தளங்களிலும் எவ்வித கஷ்டமும் ஒவ்வாத தன்மைகளும் அற்ற, எளிதாகப் புரிந்து கொள்ளவும் பின்பற்றவும் தக்கதொரு மார்க்கமென ஏனையோர் உணர வேண்டும்.

வார்த்தைகளும் சொற்களும் செயற்பாடுகளும் அதிருப்தியை ஏற்படுத்தாது நன்மாராயம் கூறுபவையாக காணப்பட வேண்டும். அவர்கள் உரிமைப் போராட்டங்கள் நடத்துவதை விட கடமைகளில் கருத்தாய் இருப்பவர்கள். அவர்களது உரிமைப் பட்டியலை விட கடமைப் பட்டியல் மிக நீண்டது; விசாலமானது என முஸ்லிம் அல்லாதவர்கள் கண்டுகொள்ள வேண்டும். அவர்கள் கேட்பவர்களல்ல; மாறாக, கொடுப்பவர்கள். காட்டிக் கொடுக்கும் கயவர்களாக, கூட இருந்து குழிபறிக்கும் துரோகிகளாக அவர்கள் இருப்பதில்லை. அவர்கள் நீதியின்பால் நின்று அநீதத்தை இல்லாமலாக்குபவர்கள்; வெளிச்சத்துக்குள்ளிருந்து இருள்களை அகற்றுபவர்கள்; உண்டு, கொழுத்து, வானளாவ வீடுகள் அமைத்து வாழாது ஒடுக்கப்பட்ட மக்களுக்காகவும் உழைக்கும் வர்க்கங்களுக்காகவும் போராடக்கூடியவர்கள் என முஸ்லிம் அல்லாதவர்கள் இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் புரிந்து கொள்ள வழியமைப்பதே "அவர்களோடு நல்ல முறையில் நடந்து நீதம் பேணுங்கள்" என்பதன் எதிர்பார்ப்பாகும்.

# இகாமதுத் தீன் பணியின் பங்காளர்கள் யார்?

அஷ்ஷெய்க் எச்.எம். மின்ஹாஜ் (இஸ்லாஹி), விரிவுரையாளர், இஸ்லாஹிய்யா பெண்கள் அரபுக் கல்லூரி, புத்தளம்

அபூ ஹுரைரா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ''இறை தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுடன் நாங்கள் கைபர் யுத்தத்தில் கலந்து கொண்டிருந்தோம். அப்போது இஸ்லாத்தை ஏற்றிருப்பதாக பறைசாற்றிக் கொண்டிருந்த ஒரு மனிதரும் நபிகளாருடன் இருந்தார். அவர் நரகவாதிகளுள் ஒருவர் என நபியவர்கள் குறிப்பிட்டார்கள். யுத்தம் நடைபெற்ற போது அந்நபர் கடுமையாகப் போராடி படுகாயமுற்றார். அப்போது நபித் தோழர்களில் ஒருவர் "அல்லாஹ்வின் தூதரே! நரகவாசிகளுள் ஒருவர் என்று நீங்கள் குறிப்பிட்ட அந்த மனிதரைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன? அவர் அல்லாஹ்வின் பாதையில் போராடி படுகாயமுற்றுள்ளாரே!" என வினவினார். மீண்டும் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் "நிச்சயமாக அவர் நரகவாதிகளுள் ஒருவர்'' எனக் கூறினார்கள்.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் கருத்து சில முஸ்லிம்களுக்கு ஐயத்தை தோற்றுவித்தது. இவ்வாறான நிலைமையில் அந்த மனிதர் காயத்தினால் ஏற்பட்ட கடுமையான வேதனையை உணரத் தொடங்கினார். பின்னர் அம்புக் கூட்டில் கையை விட்டு ஓர் அம்பை எடுத்து அதன் மூலம் தன்னைத் தானே குத்தி தற்கொலை செய்துகொண்டார். உடனே முஸ்லிம்களில் சிலர் இறை தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களை நோக்கி விரைந்து சென்று "அல்லாஹ்வின் தூதரே! நீங்கள் (அம்மனிதரைப் பற்றி சொன்ன) உங்கள் செய்தியை அல்லாஹ் உண்மைப்படுத்தி விட்டான். அந்த மனிதர் தன்னைத்தானே அம்பினால் குத்தி தற்கொலை செய்து கொண்டார்'' என்று கூறினர். அப்போது இறை தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் "பிலாலே! எழுந்து நின்று, ஓர் இறை விசுவாசியைத் தவிர வேறு யாரும் சுவனம் செல்ல மாட்டார்கள் என்றும் நிச்சயமாக அல்லாஹ் பாவியான மனிதரைக் கொண்டு இந்த மார்க்கத்தை பலப்படுத்துவான் என்றும் பொது அறிவிப்பு விடுப்பீராக!" எனக் கட்டளையிட்டார்கள். (ஸஹீஹுல் புகாரி)

இந்த ஹதீஸ் ஸஹீஹுல் புகாரியில் அல்கத்ர் (இறை நிர்ணயம்) என்ற பிரதான தலைப்பின் கீழ் "இறுதி நிலைமையைக் கருத்திற் கொண்டு ஒருவரது செயற்பாடுகள் (நல்லதா அல்லது தீயதா எனத்) தீர்மானிக்கப்படுதல்'' என்ற உப தலைப்பில் பதிவாகியுள்ளது. இந்த உப தலைப்பில் இடம்பெற்றுள்ள மற்றுமொரு ஹதீஸில் படுகாயமுற்ற அந்த மனிதர் வாளின் பிடியை நிலத்தில் நாட்டி அதன் கூர்மையான பகுதியில் நெஞ்சை அழுத்தி தற்கொலை செய்துகொண்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

ஈமானின் இறுதிக் கடமையான அல்கழா வல் கத்ர் (அல்லாஹ் திட்டமிட்டுத் தீர்மானித்தவை) பற்றிய விளக்கம் இந்த ஹதீஸில் பொதிந்துள்ளது. அல்லாஹுத் தஆலா பிரபஞ்சத்தையும் மனித வாழ்வையும் திட்டமிட்டு, தீர்மானித்து படைத்தான். தனது திட்டத்தையும் தீர்மானத்தையும் அவன் எழுத்துருவில் கொண்டு வந்தான். நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்: "அல்லாஹ் வானங்களையும் பூமியையும் படைப்பதற்கு ஐம்பதாயிரம் வருடங்களுக்கு முன்னர் படைப்புக்கள் பற்றிய தீர்மானத்தை எழுதி விட்டான். அவனது சிம்மாசனம் சமுத்திரத்தின் மீது அமைந்திருந்தது.''

(முஸ்லிம்)

அல்லாஹ்வுக்கென்று அழகிய திருநாமங்களும் உயர்ந்த பண்புகளும் இருக்கின்றன. அல்லாஹ் இவற்றின் பின்புலத்திலேயே மனித வாழ்வு பற்றிய தீர்மானத்திற்கு வந்தான். இவ்வுலகில் நிகழ்கின்ற ஒவ்வொன்றும் தற்செயல் நிகழ்வல்ல. ஒவ்வொன்றின் பின்னாலும் மிகவும் துல்லியமான, நுட்பமான, திடமான திட்டமிடல் மறைந்திருக்கிறது. 'குன்' (ஆகுக) என்ற வார்த்தையால் கண் இமைக்கும் நேரத்தில் படைப்பதற்குரிய பேராற்றல் மிக்கவனாகிய அல்லாஹ் பெரும்பாலும் அவ்வாறான நியதியைப் பிரயோகிப்பதில்லை. இவ்வுலகம்

> ஓர் இஸ்லாமிய அழைப்பாளன், ஒரு போராளி அல்லது சமூகப் பணியாளன் தனது மறுமை ஈடேற்றம் பற்றிய எதுவித சிந்தனையும் இன்றி தனது பணிகளை முன்னெடுப்பது ஆபத்தானதும் அர்த்தமற்றதுமாகும். நற்பணிகளை முன்னெடுத்து நரகம் செல்வது மடத்தனமான தீர்மானத்தின் விபரீத விளைவாகும்.

காரண காரிய நியதிக்கமைய இயங்கிக் கொண்டிருக்கிறது. பிரபஞ்சம் நியதிகளின் அடிப்படையில் அல்லாஹ்வி னால் ஆளப்படுகிறது.

இவ்வகையில் இறை பாதையில் போராடிய மனிதன் நரகவாதி என்ற அல்லாஹ்வின் தீர்மானத்தின் பின்னணியில் அல்லாஹ்வின் ஆழமான, வியாபகமான அறிவும் உயர்ந்த நோக்கமும் நீதமும் மறைந்திருக்கின்றன. குறை அறிவுள்ள மனிதன் அல்லாஹ்வின் பண்புகளை சரியாக மட்டிட முடியாது. அவனது வியாபகமான அறிவை துல்லியமாக மதிப்பிடவும் முடியாது.

யுத்த களத்தில் ஒரு முஸ்லிம் போராளியாக அந்த மனிதர் தன்னை இனங்காட்டிக் கொண்டார். ஆனால், அவரது உள்ளத்தின் யதார்த்த நிலையையும் அவரது தரத்தையும் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் அறிந் திருக்கவில்லை. அல்லாஹுத் தஆலா தனது தீர்மானத்தை வஹி மூலம் அறிவித்திருக்கா விட்டால், நபி (ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூட அறிந்திருக்க மாட்டார்கள். வஹியின் ஒளியிலேயே அந்த மனிதர் பற்றிய தீர்மானத்தை நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) வெளியிட்டார்கள். மறைவானவற்றைப் பற்றிய முழுமையான அறிவு அல்லாஹ்வுக்கே சொந்தம்.

"அல்லாஹ்வின் கருவூலங்கள் என்னிடம் இருக்கின்றன. மறைவானதை நான் அறிவேன் என்று நான் உங்களிடம் கூற மாட்டேன். எனக்கு வஹியாக அறிவிக்கப்படுவதைத் தவிர, (வேறெதனையும்) நான் பின்பற்றுவதில்லை என்று நபியே நீர் கூறுவீராக!" (அல்அன்ஆம்: 50)

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் வஹியின் தீர்மானத்தை முஸ்லிம்களுக்கு அறிவிக்கின் றார்கள். அவர்களது எதிர்வுகூறல் உண்மையானது. ஆனாலும், களத்தில் நின்று படுபயங்கரமாக போராடிய அம்மனிதரின் சாகசங்களும் சாதனைகளும் ஸஹாபாக்களை பிரமிக்க வைக்கின்றன. அண்ணலாரின் கூற்று தொடர்பில் ஐயப்பாடும் தோன்றி மறைகின்றது. நபிகளார் எழுந்த மானதாக தீர்மானத்திற்கு வரமாட்டார்கள். வஹியின் வெளிச்சத்திலேயே முடிவெடுப்பார்கள் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை நபித் தோழர்களுக்கு இருந்தது. அண்ணலாரின் கருத்து எவ்வாறு உண்மைப்படுத்தப்பட போகின்றது என்பதைக் கண்டறிய ஒரு சிலர் முனைந்தனர். அவர்கள் அந்த மனிதரைப் பின்தொடர்ந்தனர். காயங்க ளினால் ஏற்பட்ட வேதனையின் காரணமாக அவர் தற்கொலை செய்துகொண்டதைக் கண்டனர். இந்த நிகழ்வினால் ஸஹாபாப் பெருமக்களின் உள்ளங்களில் ஈமான் நிரம்பி வழிந்தது. இதன் விளைவாகவே "நீங்கள் அல்லாஹ்வின் தூதரேதான்! என நான் சான்று பகர்கின்றேன்" என்று ஒரு நபித் தோழர் உணர்ச்சிபூர்வமாக கூறினார்.

ஒவ்வொரு மனிதனுக்கும் அவனது வாழ்வின் இறுதிச் சுற்று மிகவும் முக்கியமானதாகும். இறுதி மூச்சை விடுகின்ற தருணத்தில் அவனது உள்ளத்தின் நிலையைக் கருத்திற் கொண்டு அல்லாஹ் அம்மனிதன் சுவனவாதியா அல்லது நரகவாதியா எனத் தீர்மானிக்கின்றான். ஓர் ஓட்ட வீரனைப் பொறுத்தவரை அவனது இறுதிச் சுற்றே அவனது வெற்றி, தோல்வியைத் தீர்மானிக்கிறது. ஆனாலும், ஓட்டப் போட்டியில் ஆரம்பச் சுற்றில் அவன் தனது எட்டுக்களை கவனமாக எடுத்து வைத்து வேகத்தை படிமுறைப் போக்கில் அதிகரிக்கின்றபோது மட்டுமே இறுதிச் சுற்றில் வெற்றிக் கம்பத்தை அவன் எட்டிப் பிடிக்க முடியும். இவ்வாறே வாழ்க்கை எனும் பந்தயத் திடலில் ஆரம்பக் கட்டத்தில் சறுக்கி வீழ்ந்தவர்கள் இறுதிக் கட்டத்தில் எழுந்துநின்று இலக்கை அடைவது சிரமமானது. யுத்த களத்தில் தீனை நிலைநாட்டுவதற்காக போராடியவர் இறுதிச் சுற்றில் சறுக்கி விடுகின்றார். அப்படியானால் அவரது வாழ்வின் ஆரம்பச் சுற்றில் உள்ளத்தைப் பரிபக்குவப்படுத்த தவறியுள்ளார். அவர் ஏற்றுக் கொண்டதாக கூறிய இஸ்லாம் அவரது உள்ளத்தில் ஆழப் பதிந்திருக்கவில்லை. அது நாவில் வாழும் வார்த் தையாகவே இருந்துள்ளது.

ஒவ்வொரு முஸ்லிமும் தனது இறுதி நிலைமை குறித்த சிந்தனையுடனும் விழிப்புணர்வுடனும் வாழ வேண்டு மென்று இஸ்லாம் பணிக்கிறது. ஏனெனில், ஒவ்வோர் அடியானின் இறுதி நிலைமை இவ்வுலகில் எவ்வாறு அமைந்து விட்டதோ அதற்கேற்ப மறுமை நாளில் அவ் வடியான் எழுப்பப்படுவதாக இறைதூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

"ஒவ்வோர் அடியானும் எந்த நிலையில் மரணித்தானோ, அந்த நிலையில் எழுப்பப்படுவான்." (முஸ்லிம்)

வஹி இறக்கியருளப்பட்டுக் கொண்டிருந்த காலப்பிரி வில் இறை பாதையில் போராடிய ஒரு மனிதரின் நிலையே பரிதாபகரமானதாக அமைந்ததென்றால் நமது நிலை என்ன? நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூட தனது இறுதி நிலைமை நற்செயல் நிறைந்ததாக அமைய வேண்டுமென்று அடிக்கடி பிரார்த்தனை செய்த வாறு இருந்தார்கள்.

"யா அல்லாஹ்! எங்களது ஆயுட்காலத்தின் இறுதிப் பகுதியை சிறந்ததாகவும் எங்களது இறுதிச் செயற்பாட்டை சிறந்ததாகவும் ஆக்கிவிடுவாயாக!" என நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் பிரார்த்திப்பார்கள்.

நமது வாழ்வின் மணித்துளிகள் கரைந்து கொண்டிருக் கின்றன. பரபரப்பான, ஆரவாரமான உலகத்தின் வலுவான பிடிக்குள் நாம் சிக்குண்டுள்ளோம். நமது மறுமை வாழ்வு அதற்கு முன்னரான மண்ணறை வாழ்வு, அதனைத் துவக்கி வைக்கின்ற மரணம், மரணத் தறுவாயில் எமது உள்ளங்க ளின் நிலைமை குறித்தெல்லாம் அலட்டிக் கொள்ளாமல் மார்க்கப் பணியும் சமூகப் பணியும் நடைபெறுகிற

தென்றால் அதனை இஸ்லாம் வரவேற்கவில்லை. மெழுகுவர்த்தியாக உருகி தன்னை அழித்து, பிறருக்கு ஒளி கொடுத்தல் என்ற வாழ்க்கைத் தத்துவம் இஸ்லாத்தின் பார்வையில் தவறான கண்ணோட்டமாகும். ஓர் இஸ்லாமிய அழைப்பாளன், ஒரு போராளி அல்லது சமூகப் பணியாளன் தனது மறுமை ஈடேற்றம் பற்றிய எதுவித சிந்தனையும் இன்றி தனது பணிகளை முன்னெடுப்பது ஆபத்தானதும் அர்த்தமற்றதுமாகும். நற்பணிகளை முன்னெடுத்து நரகம் செல்வது மடத்தனமான தீர்மானத்தின் விபரீத விளைவாகும்.

நாம் விளக்கத்திற்கு எடுத்துக் கொண்ட ஹதீஸ் மற்றுமொரு பேருண்மையை உணர்த்துகிறது. அதாவது, தீனை நிலைநாட்டும் பணியின் பங்காளிகள் குறித்த விளக்கம் இந்த ஹதீஸில் முன்வைக்கப்படுகிறது. அல்லாஹுத் தஆலா தனது தீனுல் இஸ்லாத்தை இந்தப் புவி மேற்பரப்பில் வாழவைப்பதற்காக ஒரு பாவியின் வகிபாகத்தைக் கூட ஏற்றுக் கொள்கின்றான். ஒரு மனிதன் தனது அறிவாற்றலை ஏனைய திறமைகளை தீனுல் இஸ்லாம் என்ற விருட்ஷம் வளர்ந்தோங்க உரப் பசளையாக இருக்கின்றான். ஆனால், அவனோ பாவியாக இருக்கின்றான் என்றால் அவன் அல்லாஹ்விடம் மறுமையில் பதில் சொல்ல வேண்டிய தனிப்பட்ட விவகாரம் அது. அதற்காக அவனது பங்களிப்பை இஸ்லாம் மறுத்துவிடுவதில்லை. எனவேதான், “அல்லாஹ் இந்த மார்க்கத்தை பாவியான மனிதனைக் கொண்டு பலப்படுத்துகிறான்” என நபியவர்கள் இந்த ஹதீஸின் இறுதிப் பகுதியில் குறிப்பிடுகிறார்கள்.

இறை தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தீனை நிலைநாட்டும் பணியில் பலவீனமான ஈமான் உள்ள மனிதர்களினதும் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளாத முஷ்ரிக்கான மனிதர்களினதும் பங்களிப்பை முழுமையாக ஏற்று அங்கீகரித்ததை ஸீராவின் ஒளியில் நாம் சரியாக மதிப்பீடு செய்ய முடியும். ஹிஜ்ரத் பயணத்தின்போது வழிகாட்டியாக அப்துல்லாஹ் இப்னு உரைகத் என்ற முஷ்ரிக்கான மனிதரை நபியவர்கள் கூலிக்கு அமர்த்தினார்கள். தனது ஆத்ம நண்பர் அபூபக்ர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களின் பணியாளரான ஆமிர் இப்னு புஹைராவையும் இப்பயணத்தில் நபியவர்கள் கூடவே அழைத்துச் சென்றார்கள். உஹுத் யுத்த களத்தை நோக்கி சுமார் 300 முனாபிகீன்கள் சென்று நபியவர்களை கையறு நிலையில் விட்டு விட்டு திரும்பி வந்தனர். இவர்கள் முனாபிக்கள் என்று இறை தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அறிந்திருந்தும் அவர்கள் அனைவரும் களம் நோக்கிச் செல்ல நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் அனுமதித்தார்கள். கைபர் யுத்தத்தில் நரகவாதி என நபியவர்களால் கூறப்பட்ட அந்த மனிதர் தொடர்ந்தும் போராட அவர்கள் அனுமதி வழங்கினார்கள். அவரை களத்தை விட்டும் அப்புறப்படுத்த அண்ணலார் நபித்தோழர்களுக்கு கட்டளையிடவில்லை. உலகத்தில் இஸ்லாம் வாழ்வதற்கு ஈமானில் சிகரம் தொட்ட மனிதர்களை மட்டும் அணி திரட்டாமல் அனைவரினதும் பங்களிப்பை இறை தூதர் வேண்டி நின்றார்கள். இவ்விடயத்தில் நபியவர்கள் இறுக்கமான போக்கை கையாளவில்லை. நெகிழும் தன்மையோடு நடந்து கொண்டார்கள்.

ஹிஜ்ரி 6 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பணியைப் பரவலாக்கும் தீர்க்கமான இலக்கோடு நபியவர்கள் போராட்டங்களையும் சமாதான நடவடிக்கைகளையும் முன்னெடுத்தார்கள். பணி பரவலாக வேண்டுமென்றால் நபித்தோழர்களது தியாகங்கள் மட்டுமல்ல பலதரப்பட்டவர்களின் வகிபாகமும் தவிர்க்க முடியாத ஒன்று என்பதை பேரியக்கத்தின் பெருந் தலைவர் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் நன்றாக உணர்ந்திருந்தார்கள். கைபர் யுத்தம் ஹிஜ்ரி 7இல் நடைபெற்றது. இக்காலப் பிரிவில் நபியவர்கள் தங்களது பணியை அரபு தீபகற்பத் திலிருந்து மெல்ல மெல்ல இதர பிரதேசங்களுக்கு நகர்த்துவதற்கு அயராது பாடுபட்டு யுத்தமும் செய்தார்கள். இஸ்லாம் மேலோங்குவதற்காக புதிதாக இஸ்லாத்தில் இணைந்துகொண்ட மனிதர்களையும் அணியில் இணைத்துக் கொண்டார்கள். அத்தகைய மனிதர்களின் உள்ளங்க ளிலுள்ள கொள்கை, கோட்பாட்டின் தரத்தை பரிசீலித்துப் பார்க்கின்ற அர்த்தமற்ற காரியங்களில் அண்ணலார் ஈடுபடவில்லை. இதேநேரத்தில் தனது அணியைப் பலப்படுத்தும் பணியிலும் நபியவர்கள் ஈடுபட்டார்கள். அவை பலவீனப்படாமல் இருப்பதற்காக தலைமைத்துவக் கடிவாளத்தை தமது கரத்தில் வைத்துக் கொண்டார்கள். தனக்கு ஆலோசனை வழங்குவதற்காக நன்கு பயிற்றுவிக் கப்பட்ட மூத்த ஸஹாபாக்களை தன் அருகில் வைத்துக் கொண்டார்கள். தனது மரணத்தின் பின்னர் இப்பணியை முன்னெடுப்பதற்காக அடுத்த பரம்பரையையும் நபிகளார் தயார்படுத்தி விட்டுச் சென்றார்கள்.

தீனை நிலைநாட்டும் பணி தொடர்பாக நபியவர்களின்

**தவறிழைக்கும் பங்காளிகளை நமது நாகரிகமான, பண்பாடான அணுகு முறைகளினால் முன்னணி வீரர்களாக மாற்றுவதே எமது கடமை! அவர்களது பங்களிப்புக்கள் கைதவறிப் போகாமல் பார்த்துக் கொள்வதே எமது தார்மிகப் பொறுப்பு! அந்தப் பங்களிப்புக்கள் இழக்கப்படும்போது தீன் நிலைநாட்டப்படுவது தேக்கநிலை காணும். இதற்காக அல்லாஹ் மறுமை நாளில் எம்மைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தி விசாரிப்பானல்லவா?**

> தீனை நிலைநாட்டும் பணி தொடர்பாக நபியவர்களின் அகல் விரிவான சிந்தனையும் தீர்க்கதரிசனமான பார்வையும் அவர்கள் பத்து லட்சம் சதுர மைல் பரப்பளவு நிலத்தின் ஆட்சியாளராக இருந்து விட்டு இறுதி மூச்சை விடுவதற்கு வழிவகுத்தது. அழைப்பின் நிலத்தில் நின்றுழைக்கின்ற இஸ்லாமிய தஃவா அமைப்புக்கள் இறை தூதரின் விரிவான சிந்தனையை முதலில் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

அகல் விரிவான சிந்தனையும் தீர்க்கதரிசனமான பார்வையும் அவர்கள் பத்து லட்சம் சதுர மைல் பரப்பளவு நிலத்தின் ஆட்சியாளராக இருந்து விட்டு இறுதி மூச்சை விடுவதற்கு வழிவகுத்தது. அழைப்பின் நிலத்தில் நின்றுழைக்கின்ற இஸ்லாமிய தஃவா அமைப்புக்கள் இறை தூதரின் விரிவான சிந்தனையை முதலில் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். நமது இறுக்கமான சிந்தனைப் போக்குகளாலும் நிகழ்ச்சி நிரல்களினாலும் தீனை வாழ்வாங்கு வாழச் செய்ய முடியாது. இறுக்கமானதும் தங்களுக்கே உரியதுமான மாறாத விதிகளினால் மாற்றத்தை ஏற்படுத்த முடியாது. இத்தகைய குழுக்களினால் தங்களின் நிகழ்ச்சிகளின் விகிதாசாரத்தை அதிகரிக்க முடியும்; சில சமூகப் பணிகளை மேற்கொள்ள முடியும். ஆனால், தீன் நாம் கிழித்த கோடுகளுக்குள் வாழ்ந்து கொண்டிருக்கும். ஏனைய மனிதர்களின் உள்ளங்களை ஆளவும் முடியாது; நிலத்தை ஆளவும் முடியாது.

இஸ்லாமிய இயக்கங்கள் வகுத்துக் கொண்டுள்ள யாப்பு விதிகள் நெகிழும் தன்மையை இழக்கும்போது மார்க்கத்தை நிலைநாட்டும் பணிக்காக உழைக்கின்ற மனிதர்களின் உள்வருகை நின்றுவிடும். இந்த மார்க்கம் முற்றும் துறந்த முனிவர்களால், பக்த கோடிகளால் மேலோங்குவதில்லை. மாறாக, துறைசார் மனிதர்கள் இப்பணிக்கு தேவைப்படுவார்கள். அவர்களை உள்வாங்குகின்ற அளவுக்கு இயக்கத்தின் உள்ளமும் வாசலும் திறந்திருக்க வேண்டும். மூத்த அறிஞர்களின் வருகையை பெருமனதோடு வரவேற்கும் பண்பாடு தஃவா அமைப்புக்களுக்கு இருப்பதைப் போல மூட்டை சுமக்கும் கூலித் தொழிலாளியின் பங்களிப்பை உளப்பூர்வமாக ஏற்றுக் கொள்ளும் விழுமியமும் இருக்க வேண்டும். அரசியல் கட்சிகள், சமூக நல அமைப்புக்கள், தொழிற் சங்கங்கள் ஏனைய சமூக நிறுவனங்கள் அனைத்தையும் அரவணைத்துச் செல்லும் தாராள மனப்பான்மை தஃவா அமைப்புக்களின் உயிரோட்டமாக இருக்க வேண்டும். தத்தமது இயக்கங்களில் நீண்ட காலமாக பயிற்றுவிக்கப்பட்ட ஊழியர்களிடம் உள்ள உன்னத பண்பியல்புகளை இயக்கங்களுக்கு அப்பால் உள்ளவர்களிடம் எதிர்பார்ப்பது நபிவழியல்ல. அவர்களது பங்களிப்பை மிகவும் சரியாக தீனுல் இஸ்லாத்தை நிலைநாட்டுவதற்காக பெற்றுக் கொள்வதே இறை தூதரின் சாணக்கியமான அணுகுமுறையாகும். அபூபக்ர் (ரழியல்லாஹு அன்ஹு), உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களிடம் இருந்த ஈமானியப் பெருமானத்தை ஹிஜ்ரி 8ஆம் ஆண்டுக்குப் பிறகு இஸ்லாத் தில் இணைந்தவர்களிடம் நபியவர்கள் எதிர்பார்த்திருந்தால் இந்த தீன் உலகை ஆட்சி செய்திருக்க முடியாது.

எனவே, எமது பணி பரவலாக வேண்டுமென்றால் எமது நிகழ்ச்சி நிரல் நெகிழும் தன்மைமிக்கதாக இருக்க வேண்டும். இயக்கங்களுக்கு வெளியே இருந்து இந்தப் பணிக்காக இணைந்து கொள்வோரின் பலவீனங்களும் சறுக்கல்களும் அழைப்பாளர்களினால் பெரிதுபடுத்தப்பட்டு விமர்சிக்கப்படுமேயானால் அத்தகைய மனிதர்களின் பங்களிப்பை நாம் இழக்க நேரிடும். தற்கொலை செய்வார் என்று ஏலவே நபிகளார் அறிந்து வைத்திருந்தும் அவரை நபியவர்கள் களத்தை விட்டும் துரத்தவில்லையே! தவறிழைக்கும் பங்காளிகளை நமது நாகரிகமான, பண்பாடான அணுகு முறைகளினால் முன்னணி வீரர்களாக மாற்றுவதே எமது கடமை! அவர்களது பங்களிப்புக்கள் கைதவறிப் போகாமல் பார்த்துக் கொள்வதே எமது தார்மிகப் பொறுப்பு! அந்தப் பங்களிப்புக்கள் இழக்கப்படும்போது தீன் நிலைநாட்டப்படுவது தேக்கநிலை காணும். இதற்காக அல்லாஹ் மறுமை நாளில் எம்மைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தி விசாரிப்பானல்லவா?

எனவே, பரவலாகும் பணிக்கு வலுச்சேர்க்க பங்காளிகளை சகல மட்டங்களிலும் இனங்கண்டு அவர்களது உயர்தரமான பங்களிப்புக்களைப் பெற்றுக் கொள்ள முயற்சிப்போமாக!



# உண்மையாளர்களுடன் இணைந்து விடுங்கள்



இஸ்ட்.ஏ.எம். பவாஸ்
சர்வதேச இஸ்லாமிய பல்கலைக்கழகம், மலேசியா

> "நிச்சயமாக உண்மை பேசுதல் நல்லது செய்வதை ஏற்படுத்தும். நல்லது செய்வது சுவனத்தைப் பெற்றுத் தரும். நிச்சயமாக உண்மையைப் பேசுபவர் உண்மையாளர் என அல்லாஹ்விடம் பதிவு செய்யப்படுவார். நிச்சயமாகப் பொய் பேசுதல் தவறுகள் செய்வதை ஏற்படுத்தும். தவறுகள் நரகைப் பெற்றுத் தரும். நிச்சயமாக ஒருவர் பொய் பேசினால் அல்லாஹ்விடம் அவர் பொய்யர் எனப் பதிவு செய்யப்படுவார்."

நாம் ஏற்று, நம்பியுள்ள இறுதித் தூது உண்மையானதாகும். அந்தத் தூதை தாங்கி வந்த தூதர் 'அஸ்ஸாதிக்' (உண்மையாளர்) என முஸ்லிமல்லாதவர்களாலேயே அழைக்கப்பட்டவர். அன்னாரது தூதை முதன் முதலில் நம்பி இஸ்லாத்தில் நுழைந்த அபூபக்ர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் 'அஸ்ஸித்தீக்' எனப் புகழ் பெற்றார். நபிகளாரின் மிஃராஜ் நிகழ்வை மக்கத்துக் குறைஷிகள் சந்தேகக் கண்கொண்டு பார்த்தபோது அபூபக்ர்(ரழியல்லாஹு அன்ஹு) "அவர் கூறினால் அது உண்மையானதாகத்தான் இருக்கும்" என்று மெய்ப்படுத்தியபோதே அவருக்கு இப்பெயர் சூட்டப்பட்டது. (ஸீரத் இப்னு ஹிஷாம்)

### உண்மை என்கிற உத்தமம்

உண்மை பேசுவதையும் உண்மையின் அடிப்படையில் ஒருவர் தன் வாழ்வை அமைத்துக் கொள்வதையும் பற்றி நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் சிலாகித்துப் பேசியுள்ளார்கள்.

"நிச்சயமாக உண்மை பேசுதல் நல்லது செய்வதை ஏற்படுத்தும். நல்லது செய்வது சுவனத்தைப் பெற்றுத் தரும். நிச்சயமாக உண்மையைப் பேசுபவர் உண்மையாளர் என அல்லாஹ்விடம் பதிவு செய்யப்படுவார். நிச்சயமாகப் பொய் பேசுதல் தவறுகள் செய்வதை ஏற்படுத்தும். தவறுகள் நரகைப் பெற்றுத் தரும். நிச்சயமாக ஒருவர் பொய் பேசினால் அல்லாஹ்விடம் அவர் பொய்யர் எனப் பதிவு செய்யப்படுவார்." (அல்புகாரி, முஸ்லிம்)

"உமக்கு சந்தேகம் ஏற்படுத்துவதை விட்டு விட்டு உமக்கு சந்தேகம் ஏற்படாதவையின் பக்கம் செல்வீராக. நிச்சயமாக உண்மை அமைதி அளிக்கும். பொய் சந்தேகத்தை வளர்க்கும்" என நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறியதை நான் மனனம் செய்துள்ளேன் என்று அபூ முஹம்மத் ஹஸன் இப்னு அலி (ரழியல்லாஹு அன்ஹு) அறிவிக்கிறார்கள். (அத்திர்மிதி)

"தான் போரில் மரணிப்பதை உண்மையாக அல்லாஹ்விடம் ஒருவர் கேட்டால் அவர் தன் படுக்கையில் மரணித்தாலும் உயிர்த் தியாகம் செய்தோரின் அந்தஸ்தை அவருக்கு அல்லாஹ் வழங்குவான்." (முஸ்லிம்)

### உண்மை உரைத்த உன்னத தோழர்கள்

தபூக் போரில் தக்க காரணமின்றி கலந்து கொள்ளத் தவறிய மூன்று அன்ஸாரித் தோழர்கள் முனாபிக்குகளைப் போன்று சாக்குப் போக்குகள் சொல்லித் தப்பிக்க விரும்பவில்லை. அவர்களுள் ஒருவரான கஃப் இப்னு மாலிக் (ரழியல்லாஹு அன்ஹு) அறிவிக்கும் அந்நிகழ்வை இமாம் அஹ்மத் பதிவு செய்துள்ளார்: தபூக் போரில் நான் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுடன் கலந்து கொள்ளத் தவறியபோது எனக்கிருந்த உடல் பலமும் பொருளாதார வசதியும் என் வாழ்வில் வேறெப்போதும் இருந்ததில்லை. அல்லாஹ்வின் மீது ஆணையாக! அதற்கு முன் ஒரே நேரத்தில் இரண்டு ஊர்தி ஒட்டகங்கள் ஒருபோதும் என்னிடம் இருந்ததில்லை ஆனால், அந்தப் போரின்போது இரண்டு ஒட்டகங்களை நான் வைத்திருந்தேன்.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கடுமையான கோடை காலத்தில் அந்தப் போருக்குப் புறப்பட இருந்தார்கள். தொலைதூரப் பயணம் மேற்கொள்ள வேண்டியிருக்கும் என்றும் வனப் பகுதிகளைக் கடந்து செல்ல வேண்டியிருக்கும் என்றும் அதிக எண்ணிக்கையிலான எதிரிகளை சந்திக்க வேண்டியிருக்கும் என்றும் நபிகளார் எதிர்பார்த்தார்கள். போருக்குச் செல்லாமல் தலைமறைவாக இருந்து விடலாம் என்று கருதும் ஒருவரைப் பற்றி அல்லாஹ் அறிவித்தாலே தவிர நபியவர்களுக்கு அடையாளம் தெரிவது அரிது என்ற நிலையே அப்போது இருந்தது. அந்த அளவுக்கு படையினரின் எண்ணிக்கை அதிகரித்திருந்தது.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களும் முஸ்லிம்களும் ஒரு காலை வேளையில் தபூக் நோக்கி புறப்பட்டுச் சென்றார்கள். அவர்கள் சென்ற பிறகு மறுநாள் காலையில் பயண ஏற்பாடுகளைச் செய்வதற்காக வெளியே சென்றேன். ஆனால், எதையும் முடிக்காமல் திரும்பி விட்டேன். எனது நிலை இன்று புறப்படலாம், நாளை புறப்படலாம் என்று இழுத்துக் கொண்டே இருந்தது. இறுதியில் முஸ்லிம்கள் விரைவாகச் சென்று விட்டனர். எனக்கு அந்தப் போர் கைநழுவி விட்டது. நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் போருக்குச் சென்ற பின்னர் நான் உள்ளூரில் மக்களிடையே வலம்வரும்போது எனக்குப் பெரும் கவலை ஏற்பட்டது. ஏனெனில், நயவஞ்சகர்கள் என சந்தேகிக்கப்பட்டவர்களையும் "அல்லாஹ்வால் சலுகை வழங்கப்பட்ட முதியோர், பெண்கள் ஆகியோரையும் தவிர வேறெவரையும் நான் மதீனாவில் காணவில்லை. நபிகளார் தபூக்கிலிருந்து திரும்பி வந்து கொண்டிருக்கிறார்கள் என்ற செய்தி எட்டியபோது அவர்களிடம் கூறுவதற்கு பொய்யான காரணங்களை நான் யோசிக்கத் தொடங்கினேன்.

போரில் கலந்து கொள்ளாமல் பின்வாங்கி விட்டவர்களில் எண்பதுக்கும் அதிகமானவர்கள் நபியவர்களிடம் வந்து, சத்தியம் செய்து சாக்குப் போக்குக் கூறலானார்கள். அவர்கள் கூறிய காரணங்களை ஏற்றுக் கொண்டு அவர்களுக்காகப் பாவமன்னிப்புக் கோரினார்கள். இறுதியாக என்னிடம் "போரில் கலந்து கொள்ளாமல் நீர் ஏன் பின்வாங்கினீர்? நீர் போருக்காக ஒட்டகம் வாங்கி வைத்திருந்தீர் அல்லவா?" என்று கேட்டார்கள். "அல்லாஹ்வின் தூதரே! அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் உங்களிடம் ஏதாவது பொய்யான காரணத்தைச் சொல்லி இன்று உங்களைத் திருப்திப்படுத்தி விட்டாலும் அல்லாஹ் வெகு விரைவில் உண்மை நிலைவரத்தை உங்களுக்குத் தெரியப்படுத்தி என் மீது உங்களைக் கடுங்கோபம் கொள்ளச் செய்து விடுவான் என்பதை நான் அறிந்துள்ளேன். அதே நேரத்தில் நான் உங்களிடம் உண்மையைச் சொன்னால் தற்சமயம் அதுபற்றி என் மீது நீங்கள் வருத்தப்படுவீர்கள். ஆயினும் இவ்விஷயத்தில் நான் அல்லாஹ்விடமே இறுதி முடிவை எதிர்பார்க்கிறேன். நான் போரில் கலந்து கொள்ளாததற்கு என்னிடம் எந்தக் காரணமும் இல்லை" என்று சொன்னேன். அப்போது நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) "இதோ! இவர் உண்மையே சொன்னார்" என்று கூறிவிட்டு, என்னை நோக்கி "சரி எழுந்து செல்லும். உமது விஷயத்தில் அல்லாஹ்வே தீர்ப்பளிப்பான்" என்றார்கள். உடனே நான் எழுந்து சென்று விட்டேன்.

> "அல்லாஹ்வின் தூதரே! அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் உங்களிடம் ஏதாவது பொய்யான காரணத்தைச் சொல்லி இன்று உங்களைத் திருப்திப்படுத்தி விட்டாலும் அல்லாஹ் வெகு விரைவில் உண்மை நிலைவரத்தை உங்களுக்குத் தெரியப்படுத்தி என் மீது உங்களைக் கடுங்கோபம் கொள்ளச் செய்து விடுவான் என்பதை நான் அறிந்துள்ளேன். அதே நேரத்தில் நான் உங்களிடம் உண்மையைச் சொன்னால் தற்சமயம் அதுபற்றி என் மீது நீங்கள் வருத்தப்படுவீர்கள். ஆயினும் இவ்விஷயத்தில் நான் அல்லாஹ்விடமே இறுதி முடிவை எதிர்பார்க்கிறேன். நான் போரில் கலந்து கொள்ளாததற்கு என்னிடம் எந்தக் காரணமும் இல்லை"

பனூ ஸலமா குலத்தைச் சேர்ந்த சிலர் என்னைப் பின்தொடர்ந்து வந்து "போரில் கலந்து கொள்ளாத மற்றவர்கள் சொன்ன அதே பொய்யான காரணத்தை நபியவர்களிடம் சொல்வதற்குக் கூட உங்களால் இயலாமல் போய்விட்டதே! நீங்கள் செய்த குற்றத்திற்கு நபிகளார் உங்களுக்காகக் கோரும் பாவமன்னிப்பு போதுமானதாய் இருந்திருக்குமே" என்றனர். அல்லாஹ்வின் மீது ஆணையாக! பனூ ஸலமா குலத்தார் என்னைக் கடுமையாகக் கண்டித்துக் கொண்டே இருந்தனர். எந்த அளவுக்கெனில், நான் நபியவர்களிடம் திரும்பிச் சென்று இதற்கு முன்னர் நான் கூறியது பொய் எனச் சொல்லி விட்டு பொய்க் காரணம் ஏதேனும் ஒன்றைக் கூறிவிடலாமா என்றுகூட நினைத்தேன். பின்னர் நான் பனூ ஸலமா குலத்தாரிடம் தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்ட இந்த நிலையை என்னைப் போன்று வேறு யாரும் சந்தித்திருக்கிறார்களா?" எனக் கேட்டேன். அதற்கவர்கள் "உம்முடன் முராரா இப்னு அர்ரபீஉ மற்றும் ஹிலால்

இப்னு உமைய்யா (ரழியல்லாஹு அன்ஹுமா) ஆகிய இருவரும் இதே நிலையைச் சந்தித்துள்ளனர். அவ்விருவரும் நீர் கூறியதைப் போன்றே உண்மையான காரணத்தை நபிகளாரிடம் கூறினார்கள். உம்மிடம் சொல்லப்பட்டது தான் அவர்களிடமும் சொல்லப்பட்டது" என்று கூறினர். அவர்கள் இருவராலும் எனக்கு ஆறுதல் கிடைத்தது.

எங்கள் மூவரிடமும் யாரும் பேசக் கூடாது என்று நபியவர்கள் முஸ்லிம்களுக்குத் தடை விதித்தார்கள். மக்கள் எங்களைத் தவிர்த்து எங்கள் விஷயத்தில் முற்றிலும் மாறிப் போய் விட்டனர். இப்புவியே மாறிவிட்டது போலவும் அது எனக்கு அந்நியமானது போலவும் நான் கருதினேன். இதே நிலையில் ஐம்பது நாட்கள் கழிந்தன. அப்போது அல்லாஹ் பின்வரும் வசனத்தை இறக்கினான்.

"அல்லாஹ்வின் தீர்ப்புக்காகத் தாமதப்படுத்தப்பட்ட மூவரையும் அவன் மன்னித்தான். பூமி விசாலமானதாக இருந்தும் அது அவர்களுக்கு நெருக்கடியாகி, அவர்களுக்கு எதிராக அவர்களது உள்ளங்களும் நெருக்கடியாகி விட்டன. அல்லாஹ்விடமிருந்து தப்புவதற்கு அவனிட மேயன்றி புகலிடமில்லை என்பதை அவர்கள் உறுதி யாக அறிந்தனர். பின்னர் அவர்கள் மீண்டு வருவதற்காக அவன் அவர்களை மன்னித்தான். நிச்சயமாக அல்லாஹ் மிக்க மன்னிப்பவன்; நிகரற்ற அன்புடையவன்." (9: 118)

அடுத்த வசனத்தில் மொத்த முஸ்லிம் சமூகத்தையும் விளித்து அல்லாஹ் ஒரு செய்தி சொல்கிறான்.

"இறை நம்பிக்கை கொண்டோரே! அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள். மேலும் உண்மையாளர்களுடன் இருந்து கொள்ளுங்கள்." (9:119)

அல்லாஹ்வுடைய தூதரின் கடுமையான கண்டனத்துக்கு உட்படுத்தப்பட்ட அந்த மூவருடனும் முஸ்லிம்கள் இணைய வேண்டும் என்று அல்லாஹ் கூறுகிறான். போரில் கலந்து கொள்ளாத நிலையிலும் அவர்கள் உண்மை உரைத்ததே அதற்கான காரணமாகும்.

**உண்மைக்குச் சான்று பகருங்கள்**

தவ்றாத் வேதம் அருளப் பெற்றிருந்த யூதர்களைப் பார்த்து அல்லாஹ் கூறினான். "உங்களிடமுள்ள வேதத்தை உண்மைப்படுத்தக் கூடியதாக நான் இறக்கிய இவ்வேதத்தை நம்பிக்கை கொள்ளுங்கள். இதை நிராகரிப்பவர்களில் நீங்கள் முதன்மையானவர்களாகி விட வேண்டாம்." (2: 41)

"சாட்சியாளர்கள் சாட்சிக்காக அழைக்கப்பட்டால் மறுக்க வேண்டாம்" (2: 282) என்றும் குர்ஆன் பணிக்கிறது. மேலும் அருளாளனின் அடியார்களின் முக்கிய பண்புகளுள் ஒன்றாக "அவர்கள் பொய்ச் சாட்சி கூற மாட்டார்கள்" (25: 72) என்கிறது வான்மறை.

ஒரு நாள் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) ஸுப்ஹுத் தொழுகையை முடித்துத் திரும்பியபோது எழுந்து நின்று "பொய்ச்சாட்சியம் சொல்வது வல்லமையும் மாண்பும் மிக்க அல்லாஹ்வுக்கு இணை கற்பிப்பதற்கு சமமான பாவச்செயலாகும்" என்று கூறிவிட்டு "விக்கிரக வணக்கங்களின் அசிங்கத்தைத் தவிர்ந்து கொள்ளுங்கள். மேலும் பொய் கூறுவதையும் தவிர்ந்து கொள்ளுங்கள்" (22: 30) என்ற வசனத்தை ஓதினார்கள்.

(அத்திர்மிதி, அபூதாவூத், இப்னுமாஜா)

மற்றொரு வசனத்தில் அல்லாஹ் கூறுகிறான்.

"நபியே! நீர் கூறுவீராக! என் இறைவன் தடை செய்திருப்பதெல்லாம்... எதற்கு அல்லாஹ் எந்தச் சான்றையும் அருளவில்லையோ அதை நீங்கள் அல்லாஹ்வுக்கு இணையாக்குதல், அல்லாஹ்வின் மீது நீங்கள் அறியாதவற்றைப் புனைந்துரைத்தல் ஆகியவற்றைத்தான்" (7: 33)

"அல்லாஹ்வின் மீது அறியாதவற்றைப் புனைந்துரைத்தல்" என்பதில் பொய்ச் சாட்சியமும் அடங்கும் என்று இமாம் இப்னு கஸீர் (ரஹிமஹுல்லாஹ்) குறிப்பிடுகிறார்.

அபூபக்ரா நுஃபைஉ இப்னு அல்ஹாரிஸ் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் கூறுகிறார்: ஒரு முறை நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) "பெரும் பாவங்களிலேயே மிகப் பெரும் பாவங்களை நான் உங்களுக்கு அறிவிக்கட்டுமா?" என்று கேட்டார்கள். நாங்கள் "ஆம்! அல்லாஹ்வின் தூதரே! அறிவியுங்கள்" என்றோம். "அல்லாஹ்வுக்கு இணை வைப்பதும் பெற்றோரைப் புண்படுத்துவதும்" என்று சொல்லிவிட்டு, சாய்ந்து கொண்டிருந்த நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) எழுந்து அமர்ந்து "அறிந்து கொள்ளுங்கள்! பொய் பேசுவதும் பொய்ச் சாட்சியமும் மிகப் பெரும் பாவம்தான்" என்று கூறினார்கள். இதை அவர்கள் திரும்பத் திரும்ப சொல்லிக் கொண்டே இருந்தார்கள். இதைக் கண்ட நாங்கள் "அவர்கள் நிறுத்திக் கொள்ளக் கூடாதா? என்று சொன்னோம்."

(அல்புகாரி, முஸ்லிம்)

முனாஃபிக்குகள் பற்றி "கட்டுப்படுவதும் நல்லவார்த்தை கூறுவதுமே அவர்களுக்கு மிக ஏற்றமானதாகும். காரியம் உறுதியாகியதும் அவர்கள் அல்லாஹ்விடம் உண்மையுடன் நடந்து கொண்டிருந்தால் அது அவர்களுக்கு நல்லதாக இருந்திருக்கும்" (47: 21) என்று குர்ஆன் கூறுகிறது.

உண்மையைப் பேசி, வாய்மையாக வாழ்ந்து நற்செய்தி பெற்றுக் கொள்ளுங்கள். "உண்மையைப் பேசும் ஆண்களும் உண்மையைப் பேசும் பெண்களும்... ஆகிய இவர்களுக்கு அல்லாஹ் மன்னிப்பையும் மகத்தான கூலியையும் தயார்படுத்தி வைத்துள்ளான்." (33: 35)

PUBLIC LIBRARY
JAFFNA



# ஆயுதக் குழுக்களின் சிந்தனைப் பின்னணி:
# புவி, அரசியல் மற்றும் வரலாற்று நோக்கு



முஹம்மத் ஸகி பவுஸ் (நளீமி)
விரிவுரையாளர், இஸ்லாஹிய்யா அரபுக் கல்லூரி, மாதம்பை,
E-mail: zackymfm@gmail.com

இன்றைய அரபுலக சமூகங்களுக்கு முன்னால் இரண்டு தெரிவுகள் மாத்திரமே காணப்படுகின்றன. ஒன்று, மதச் சார்பற்ற இராணுவச் சர்வதிகாரங்கள் மற்றும் மன்னர்களை ஏற்றுக் கொள்ளுதல் அல்லது வன்முறைக் குழுக்களை தலைவர்களாக ஏற்றுக் கொள்ளுதல் என்பவையே அவையாகும். இது குறித்து சில சமகால அரசியல் பகுப் பாய்வாளர்கள் இவ்வாறு விளக்குகின்றனர்: "அரபு அரசியலில் நீண்ட காலமாக செல்வாக்குச் செலுத்திய சர்வதிகார மன்னர்களுக்கும் இராணுவ ஜெனரல்களுக்கும் பலமான இடதுசாரி அல்லது இஸ்லாமியவாத ஜனநாயக எதிர்க் கட்சிகள் இருந்தன. ஆனால், அரபு வசந்தத்தைத் தொடர்ந்து மேலெழுந்த முஸ்லிம் உலகிற்குள்ளாலான மோதல்களின் (Clash within Muslim World) விளைவாக அத்தகைய ஜனநாயக எதிர்க் கட்சி ஆசனங்களை வன்மு றைக் குழுக்கள் கைப்பற்றி விட்டன."

அதாவது, அரபுலக மாற்றத்திற்கான தளமாக ஜனநாயக போராட்டத்தை ஊடகமாக நோக்கும் நிலை தேய்ந்து வருவதுடன், மாற்றத்திற்கான ஒரே கருவி வன்முறை மாத்திரமே என்ற சிந்தனை அரபுலக இளைஞர்களுக்கு மத்தியில் வேரூன்றி வருகின்றமையை அவதானிக்க முடியும். அதன் வடிவங்களே நைஜீரியாவில் போகோ ஹராம், ஆப்கானிஸ்தானில் தலிபான்கள், லிபியாவில் அன்ஸாருஷ் ஷரீஆ, எகிப்தில் அன்ஸாருஸ் ஸுன்னா, சிரியாவில் ஜப் ஹதுந் நுஸ்ரா மற்றும் ஈராக், சிரியாவில் ஐ.எஸ் ஆயுதக் குழுக்கள் எனலாம். கடந்த சில மாதங்களாக ஐ.எஸ் அமைப் பினர் மேற்கொண்டு வரும் கொடூரமான கொலைகள், நிலப் பிராந்திய அபகரிப்புக்கள், பாடசாலை மாணவர்களைக் கடத்தல், இஸ்லாமிய கிலாபா அறிவிப்பு மற்றும் வரலாற்று முதுசங்களை அழிக்கும் கடும்போக்கு செயற்பாடுகள் என்பன இவ் அமைப்பினரின் சிந்தனைகளை நோக்கிய கவனயீர்ப்பை ஏற்படுத்தியுள்ளன. குறிப்பாக, இத்தகைய ஆயுதக் குழுக்கள் யூத-அமெரிக்க சதியின் விளைவாக உருவானவையா? அல்லது ஈரானின் பிராந்திய நலன்க ளுக்காக உருவாக்கப்பட்டவையா? அல்லது பிரத்தியேக சர்வதிகார அரசியல் சூழமைகள் (Specific Political Con text) இத்தகைய அமைப்பினரை தோற்றுவித்துள்ளனவா? அல்லது இவர்களது கருத்தியலின் தாக்கரத் தன்மையினால் மக்கள் ஆதரவைப் பெற்றிருக்கின்றார்களா? போன்ற கேள்விகளுக்கு விடை காணும்போதே இவ் வன்முறைக் குழுக்களின் யதார்த்தமான உளவியலைப் புரிந்து கொள்ள முடியும்.

**இத்தகைய ஆயுதக் குழுக்கள் யூத-அமெரிக்க சதியின் விளைவாக உருவானவையா? அல்லது ஈரானின் பிராந்திய நலன்க ளுக்காக உருவாக்கப்பட்டவையா? அல்லது பிரத்தியேக சர்வதிகார அரசியல் சூழமைகள் (Specific Political Con text) இத்தகைய அமைப்பினரை தோற்றுவித்துள்ளனவா? அல்லது இவர்களது கருத்தியலின் தாக்கரத் தன்மையினால் மக்கள் ஆதரவைப் பெற்றிருக்கின்றார்களா?**

### ஆயுதக் குழுக்களின் வளர்ச்சிக் கட்டங்கள்

சமீபத்தில் கட்டார் பல்கலைக்கழக அரசியல் விஞ்ஞான பீடத்தின் கடும்போக்கு சிந்தனைகள் தொடர்பான சிரேஷ்ட விரிவுரையாளர் பேராசிரியர் முடாஸ் அல்கதீப் எழுதிய "ஐ.எஸ் அமைப்பின் சிந்தனைப் பின்னணி" என்ற ஆய்வுக் கட்டுரையில் ஐ.எஸ் அமைப்பினரின் கொடூரமான நடத்தைகளை வளர்ந்து வரும் ஆயுதக் குழுக்களின் சிந்தனையின் ஒளியிலேயே புரிந்து கொள்ள வேண்டும் என்கிறார். அதாவது, இன்றைய முஸ்லிம் உலகைக் குதறும் பலமான வன்முறை ஆயுதக் குழுவான ஐ.எஸ் அமைப்பினர் நீண்ட வரலாற்றைக் கொண்ட சிந்தனைப் பாரம்பரியத்தின் தொடர்ச்சி என பேராசிரியர் முடாஸ் அல்கதீப் வாதிக்கிறார். இந்த வகையில், கடும்போக்கு ஆயுதக் குழுக்களின் சிந்தனை மற்றும் இராணுவ வரலாற்று வளர்ச்சியை 05 பிரதான கட்டங்களாக ஆய்வாளர்கள் பிரிக்கின்றனர். அவையாவன:

*01. 1980- 1990க்கு இடைப்பட்ட ஆப்கான்- ரஷ்ய யுத்த காலப் பகுதி*

*02. 1991- 2001க்கு இடைப்பட்ட தலிபான்களின் ஆட்சியும் ஆப்கான் மீதான அமெரிக்காவின் ஆக்கரமிப்பும்*

*03. 2001- 2006க்கு இடைப்பட்ட ஆப்கான் மற்றும் ஈராக் ஆக்கிரமிப்புக் காலப் பகுதி*

*04. 2006- 2011க்கு இடைப்பட்ட ஈராக்கில் நூர் மாலிகியின் சர்வதிகார ஷீயா அரசின் எழுச்சி முதல் அரபு வசந்தம் வரை*

*05. 2011க்குப் பின்னரான அரபு வசந்தமும் சிரிய சிவில் யுத்தமும்*

ஒவ்வொரு கட்டத்திலும் கடும்போக்கு ஆயுதக் குழுக்களது சிந்தனையில் வளர்ச்சி இடம்பெற்று வந்துள்ளதையும் அதனை வழிநடத்திய தலைவர்களின் தாக்கத்தினால் வன்முறை ஆயுதக் குழுக்களின் போராட்டத் தளங்களும் இலக்குகளும் வித்தியாசப்பட்டு வந்துள்ளமையையும் அவதானிக்கலாம். இன்று ஐ.எஸ் அமைப்பினர் மேற்கொள்ளும் கடுமையான நடவடிக்கைகள் இவ்வரலாற்றுக் கட்டங்களின் பின்னால் ஏற்பட்ட பரிணாம வளர்ச்சியாகும்.

### 1980- 1990க்கு இடைப்பட்ட ஆப்கான்- ரஷ்ய யுத்த காலப் பகுதி

*1980களில் ஆரம்பித்த ஆப்கானிஸ்தான்-* ரஷ்ய யுத்தமே ஆயுதப் போராட்ட சிந்தனையைக் கொண்ட ஆயுதக் குழுக்களின் தோற்றத்திற்கு வித்திட்ட நிகழ்வாகும். ஆயுதக் குழுக்கள் கட்டமைப்பு ரீதியாக தொழிற்பட ஆரம்பித்த காலப்பகுதி எனவும் அதனை வரையறை செய்ய முடியும். மாத்திரமன்றி, ஆயுதக் குழுக்களின் செயற்பாடுகளுக்கான சிந்தனைத் திட்டவரைபும் இக்காலப் பகுதியிலேயே தோற்றம் பெற்றது. குறிப்பாக, ரஷ்யாவுக்கு எதிரான ஆப்கான் போரை நியாயப்படுத்தும் சிந்தனைத் தளத்தினை இட்ட வீரராக அஷ்ஷஹீத் அப்துல்லாஹ் அஸ் ஸாம் கருதப்படுகிறார். இவரே முதல் முறையாக உலகம் தழுவிய ஜிஹாத் (Transnational Jihad), நாடு கடந்து சென்று ஜிஹாத் செய்தல் (Migrant Jihad), சர்வதேச ஜிஹாத் (Global Jihad) போன்ற சொற்களை அறிமுகம் செய்தார்.

அதாவது, ஆப்கானிஸ்தானில் இடம்பெறும் ஜிஹாதில் உலகெங்கும் உள்ள முஸ்லிம் உம்மாவின் அங்கத்தவர்கள் பங்கேற்க வேண்டும் என அப்துல்லாஹ் அஸ்ஸாம் அழைப்பு விடுத்தார். ஆப்கான் ஜிஹாதுக்கான நிலம் மற்றும் இஸ்லாத்திற்கு முரணான கம்யூனிஸ சிந்தனையைப் பரப்ப முயற்சிக்கும் ரஷ்ய ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக போராடுவது முஸ்லிம் உம்மாவின் அடிப்படைக் கடமை என அவர் அழுத்தமாக வலியுறுத்தினார். இக்காலப் பகுதியில் அஷ்ஷஹீத் அப்துல்லாஹ் அஸ்ஸாமின் கருத்துச் செல்வாக்கினால், ஆப்கான் யுத்தத்தில் போராடுவதற்காக முஸ்லிம் உலகின் பல பாகங்களிலிருந்தும் முஸ்லிம் இளைஞர்கள் அலையலையாக திரண்டனர்.

அதேநேரம், ஆப்கான் யுத்தத்தின் பின்புலத்தில் தொழிற்பட்ட ஏகாதிபத்திய நகர்வுகளையும் புரிந்து கொள்ள வேண்டும். ரஷ்யாவுடனான அமெரிக்காவின் பனிப்போரில் ஆப்கான் யுத்தம் திருப்புமுனையாகும். ஏனெனில், ஆப்கான் போராளிகளுடனான யுத்தத்தில் ரஷ்யா தோல்வியடையும் பட்சத்தில், நேரடியாக பனிப்போரில் அமெரிக்கா வெற்றி பெறும் சந்தர்ப்பம் காணப்பட்டது. எனவே, முஸ்லிம் உலகின் தூரப் பிரதேசங்களிலிருந்து இளைஞர்களை ஆப்கானை நோக்கி வரவழைப்பதற்கான நிதி, பயண மற்றும் ஆயுத உதவிகளை முழுமையாக செய்யுமாறு சஊதிஅரேபியாவின் மன்னர் பஹ்திற்கு வொஷிங்டன் அழுத்தம் கொடுத்து வந்தது. விளைவாக, பல மில்லியன் டொலர்களை ஆப்கான் ஜிஹாதுக்காக மன்னர் பஹ்த் வாரி இறைத்தார். அதனோடிணைந்த வகையில், ஆப்கான் போராட்டத்தை நியாயப்படுத்தியும் சர்வதேச ஜிஹாத் கருத்தியலை ஆதரித்தும் ரஷ்யாவின் கம்யூனிஸத்தை எதிர்த்தும் சஊதி அரேபியாவின் சட்ட அறிஞர்கள் பத்வாக்களையும் சட்ட விளக்கங்

> ஒவ்வொரு கட்டத்திலும் கடும்போக்கு ஆயுதக் குழுக்களது சிந்தனையில் வளர்ச்சி இடம்பெற்று வந்துள்ளதையும் அதனை வழிநடத்திய தலைவர்களின் தாக்கத்தினால் வன்முறை ஆயுதக் குழுக்களின் போராட்டத் தளங்களும் இலக்குகளும் வித்தியாசப்பட்டு வந்துள்ளமையையும் அவதானிக்கலாம்.

களையும் வழங்கினர். ஆப்கான் போராளிகளுக்கு இவை மேலும் உணர்வூட்டின. இன்னும், பல சர்வதேச இஸ்லாமிய இயக்கங்களும் ஆப்கான் போராளிகளுக்கு ஆதரவளித்தன. இவ்வாறு, 1980- 1990 களுக்கு இடைப்பட்ட காலப் பகுதியில் ஆயுதப் போராட்டக் குழுக்களுக்கான சிந்தனைத் தளம் சர்வதேச ஜிஹாத் (Global Jihad) என்ற சொல்லாட்சிக்கூடாக இடப் பட்டது.

**ரஷ்யாவின் வீழ்ச்சிக்கும் அமெரிக்காவின் ஆப்கான் மீதான யுத்தத்திற்கும் இடைப்பட்ட 1989- 2001 வரையான காலப் பகுதி**

அமெரிக்கா மற்றும் சஊதிஅரேபியாவின் மறைமுக அனுசரணையும் அஷ்ஷஹீத் அப்துல்லாஹ் அஸ்ஸாமின் சர்வதேச ஜிஹாத் பற்றிய சிந்தனையும் இணைந்து ரஷ்யாவை தோல்வியுறச் செய்தன. உடனே, ஆப்கான் யுத்தத்திற்குச் சென்ற போராளிகளை நாட்டுக்கு திரும்பி வருமாறு அரபு மற்றும் முஸ்லிம் உலகின் ஏனைய அரசாங்கங்கள் வேண்டிக் கொண்டன. ஆனால், ஆப்கானை நோக்கிச் சென்ற போரா ளிகள் மறுத்து விட்டனர். மாறாக, ஆப்கானை மையப்படுத் திய இஸ்லாமிய தேசமொன்றை உருவாக்க வேண்டும் என்ற கோஷத்தினை முன்வைத்தனர். ஆப்கானிஸ்தானின் தலை நகர் காபூலில் ஆப்கான் ஆயுதப் போராளி முல்லா உமரினதும் உஸாமா பின் லாடனினதும் தலைமையில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு போராளிகள் நிருவகிக்கப்பட்டனர். மறுபுறம், 1992ஆம் ஆண்டு ஆப்கானிஸ்தானிலிருந்து சூடானுக்கு வியாபார நோக்கமாக உஸாமா பின் லாடன் பயணமாகினார். இதனையறிந்த சஊதி அரசாங்கம் உஸாமா பின் லாடனை தம்மிடம் ஒப்படைக்குமாறு சூடான் அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுத்தது. ஏனெனில், சஊதி அரேபியாவின் அனுமதிக்கு முரணாக ஆப்கானிலிருந்தவாறு தொடர்ந்தும் முஜாஹிது களை உஸாமா பின் லாடன் இயக்குகிறார் என ரியாத் சிந் தித்தது. பின்பு, தனக்கு எதிராக சூழ்ச்சிகள் அரங்கேறலாம் என எண்ணிய உஸாமா பின் லாடன் மீண்டும் ஆப்கானை நோக்கிப் பயணமானார்.

இதே காலப் பகுதியிலேயே (1995களில்) ஆப்கான் ஜிஹாத் களத்தில் பிரகாசித்த தலிபான் இயக்க அங்கத்தவர்கள் ஆப்கான் இஸ்லாமிய தேசத்தை பிரகடனம் செய்தனர். எனவே, தான் இஸ்லாமிய தேசத்தை நோக்கி ஹிஜ்ரத் செய்வதாக உஸாமா பின் லாடன் அறிவித்தார். அங்கு தேசிய மற்றும் சர்வதேச முஜாஹித்களை நிருவகித்து வந்த முல்லா உமருடன் இணைந்து அல்காயிதா ஆயுத இயக்கத்தை ஆரம்பித்தார். மேலும், சர்வதேச ஜிஹாத் கருத்தியலால் கவரப்பட்டு ஆப் கானிஸ்தானை நோக்கி வந்த வெளிநாட்டு போராளிகளையும் உள்நாட்டு போராளிகளையும் கட்டமைப்பு ரீதியாக இயக் குவிப்பதிலும் ஜிஹாதின் மூலமே இஸ்லாமிய தேசத்தை நிறுவலாம் என்ற சிந்தனையைப் பரப்புவதிலும் சஊதி அரேபிய பிரஜையான உஸாமா பின் லாடனின் வகிபாகம் முக்கியமானது.

இந்த வகையில், 1989- 2001 இடைப்பட்ட காலப் பகுதியை 'சர்வதேச ஜிஹாத்' என்ற கருத்தியல், இஸ் லாமிய தேசத்தை உருவாக்குவதற்கான ஒரே வழிமுறை ஜிஹாத் என்ற புரிதலை நோக்கி நகர்ந்த காலப் பிரிவாக அடையாளப்படுத்தலாம். மட்டுமன்றி, ஆப்கானை விட்டும் தூரத்தில் வாழும் அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் தலைமையிலான மேற்குலக கூட்டணியே தமது இஸ் லாமிய தேசத்தின் எதிரிகள் (The distant enemy) எனவும் உஸாமா பின் லாடன் மற்றும் முல்லா உமர் கூட்டணி பிரகடனம் செய்தன.

**ஆப்கான் மற்றும் ஈராக் மீதான தாக்குதல்கள் இடம் பெற்ற 2001- 2006 வரையான காலப் பகுதி**

ஆப்கான் மற்றும் ஈராக் மீதான அமெரிக்க ஆக்கிர மிப்பு யுத்தங்கள் சர்வதேச ஜிஹாத் கருத்தியலை புதியதொரு தளத்தை நோக்கி நகர்த்தின. 2001இல் இடம்பெற்ற அமெரிக்காவின் ஆப்கான் மீதான யுத்தம் காபூலினை தளமாகக் கொண்டியங்கிய அல்காயிதா மற்றும் தலிபானிய கடும்போக்குக் கூட்டணியை சிதறடித்து விட்டன. அதன் பிரதான தலைவர்களான உஸாமா பின் லாடன், ஐமன் ஸவாஹிரி மற்றும் அபூ முஸ்அப் அஸ்ஸர்காவி போன்றோர் தலைமறைவாகினர். ஆப்கானில் நிலைகொண்டிருந்த வெளிநாட்டுப் போராளிகள் தத்தமது தேசங்களுக்கு தப்பியோடினர். இன்னும், ஆப்கானிஸ்தானில் அல்காயிதா தொழிற் பட்ட போது உஸாமா பின் லாடனுக்கு அடுத்த தரத்தில் இயக்கத்தை வழிநடத்திய அபூ முஸ்அப் அஸ்ஸர்காவி வட ஈராக்கில் தலைமறைவாகினார்.

அடுத்த கட்டமாக, 2003ஆம் ஆண்டு அமெரிக்கா ஈராக் மீது தாக்குதல்கள் நடத்தின. விளைவாக, சத்தாம் ஹுஸைனின் சர்வதிகார ஆட்சிக் கட்டில்கள் தூக்கி யெறியப்பட்டன. ஈராக்கின் அன்பார், ஸலாஹுத்தீன் மற்றும் பக்தாத் பிராந்திய ஸுன்னி முஸ்லிம் கோத்தி ரங்களும் ஆயுதக் குழுக்களும் அமெரிக்க ஆக்கிரமிப் பிற்கு எதிராக ஆயுதமேந்திப் போராட ஆரம்பித்தன. இத்தகைய சூடான சூழமைகளை வட ஈராக்கில் மறைந்து வாழ்ந்த அல்காயிதாவின் முன்னைய இரண் டாம் நிலைக் கட்டளைத் தளபதி அபூ முஸ்அப் ஸர்காவி பயன்படுத்திக் கொள்ள ஆரம்பித்தார். விளைவாக, ஹரகதுத் தவ்ஹீத் வல் ஜிஹாத் என்ற பெயரில் அமெ ரிக்க ஆக்கிரமிப்பிற்கு எதிரான ஆயுத இயக்கத்தை அவர் ஆரம்பித்தார். ஏற்கனவே, ரஷ்யா மற்றும் அமெரிக்காவிற்கு எதிரான யுத்தங்களிலும் ஆயுதப் போராட்ட இயக்கங்களையும் வழிநடத்திய அனுப வத்தைப் பெற்றிருந்தவர் அபூ முஸ்அப் அஸ்ஸர்காவி. எனவே, அமெரிக்காவுக்கெதிரான ஈராக்கிய ஸுன்னி முஸ்லிம்களின் ஆயுதப் போராட்டத்தை வழிநடத்

தும் முன்னணி ஆயுதப் பிரிவாக அபூ முஸ்அப் அஸ்ஸர்காவியின் ஹரகதுத் தவ்ஹீத் வல் ஜிஹாத் இயக்கம் இடம் பிடித்துக் கொண்டது. இதனால், பல ஸுன்னி முஸ்லிம் கோத்திரங்கள் அபூ முஸ்அபுடன் இணைந்து போராடின.

பின்பு, இவ் அமைப்பு பலமான ஆயுத இயக்கமாக மாற்றம் பெறவே, அல்காயிதா என்ற தாய் இயக்கத்துடன் ஹரகதுத் தவ்ஹீத் வல் ஜிஹாத் அமைப்பை இணைத்து விடுவதாக அபூ முஸ்அப் அஸ்ஸர்காவி அறிக்கை விட்டார். அல்காயிதா ஈராக் (AQI) என தனது புதிய இயக்கத்திற்கு பெயரிட்டார் அபூ முஸ்அப். மட்டுமன்றி, தனது புதிய இயக்கத்தை விரிவுபடுத்தும் வகையில் ஏற்கனவே ஆப்கான் யுத்தத்தில் பங்குபற்றிய அனுபவம் வாய்ந்த வெளிநாட்டு போராளிகளை ஒன்றுதிரட்டும் வேலைத் திட்டமொன்றையும் அபூ முஸ்அப் ஸர்காவி தலைமையிலான அல்காயிதா ஈராக் (AQI) முன்னெடுத்தது. விளைவாக செச்னியா, பொஸ்னியா, துருக்கி மற்றும் அல்பேனியாவைச் சேர்ந்த ஏராளமான போராளிகள் ஈராக்கில் நுழைந்தனர். இதுவே, ஈராக்கிற்குள் வெளிநாட்டுப் போராளிகள் நுழைந்த முதலாவது சந்தர்ப்பமாகும்.

இக்காலப் பகுதியிலேயே அல்காயிதா தலைமையிலான வன்முறைக் குழுக்களின் சிந்தனைப் போக்கில் பல மாற்றங்கள் நிகழ ஆரம்பித்தன. அதாவது, அல்காயிதா ஈராக் (AQI) கைப்பற்றிய பிராந்தியங்களில் வாழும் ஷீயா முஸ்லிம்களை நசுக்குதல், எதிரிகளை மிலேச்சத்தனமாக கொன்றொழித்தல் மற்றும் அரபுலகில் வாழும் மேற்கு சார்பான அரசுகளை முர்தத் (இஸ்லாத்தை விட்டும் வெளியேறியவர்) என பெயர் சூட்டுதல் போன்றன இக்காலப் பிரிவில் உருவாகிய தோற்றப்பாடுகளாகும். ஏற்கனவே, அல்காயிதா கூட்டணி பின்பற்றி வந்த சார்பளவான கடும்போக்கு சிந்தனையை விடவும் தீவிரத் தன்மை கொண்ட நிலைப்பாடுகளுடன் அல்காயிதா ஈராக் இயங்க ஆரம்பித்தது. இத்தகைய தீவிர நிலைப்பாடுகளை நகர்த்துவதில் அபூ ஹம்ஸா முஜாஹிர் மற்றும் அபூபக்கர் நாஜி ஆகிய இருவர் பங்களிப்புச் செய்துள்ளதாக ஆய்வாளர்கள் தெளிவுபடுத்துகின்றனர். இவர்கள் இருவரும் அல்காயிதா ஈராக்கின் (AQI) தலைவரான அபூ முஸ்அப் அஸ்ஸர்காவியின் தனிப்பட்ட ஆலோசகர்களாக பணியாற்றியவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. மாத்திரமன்றி, ஈராக் யுத்தத்திற்கு பிற்பட்ட அல்காயிதா வன்முறைக் கூட்டணியின் சிந்தனைப் போக்கிலும் பாரிய திருப்பங்களை ஏற்படுத்திய கோட்பாட்டாளர்களாக அபூ ஹம்ஸா முஜாஹிரையும் அபூபக்கர் நாஜியையும் அரபுலக வன்முறை இயக்கங்கள் கருதுகின்றன. இவர்கள் அல்காயிதா வன்முறைக் கூட்டணியின் சிந்தனையில் பிரதான இரண்டு மாற்றங்களை ஏற்படுத்தினர்.

*01. அல்காயிதா ஏற்கனவே பிரகடனம் செய்த தூர* எதிரியான அமெரிக்கா தலைமையிலான மேற்குலகே தமது பரம எதிரி (Distant Enemy) என்ற நிலைப்பாட்டிலிருந்து விலகி நெருங்கிய எதிரியான (Near Enemy) அரபு நாட்டு அரசாங்கங்களும் ஈரானுமே தமது முதன்மை எதிரிகள் என்ற புதிய நிலைப்பாட்டுக்கு அல்காயிதா தலைமையிலான வன்முறைக் கூட்டணி வந்தது. இந்தப் பின்னணியில், அரபு நாடுகளில் வாழும் சிறுபான்மை ஷீயா முஸ்லிம்களை மற்றும் கிறிஸ்தவர்களை இலக்கு வைத்து தாக்க ஆரம்பித்தது. இன்னும், அரபு நாட்டு அரசாங்கங்களுக்கு சார்பானவர்களை திட்டமிட்டு கொலை செய்யவும் துவங்கினர். தவிரவும், ஈரான் மற்றும் ஏனைய மேற்கு நாடுகளுடைய அரபுலக தூதுவராலயங்கள் மீதான தாக்குதல்கள் இக்காலப் பிரிவில் அதிகம் இடம்பெற்றுள்ளமையும் அவதானிக்கதக்கது. அல்காயிதா தலைமையிலான வன்முறைக் கூட்டணியின் இப்புதிய நிலைப்பாடானது, முஸ்லிம் உலகின் உள்ளக மோதல்களைத் தூண்டி விடும் நிலையை ஏற்படுத்தியது. விளைவாக, ஷீயா- ஸுன்னி மோதல்களுக்கு அப்பால் ஸுன்னி- ஸுன்னி மோதல்கள் அரபுலகின் பல நாடுகளிலும் துளிர்விட ஆரம்பித்தன.

*02. அல்காயிதாவின் கட்டுப்பாட்டின் கீழ் வரும்* பிராந்தியங்களின் கட்டுக்கோப்பை பேணுவதற்காக கடுமையான தண்டனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. இந்த வகையிலேயே, அல்காயிதா கூட்டணியிடம் சிக்கிக் கொள்ளும் வெளிநாட்டு பிரஜைகள் அல்லது அரபு நாட்டு அரசாங்கங்களின் ஆதரவாளர்களை மிலேச்சத்தனமாக கொலை செய்யும் முறைமையை அபூ முஸ்அப் அஸ்ஸர்காவி தலைமையிலான அல்காயிதா ஈராக் (AQI) துவங்கி வைத்தது. இதற்கூடாக, வன்முறைக் கூட்டணிகள் இரண்டு இலக்குகளை அடைய முற்பட்டன. அதிலொன்று, சாதாரண சிவிலியன்களை அச்சுறுத்தி தமது கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ளல். இரண்டாவது, எதிரிப் படையை தமது கட்டுப்பாட்டுப் பிராந்தியங்களுக்குள் நுழைவதனை தடுத்தல்.

இத்தகைய இரண்டு சிந்தனைத் திருப்பங்களையும் ஏற்படுத்துவதில் அபூ முஸ்அப் ஸர்காவியுடன் அபூ ஹம்ஸா முஜாஹிர் மற்றும் அபூபக்கர் நாஜி போன்ற இருவர் நெருங்கி இயங்கியுள்ளனர். அதிலும், அல்காயிதாவின் புதிய நகர்வுக்கான கோட்பாட்டுப் பின்புலத்தை விளக்கும் இதாரதுத் தவஹுஷ் (சட்டமற்ற பகுதிகளை முகாமை செய்தல்- Managing the Lawlessness) என்ற புதிய நூலொன்றையும் அல்காயிதா ஈராக்கின் கோட்பாட்டாளர் அபூபக்கர் நாஜி எழுதியுள்ளார். அதில், அல்காயிதாவின் போராட்ட கட்டங்களை மூன்றாகப் பிரிக்கிறார்.

*01. அரபு நாடுகளை பலமிழக்கச் செய்யும் தாக்குதல்* களை மேற்கொள்ளும் கட்டம்.

(57ஆம் பக்கம் பார்க்க)

# இஸ்லாமிய குடும்ப உருவாக்கம்

# சில அடிப்படைகளும் வழிகாட்டல்களும்

**அஷ்ஷெய்க் எச்.எம். மின்ஹாஜ் (இஸ்லாஹி), விரிவுரையாளர், இஸ்லாஹிய்யா பெண்கள் அரபுக் கல்லூரி, புத்தளம்

(சென்ற இதழ் தொடர்...)

**இஸ்லாமிய குடும்ப உருவாக்கத்திற்கான உத்திகளும் பொறிமுறைகளும்**

**அறிவுப் பின்புலம்**

அன்று பெருநாள் தொழுகை பொது மைதானத்தில் நடத்தப்பட்டது. குத்பாப் பிரசங்கமும் நிகழ்த்தப்பட்டது. குமரிப் பெண்களும், ஹைழ் என்ற நிலையிலுள்ள பெண்களும் கட்டாயம் பொதுமைதானத்திற்கு வருகை தருமாறு கட்டளையிடப்பட்டனர். (ஸஹீஹுல் புகாரி - பெரு நாள் தொழுகை என்ற தலைப்பைப் பார்க்கவும்)

அல்லாஹ்வின் தூதரிடத்தில் சில ஸஹாபிய்யாக்கள் தங்களுக்கு பிரத்தி யேகமாக கல்வி கற்பிக்குமாறு வேண்டிக் கொண்ட விடயங்களையும் அதற்கு அண்ணலார் இணங்கி பாடம் நடத்தியதையும் ஹதீஸ்கள் மூலம் விளங்கிக் கொள்ள முடியும். (பார்க்க: ஸஹீஹுல் புகாரி- அறிவு என்ற பிரதான தலைப்பு)

ஆனால், இன்று உளுத்துப்போன சம்பிரதாயங்களால் பெண்கள் கசக்கிப் பிழியப்படுகின்றனர். பெண்கள் இஸ்லாமிய கல்வி கற்பதற்கான வாய்ப்பும் வசதியும் பருவகால ஏற்பாடுகளாக மட்டுமே அமைகின்றன. அவர்கள் எல்லா இடங்களுக்கும் சென்று சீரழிவதற்கு இடமளிக்கின்ற சமூகம், கல்வி கற்பதற்கு, பள்ளிவாசலை நோக்கிச் செல்வதற்கு அனுமதியளிப்பதில்லை. இது ஓர் ஆபத்தான நிலை. பள்ளிவாசலுக்குச் சென்று இபாதத்துக்களில் ஈடுபட்டு கல்வியறிவைப் பெறுவதற்கு பெண்கள் வெளியேறிச் செல்வதை சமூகம் பாவமாகக் கருதுகிறது. இதனால் குடும்பங்களில் ஆண்களுக்கு கிடைக்கின்ற மார்க்க அறிவின் விகிதாசாரத்திற்கு நிகரான கல்வியறிவு பெண்களுக்கு கிடைப்பதில்லை. எனவே, குடும்பங்களில் இருதுருவ நிலை காணப்படுகிறது. இஸ்லாமிய குடும்ப உருவாக்கம் தேக்க நிலையை நோக்கி நகர்கின்றது. ஆகவே, குடும்ப அங்கத்தவர்களுக்கு சமதரத்தில் கல்வியறிவு கிடைப்பதற்கான வாயில்கள் திறக்கப்பட வேண்டும். இவ்விவகாரத்தில் உள்ள தடைக்கற்கள் இஸ்லாமிய சட்ட விளக்கத்தின் ஒளியில் நீக்கப்படல் வேண்டும்.

**சத்தியத்தைப் பரஸ்பரம் பரிமாறிக் கொள்ளுதல்**

அக்கால அல்குர்ஆனிய குடும்பங்களில் சத்தியம் பரஸ்பரம் கலந்துரையா டப்பட்டது. அல்லாஹ்வின் தூதரின் உரைகள், அவர்களது ஏவல்- விலக் கல்கள், அவர்களின் தீர்ப்புகள் மற்றும் தீர்வுகள் போன்றவற்றை நபித் தோழர்கள் குடும்ப அங்கத்தவர்களுடன் பரிமாறினர். இதனால் அக்குடும்ப அங்கத்தவர்கள் அனைவரும் இஸ்லாமிய குடும்ப உருவாக்கம் பற்றி தெளிவான சிந்தனையுடன் வாழ்ந்தனர். பரஸ்பர கருத்துப் பரிமாறல்களும் கலந்துரையாடல்களும் ஈமா னியப் பண்பு என்பதை நாம் மறந்துவிட முடியாது. ஸூரா அல்அஸ்ர் இதனை தெளிவாக விளக்குகிறது.

*"இறைவிசுவாசிகள் பரஸ்பரம் சத்தியத்தைப் பரிமாறிக் கொள்வார்கள்..."*
*(ஸூரா அல்அஸ்ர்: 3)*

தற்கால குடும்பங்களில் உலக விவகாரம் பற்றி முழு நிறைவான கருத்துப் பரிமாறல், கலந்தாலோசனைகள் நடைபெறுகின்றன. தீனுல் இஸ்லாம் பற்றிய உரையாடல்கள் நடைபெறுவது மிகவும் குறைவாகும். குடும்பங்களி லுள்ள ஆண்கள் தங்களுக்கு தாராள மாகக் கிடைக்கின்ற மார்க்க அறிவை மனைவி மக்களுடன் பகிர்ந்து கொள் வதில்லை. இத்தகைய பலவீனமும் கூட இன்றைய குடும்ப உருவாக்கத் திற்கு பாரிய தடையாக உள்ளது.

> ஆகவே, தற்கால முஸ்லிம் குடும்பங்கள் தங்களுக்கென ஒரு குடும்ப வைத்தியரை நியமித்திருப்பது போல் தமது பிரச்சினைகளை தீர்த்துக் கொள்வதற்கு உளவள ஆலோசகர் ஒருவரை நியமிப்பது காலத்தின் தேவையாக அமைந்து விட்டது. அவர் ஓர் இஸ்லாமிய ஷரீஆத் துறையைச் சார்ந்தவராக இருத்தல் மேலானதாகும்.

**குடும்பப் பிரச்சினைகளைத் தீர்ப் பதற்கான உளவள ஆலோசனை**

இன்றைய முஸ்லிம் குடும்பங்கள் பல்வேறு பிரச்சினைகளை அனுப வித்து வருகின்றன. இதில் வாழ்க்

கைச் செலவை சமாளிக்க முடியாத நிலை மிகவும் பிரதானமானதாகும். இந்தப் பிரச்சினையில் தனது முழுச் சிந்தனையையும் பறிகொடுத்துள்ள குடும்பங்கள் குடும்ப உருவாக்கம் பற்றி சிந்திக்க மாட்டாது. பெரும்பாலும் இஸ்லாமிய அழைப்பாளர்கள் குடும்பங்களின் சமகால பிரச்சினைகள் பற்றி அலட்டிக் கொள்ளாமல் குடும்ப உருவாக்கத்திற்காக அழைப்பு விடுப்பது அறிவுபூர்வமானதல்ல. மேலும் மன அழுத்தம், மனமுறிவு முதலான நோய்களும்கூட நமது குடும்பங்களை ஆட்கொண்டுள்ளன. குடும்பத் தகராறுகளும் காணித் தகராறுகளும் சொத்துப் பகிர்வு தொடர்பான பிரச்சினைகளும் நமது குடும்பங்களின் இலட்சியவாத வாழ்வுக்கு வேட்டு வைத்துள்ளன.

அக்கால குடும்பங்களிலும் பிரச்சினைகள் இருந்தன. ஆனால், அவற்றைப் பெரிதுபடுத்தி வாழ்வதை அவை இலக்காகக் கொள்ளவில்லை. தீனை மேலோங்கச் செய்வதை இறுதி இலக்காகக் கொண்டு வாழ்ந்த குர்ஆனிய குடும்பங்கள், பிரச்சினைகள் எழுகின்றபோது உடனடியாக வஹியின் வழிகாட்டலின் கீழ் நின்று அவற்றை தீர்த்துக் கொண்டன. இதற்கு பல்வேறு சான்றாதாரங்களை முன்வைக்க முடியும். (பார்க்க: ஸூரா அல்முஜாதலா: 01)

ஆகவே, தற்கால முஸ்லிம் குடும்பங்கள் தங்களுக்கென ஒரு குடும்ப வைத்தியரை நியமித்திருப்பது போல் தமது பிரச்சினைகளை தீர்த்துக் கொள்வதற்கு உளவள ஆலோசகர் ஒருவரை நியமிப்பது காலத்தின் தேவையாக அமைந்துவிட்டது. அவர் ஓர் இஸ்லாமிய ஷரீஆத் துறையைச் சார்ந்தவராக இருத்தல் மேலானதாகும். மலைபோல் பிரச்சினைகளை வைத்துக் கொண்டு அது பற்றிய கவலைகளோடும் துயரங்களோடும் காலம் கழிக்கின்ற குடும்பங்கள் இஸ்லாமிய குடும்ப உருவாக்கம் பற்றி சிந்திக்கவே மாட்டாது என்பது பேருண்மையாகும்.

நாம் மேலே விளக்கி வந்த கருத்துக்களின் அடிப்படையில் படிமுறை நோக்கில் நகருகின்றபோது இஸ்லாமிய குடும்ப உருவாக்கம் என்பது சிரமசாத்தியமானதாக அமைய மாட்டாது. எமது கருத்திட்டங்கள் கச்சிதமான முறையில் அமுலுக்கு வருகின்றபோது மட்டுமே இறைநாட்டம் அதனை தொட்டுப் பார்க்கின்றது. எமது குடும்பங்களில் மாற்றங்களுக்கான, மறுமலர்ச்சிக்கான முடிவான தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டும். அது வரைக்கும் அல்லாஹ் அதில் திடுகூறாக திருப்பங்களைக் கொண்டு வருவதில்லை.

*"எந்தவொரு சமுதாயமும் தனது உள்ளத்தில் உள்ளவற்றை மாற்றியமைக்கும் வரை அல்லாஹ் அந்த சமுதாயத்தை மாற்றியமைப்பதில்லை."*

*(ஸூரா அர்ரஃத்: 11)*


## ஜாமிஆ நளீமிய்யா கலாபீடம்- பேருவளை
## புதிய மாணவர் பிரவேசப் பரீட்சை- 2015

**2015ஆம் ஆண்டிற்கான புதிய மாணவர்கள் (முஸ்லிம் ஆண்) ஜாமிஆ நளீமிய்யா கலாபீடத்திற்கு சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர். இதற்கான நேர்முக மற்றும் எழுத்துப் பரீட்சைகள் ஏப்ரல் மாதம் 29ஆம், 30ஆம் திகதிகளில் காலை 08.30 மணி முதல் ஜாமிஆ நளீமிய்யா வளாகத்தில் நடைபெறவுள்ளன. எழுத்துப் பரீட்சையில் மாணவரின் மொழித்திறன், பொது அறிவு, விவேகம் என்பன பரீட்சிக்கப்படும். ஜாமிஆ நளீமிய்யா சர்வதேச இஸ்லாமிய உலகின் பல்கலைக்கழகங்களது சம்மேளனத்தில் (FUIW) அங்கத்துவத்தைப் பெற்றுள்ளமைகுறிப்பிடத்தக்கது. அதன் பட்டச் சான்றிதழ் சர்வதேச இஸ்லாமிய பல்கலைக்கழகங்களினால் அங்கீகரிக்கப்பட்டதாகும். ஏக காலத்தில்**

**பின்வரும் கற்கைநெறிகளில் மாணவர்கள் பயிற்றுவிக்கப்படுவர்:**

01. இஸ்லாமிய கற்கைநெறியில் சிறப்புத் தேர்ச்சி 02. பட்டப் படிப்பு 03. தகவல் தொழில்நுட்ப டிப்ளோமா பாடநெறி

**தகைமைகள்:**

- கல்வி: க.பொ.த (சா.து) பரீட்சையில் சித்தியடைந்து, க.பொ.த (உ.து) பரீட்சைக்குத் தோற்றுவதற்கான குறைந்தபட்ச தகைமைகளைப் பெற்றிருத்தல் (இஸ்லாம், கணிதம், தமிழ் உட்பட மூன்று திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல்)
- வயது: 31.01.2015 இல் 17 வயதுக்கு மேற்படாதிருத்தல்.

**பரீட்சிக்கப்படும் ஆவணங்கள்:**

01. பிறப்புச் சாட்சிப் பத்திரம் (மூலப் பிரதி)
02. க.பொ.த (சா.து) பரீட்சைப் பெறுபேறு (மூலப் பிரதி)
03. அங்கீகரிக்கப்பட்ட ஆள் அடையாள அட்டை
04. தேக ஆரோக்கியமுள்ளவர் என்பதை நிரூபிப்பதற்கான மருத்துவச் சான்றிதழ்
05. ஏனைய ஆவணங்கள், புலமைச் சான்றிதழ்கள்

**கல்வி, தங்குமிட வசதிகள் யாவும் இலவசம்.**
**உணவுக் கட்டணம் மாதம் 5000.00 ரூபா**

**குறிப்பு:**
- நேர்முக, எழுத்துப் பரீட்சைகள் வடக்கு, வட மத்திய, வடமேல், சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு 29.04.2015ஆந் திகதி புதன் கிழமையும் தெற்கு, ஊவா, மேல் மற்றும் கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு 30.04.2015ஆந் திகதி வியாழக்கிழமையும் நடைபெறும்.
- நேர்முகப் பரீட்சைக்கு வருவோருக்கான தங்குமிட வசதி நளீமிய்யா வளாகத்தினுள் செய்யப்பட்டுள்ளது.

**பணிப்பாளர், ஜாமிஆ நளீமிய்யா, பேருவளை.**
**தொ.பே: 03422 76 338, 03422 77 112**

அஷ்ஷெய்க்
எம்.ஏ.எல்.எம். பஸ்லுல் பாரிஸ் (நளீமி)

# செயற்களத்தில் முன்னோர்கள்



உலகம் ஒரு செயற்களம். செயற்படுதல் மனிதனின் இயற்கைப் பண்பு. மனிதன் இயல்பாகவும் பிறராலும் பிறவற்றினாலும் செயற்படதூண்டப்படு கின்றான். மனிதன் பிறப்பு முதல் இறப்பு வரையிலும் செயற்படுவதற்கான களங்கள் எண்ணற்றவை. அவன் ஆன்மா, அறிவு, உடல் எனும் முக்கூறுகளால் ஆக்கப்பட்டவன். இவை அவனது செயற்களங்களாகும். குடும்பம், தொழில் முயற்சி, பொருளீட்டல், ஆட்சி புரிதல் என அவன் செயற்படும் தளங்கள் விரிவடைந்து கொண்டே செல்கின்றன.

எமது முன்னோர்கள் இச்செயற்களத்தில் காத்திரமான, ஆரோக்கியமான பல செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளனர். மனித வாழ்வு செழிப்பதற்கும் உலகம் சுபிட்சமடைவதற்கும் அவர்கள் மதிப்பிடற்கரிய பணியாற்றியிருப்பதை வரலாறு நன்றியோடு நினைவுகூருகின்றது. பேராசிரியர் ஸ்டனிஸ்லாஸ் கயாா்டு பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

“மத்திய கால வரலாற்றில் இஸ்லாத்தின் வரலாறு என்பது நாகரிகத்தின் வரலாறாகவே விளங்குகின்றது. புறக்கணிக்கப்பட்ட கிரேக்க விஞ்ஞானத்தை யும் தத்துவ சாஸ்திரத்தையும் அழிவிலிருந்து பாதுகாத்து மேற்குலகை எழுச்சி பெறச் செய்து அறிவியக்க வளர்ச்சிக்கு காரண கர்த்தாக்களாக இருந்தமைக்காக நாம் முஸ்லிம்களுக்கு மிகவும் கடமைப்பட்டுள்ளோம்.”

இழந்த கண்ணியத்தை மீட்டெடுக்கவும் இஸ்லாம் இவ்வுலகில் ஏற்படுத்த விரும்பும் மாற்றத்தை உலகறியச் செய்யவும் நமது முன்னோர்களின் வழி நின்று காலத்தின் நிலை புரிந்து கருமமாற்றும் மகத்தான பொறுப்பை ஒவ்வொரு முஸ்லிமும் சுமந்துள்ளான்.

அவ்வகையில் இஸ்லாத்தின் தூய வழிகாட்டலுக்கு இலக்கணமாய் வாழ்ந்த முன்னோர்களில் சிலர் குறித்து இங்கு பகிர்ந்து கொள்கின்றோம். தமக்கிருந்த காலம், நேரம், வாய்ப்பு, வசதிகளை விட கடமை அதிகம் என்று அவர்கள் கருதி னார்கள். அதனால் தம் ஆயுளையும் விஞ்சிய பணியை, பயனை உலகம் செழிக்க வழங்கினார்கள்.

**ஆன்மா எனும் செயற்களத்தில் முன்னோர்கள்**

“யார் தன் ஆன்மாவை தூய்மைப் படுத்தினானோ அவன் நிச்சயமாக வெற்றியடைந்து விட்டான்” எனும் அல்குர்ஆன் வசனத்தை தம் வாழ்வின் இலக்காக எம் முன்னோர்கள் கருதி செயற்பட்டுள்ளனர். கடமையான தொழுகை, உபரியான தொழுகைகள், திக்ர், இரவு நேர வணக்கங்கள், திலாவதுல் குர்ஆன், தஸ்பீஹ், மஸ்ஜிதுடனான இறுக்கமான உறவு போன்றவற்றை தம் ஆன்மாவின் மேம்பாட்டிற்கான சாதகமான களமாக அவர்கள் பயன்படுத்தினர். ஆன்மாவின் தூய்மை, இறை திருப்தியும் மன்னிப்பும், நரக விடுதலை என்பவற்றை இலக்காகக் கொண்டதாகவே அவர்களின் ஈடுபாடும் முயற்சியும் அமைந்திருந்தன.

உபை இப்னு கஅப் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் கூறினார்கள்:

**“நான் எனது இல்லம் மஸ்ஜிதுக்கு அருகில் இருப்பதை விரும்பவில்லை. நான் ஒவ்வொரு முறையும் மஸ்ஜிதுக்கு வந்து எனது குடும்பத்தாரிடம் திரும்பும்போது நான் எடுத்து வைக்கும் ஒவ்வோர் எட்டும் நன்மையாகப் பதிவு செய்யப்பட வேண்டுமென விரும்புகின்றேன்”**

அன்ஸார்களில் ஒருவர் இருந்தார். நான் அறிந்த வரை அவரது வீட்டைத் தவிர வேறெந்த வீடும் மஸ்ஜிதிலிருந்து வெகு தூரமில்லை. ஆனால், அவர் எந்த ஜமாஅத் தொழுகையையும் தவற விட்டதில்லை. அவரிடம் "நீங்கள் ஒரு கழுதையை வாங்கினால் கடுமையான இருள் மற்றும் கடின வெயிலின்போது பயணிக்க உதவியாக இருக்குமே" என்று கூறப்பட்டபோது அவர், "நான் எனது இல்லம் மஸ்ஜிதுக்கு அருகில் இருப்பதை விரும்பவில்லை. நான் ஒவ்வொரு முறையும் மஸ்ஜிதுக்கு வந்து எனது குடும்பத்தாரிடம் திரும்பும்போது நான் எடுத்து வைக்கும் ஒவ்வோர் எட்டும் நன்மையாகப் பதிவு செய்யப்பட வேண்டுமென விரும்புகின்றேன்" என பதிலளித்தார். அப்போது நபியவர்கள் "உமக்கு நீர் விரும்பும் அவை அனைத்தையும் ஒன்று சேர்த்து அல்லாஹ் அருள் புரிவானாக" என்று பிரார்த்தித்தார்கள். (முஸ்லிம்)

இறை உவப்பைப் பெற விரும்பும் தூய உள்ளமொன்றை மேற்குறித்த ஹதீஸ் எமக்கு படம்பிடித்துக் காட்டுகின்றது. புகழ், பாராட்டு, சன்மானம் எதனையும் அவர்கள் எதிர்பார்க்கவில்லை. மறுமை சிந்தனையோடும் மரணத்தை எதிர்கொள்வதற்கான தயார் நிலையிலுள்ள உள்ளத்தோடும் ஸலபுஸ் ஸாலிஹீன்கள் இருந்துள்ளனர். இமாம் அஹ்மத் இப்னு ஹன்பல் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் குறித்து பதிவாகியுள்ள வாழ்க்கைக் குறிப்பொன்று எமக்கு படிப்பினைக்குரியது.

இமாம் அவர்களுக்கு மரணம் நினைவூட்டப்படும்போது அவரது தொண்டைக் குழி அடைத்து, நா தளுதளுத்து வார்த்தைகள் தடுமாறியவர்களாக "இறை அச்சத்தின் காரணமாக என்னால் உண்ணவோ, பருகவோ முடிவதில்லை. மரணம் நினைவூட்டப்பட்டால் முழு உலகும் எனக்கு அற்பமாய் தோன்றி விடுகின்றது. இவை அற்ப உணர்வுகள், ஆசைகள், அற்ப ஆடை அணிகலன்கள். கணக்கிட முடியுமான இவ்வுலக வாழ்க்கையில் குறிப்பிட்டுச் சொல்லும்படி என்ன இருக்கிறது? எனக்கு முடியுமென்றிருந்தால் என்னைப் பற்றிய எவ்வித குறிப்புமின்றி மறையவே ஆசைப்படுகிறேன்" என்று கூறுவார்கள்.

இமாம் இப்னு தைமியா (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் சிறை வாழ்வில் ஆன்மிக சுவையை அனுபவித்தவர். சிறைவாழ்வை இறை அருளாகப் பார்த்த அவர் இப்படிக் கூறுபவராக இருந்தார். "அவர்கள் என்னை சிறையில் அடைத்தால் இறைவனை தனிமையில் வணங்கக் கிடைத்த பாக்கியமாகும்; ஊரிலிருந்து என்னை அவர்கள் வெளியேற்றினால் அல்லாஹ்வின் பாதையில் புரியும் ஹிஜ்ரத் ஆகும்; என்னை அவர்கள் கொலை செய்தால் அது எனக்குக் கிடைக்கும் ஷஹாதாத் ஆகும்."

சிறையில் தொழுகையை நிறைவேற்றும்போது ஸுஜூதில் அவர்கள் பின்வருமாறு பிரார்த்தனை புரிவார்கள்:

"யா அல்லாஹ்! உன்னை நினைக்கவும் உனக்கு நன்றியுள்ளவனாக வாழவும் அழகிய முறையில் வழிபட்டு வணக்க வழிபாடுகளைச் செய்யவும் நீ எனக்கு உதவுவாயாக."

எமது முன்னோர்கள் இவ்வுலகை மறுமைக்கான விளைநிலமாகவே பயன்படுத்தினார்கள். உலக செயற்களத்தில் மறுமை ஈடேற்றத்திற்கு தமது தயார் நிலை போதுமானதா? என்பதே அவர்களது உள்ளத்தை, ஆன்மாவை நிரப்பியிருந்த கேள்வி.

ஒரு முறை அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் ஸூரா காபை ஓதிக் கொண்டிருந்தார்கள். "மரண வேதனை உண்மையை உணர்த்த வந்து விட்டது. எதிலிருந்து நீ விரண்டோடிக் கொண்டிருந்தாயோ அதுதான் இது" **(50: 19)** என்கின்ற வசனத்தை நா உச்சரித்தபோது அவர் அழுது விட்டார். அழுது கொண்டே திரும்பத் திரும்ப ஓதிக் கொண்டிருந்தார். அதிகாலை தொழுகைக்கான நேரம் வருகின்ற வரை அவர் அவ்வசனத்தை திரும்பத் திரும்ப ஓதிக் கொண்டிருந்தார்.

"வாருங்கள் தோழரே சற்று நேரம் ஈமான் கொள்வோம்; வாருங்கள் எங்கள் ஈமானைப் புதுப்பித்துக் கொள்வோம்" என்பவைதான் ஸஹாபாக்கள் ஒருவரை ஒருவர் சந்தித்தால் உரையாடும் ஆரம்பப் பாடம். உலகம், அதன் இன்பங்கள் அவர்களை சற்று ஆக்கிரமித்துக் கொண்டாலும் தாம் முனாபிக்களாகி விட்டோம் என்று அஞ்சினார்கள். தலைமயிரின் அளவு அற்பமான தவறொன்று நிகழ்ந்து விட்டாலோ மலையின் அளவு பாவம் செய்து விட்டதாகவே அவர்கள் எண்ணினார்கள். இதன் காரணமாகவே "இராப்பொழுதில் அவர்கள் துறவிகள்; பகல் பொழுதில் குதிரை வீரர்கள்" என வரலாறு அவர்களை சிறப்பித்துக் கூறுகிறது.

### அறிவு எனும் செயற்களத்தில் முன்னோர்கள்

எழுத வாசிக்கத் தெரியாத சமூகம், எழுத்துக்கும் வாசிப்புக்கும் அத்திவாரமிட்டது. அறிவொளியால் உலகம் பிரகாசிக்கக் காரணமாய் அமைந்தது. பலிபீடங்களாய்

> "அவர்கள் என்னை சிறையில் அடைத்தால் இறைவனை தனிமையில் வணங்கக் கிடைத்த பாக்கியமாகும்; ஊரிலிருந்து என்னை அவர்கள் வெளியேற்றினால் அல்லாஹ்வின் பாதையில் புரியும் ஹிஜ்ரத் ஆகும்; என்னை அவர்கள் கொலை செய்தால் அது எனக்குக் கிடைக்கும் ஷஹாதாத் ஆகும்."

PUBLIC LIBRARY
JAFFNA


இருந்த உலகை பல்கலைக்கழகங்களாக மாற்றிய பெருமை எமது முன்னோர்களுக்குரியதே. "மனித சமூகத்திற்குத் தேவையான சகல பணிகளும் முஸ்லிம்களால் பூர்த்தி செய்யப்பட்டிருக்கின்றன. ஒப்புவமை இல்லாத தத்துவ ஞானி அல்பாராபி, மாபெரும் கணித மேதைகளான அபுல் காமில், இப்றாஹீம் இப்னு ஸீனா ஆகியோர் முஸ்லிம்களே. தலைசிறந்த புவியியலாளரான அல்மஸ்ஊதியும் வரலாற்றாசிரியரான தபரியும் முஸ்லிம்களே" என அமெரிக்க வரலாற்றாசிரியர் ஜோர்ஜ் சார்ட்டன் குறிப்பிடுகின்றார்.

ஹிஜ்ரி இரண்டாம் ஆண்டு பத்ர் யுத்தத்திற்கான அழைப்பு வருகிறது. 12 வயதுகூட நிரம்பாத ஒரு சிறுவன் வாளொன்றுடன் நபிகளாரிடம் வருகின்றான். அவனை விட அவனது வாள் நீண்டதாக இருந்தது. யுத்தத்தில் கலந்துகொள்ள நபியவர்கள் அவருக்கு சந்தர்ப்பம் வழங்கவில்லை. கவலையோடு சிறுவன் வீடு திரும்புகின்றான். திரும்பி வரும் தனயனைக் கண்ட தாயும் கவலையடைகின்றார். மாற்று வழியாக அல்குர்ஆனை மனனமிட தாய் வழிசெய்கின்றார். பின்னர் தாயுடன் நபிகளாரை சந்தித்த சிறுவன் தான் மனனம் செய்த அல்குர்ஆன் வசனங்களை நபிகளாரிடம் ஒப்புவிக்கின்றார். சிறுவனின் திறமையைக் கண்ட நபியவர்கள் பூரித்துப் போகின்றார்கள். உடனே பத்ரில் கைது செய்யப்பட்டவர்களிடம் கற்றுக் கொள்ள சிறுவனுக்கு ஏற்பாடு செய்கின்றார்கள். 17 நாட்களில் யூத மொழியைக் கற்றுக் கொள்கிறான் சிறுவன். அதைத் தொடர்ந்து உரோம, கிப்திய மொழிகளைக் கற்றுக் கொள்கிறான். இந்த நபித் தோழரை அவரது 13ஆவது வயதில் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தனது பிரத்தியேகச் செயலாளராகவும் மொழிபெயர்ப்பாளராகவும் நியமிக்கின்றார்கள்.

இவர்தான் வஹியை எழுதுவோரில் ஒருவராக இருந்தார். அபூபக்ர், உஸ்மான் (ரழியல்லாஹு அன்ஹுமா) அவர்களது காலத்தில் அல்குர்ஆனை ஒன்று திரட்டும் பணிக்கு தலைமை தாங்கியவரும் இவரே. அவர்தான் ஸைத் இப்னு ஸாபித் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள். அறிவியக்க சமூகத்தின் தொடக்கம் இப்படித்தான் ஆரம்பித்தது. விளைவாக அறிவை ஆசிக்கும், தேடும் மாணவர் பரம்பரை வரலாறு நெடுகிலும் உருவாகியது.

இமாம் மாலிக் (ரஹிமஹுல்லாஹ்) அவர்களது சபையில் 5000 பேர் கற்பதற்காக அமர்வார்கள். 500 பேர் இமாமவர்கள் கற்பிப்பதை பதிவு செய்வார்கள். 4500 பேர் அறிவையும் பண்பாட்டையும் கற்றுக் கொண்டார்கள் என வரலாறு நினைவுகூர்கிறது. ஹிஜ்ரி 36இல் நிர்மாணிக்கப்பட்ட ஜாமிஉ அம்ரிப்னுல் ஆஸ் மஸ்ஜிதில் 40க்கும் அதிகமான கல்வி வட்டங்கள் காணப்பட்டன. இமாம் ஷாபிஈ (ரஹிமஹுல்லாஹ்), இமாம் தபரி (ரஹிமஹுல்லாஹ்) போன்றோர் இப்பள்ளிவாயலில் பாடப் போதனைகளை நடத்தியுள்ளனர். கெய்ரோ ஜுமுஆ மஸ்ஜிதில் இஷாத் தொழுகையின் பின்னர் 110 வகுப்புகள் நடைபெற்றுள்ளன. அவற்றில் மொழி, இலக்கியம், கவிதை, வானியல், கணிதம் போன்ற துறைசார் கற்கைகள் குறிப்பிடத்தக்கவை.

உஸ்மானியப் பேரரசின் 7ஆவது ஸுல்தான் முஹம்மத் அல்பாதிஹ் அவர்கள் அறிவியக்கத்திற்கு வழங்கிய பங்களிப்பை வரலாறு சிலாகித்துக் கூறுகின்றது. ஆட்சியாளராக இருந்த அவர் துருக்கி, பிரான்ஸ், லத்தீன், கிரேக்கம், செர்பி, பாரசீகம், அரபு, ஹீப்ரு மொழிகளில் புலமை பெற்றிருந்தார். ஆல்குர்ஆன், ஹதீஸ், பிக்ஹ் முதலான துறைகளில் புலமைமிக்கவராகவும் கணிதம், வானியல், வரலாறு, நிர்வாகம் ஆகிய துறைகளில் தேர்ச்சி மிக்கவராகவும் காணப்பட்டார். தனது இல்லத்தில் வாசிப்பதற்காக நூலகமொன்றை உருவாக்கினார். அதில் 12 ஆயிரம் நூல்களை அவர் சேமித்து வைத்திருந்தார். அறிவுள்ள சமூகமொன்றை நிர்மாணிக்கும் நோக்கோடு எட்டு பாடசாலைகளை நிறுவி சிறப்புத் தேர்ச்சி பெறும் கல்வித் திட்டத்தை அமுல் செய்தார்.

அறிவியல் செயற்களத்தில் செயற்படுவதற்கு ஆட்சி, அதிகாரம், நிர்வாகம், எதிரிப் படைகள் என்பன எமது முன்னோர்களுக்கு தடையாக இருக்கவில்லை. அறிவின் ஒரு செய்தியை மறந்த கவலையின் காரணமாக எமது முன்னோர்கள் நோயுற்று மரணமடைந்த நிகழ்வுகளை வரலாறு பதிவு செய்து வைத்திருக்கின்றது.

இமாம் முஸ்லிம் அவர்கள் ஹதீஸ் தொடர்பாக பிறருடன் கலந்துரையாடிக் கொண்டிருந்த சமயம் அவர்களிடத்தில் ஒரு ஹதீஸ் குறித்து வினவப்பட்டது. அது அவரது நினைவுக்கு வரவில்லை. வீட்டுக்கு விரைந்த இமாமவர்கள் தான் ஹதீஸ்களை எழுதி வைத்திருந்த பிரதிகளை விரித்து விரித்து விடியும் வரை அறையிலிருந்த பேரீத்தம் பழங்களை சுவைத்தவர்களாக தேடினார்கள். இறுதியில் ஹதீஸும் கிடைத்தது. ஹதீஸை மறந்து விட்டேனே என்ற கவலையும் தன்னையறியாமல் பேரீத்தம் பழங்களை அதிகமாக சாப்பிட்டதனாலும் இமாமவர்கள் நோயில் வீழ்ந்தார்கள். இதுவே அன்னாரின் மரணத்துக்கு உடனடிக் காரணமாக அமைந்தது. எமது முன்னோர் அறிவைப் பாதுகாப்பதிலும் அதனைப் பரப்புவதிலும் காட்டிய அக்கறை அற்புதமானது.

தமது செல்வக் குழந்தைகளை அறிவியல் களத்தின் செயற் திறன் மிக்க செயற்பாட்டாளர்களாக மாற்றுவதில் அவர்கள் கூடுதல் கவனம் செலுத்தினார்கள். மதீனாவில் வாழ்ந்த பர்ரூஹ் என்பவர் திருமணம் முடித்து அவரது மனைவி கருவுற்றிருக்கும் காலத்தில் தன் மனைவியிடம் "நான் இறை வழியில் செல்ல விரும்புகின்றேன்" என தனது விருப்பத்தை வெளிப்படுத்தினார். அதற்கு அவரது மனைவி "எங்களை யாரிடம் ஒப்படைத்துச் செல்லப்

போகின்றீர்கள்?" எனக் கேட்க "அல்லாஹ்விடம்" என்று பதிலளித்து விட்டு தனது மனைவியிடம் 30,000 திர்ஹம் களை வழங்கி விட்டு அவர் சென்று விட்டார். 30 வரு டங்களுக்குப் பின் ஊர் திரும்பி வெகு சிரமத்தோடு வீட்டை அடையாளம் காண்கிறார். வீட்டிற்குள் நுழைந்தபோது ஒரு வாலிபன் அமர்ந்திருப்பதைக் கண்ட பர்ரூஹ் "நீ யார்?" என வினவுகிறார். "நீங்கள்தான் வீட் டிற்குள் புதிதாக நுழைந்தவர். நீங்கள்தான் யாரென்று சொல்ல வேண்டும்?" இருவருக்குமிடையே தர்க்கம் உக்கிரமடைய மக்கள் ஒன்றுகூடிவிடுகின்றார்கள். சத்தம் கேட்டு வெளியே வந்த பர்ரூஹின் மனைவி விடயத்தைப் புரிந்து கொண்டு மகனுக்கு தந்தையை அறிமுகம் செய்கின்றார்கள்.

அன்றிரவு வீட்டில் தங்கும்போது தனது மனைவியிடம் தான் வழங்கிச் சென்ற 30,000 திர்ஹங்களுக்குரிய செலவு விபரத்தை பர்ரூஹ் கேட்க சற்று பொறுத்திருக்குமாறு மனைவி வேண்டிக் கொண்டார். அதிகாலை பஜ்ர் தொழுகைக்காக மஸ்ஜிதுந் நபவிக்கு சென்றபோது தொழுகை நிறைவடைந்து பெருந்திரளான மக்கள் சூழ்ந்திருக்க ஒருவர் பாடபோதனை நடத்திக் கொண் டிருந்தார். தொழுகையை நிறைவு செய்த பர்ரூஹ், ஆசிரியர் யார் என்பதை அடையாளம் கண்டுகொள்ள முயற்சித்தபோதும் முடியாமல் போகவே அங்கிருந்த ஒருவரிடம் விசாரிக்கின்றார். "உமக்கு இந்த இமாமைத் தெரியாதா? நீர் ஊருக்குப் புதியவரா?" என வினவுகின்றார் அவர். "எனது ஊர் இதுதான். நீண்ட காலத்திற்குப் பின்னர் வந்துள்ளேன்" என்றார் பர்ரூஹ். "இவர்தான் ரபீஅத்துர் ராஈ. பர்ரூஹ் என்பவருடைய மகன்" என்றார் அவர். இதனைக் கேட்டதும் பர்ரூஹ் அகமகிழ்ந்து போனார். தன் மனைவியிடம் சென்று மகிழ்ச்சியை வெளிப்படுத் தினார். அப்போது மனைவி "இதுதான் நீங்கள் ஒப்ப டைத்த 30,000 திர்ஹங்களுக்குமுரிய கணக்கு" என் றார்கள். இமாம் ரபீஆவிடம் இமாமுல் மதீனா என சிறப்பிக்கப்படும் இமாம் மலிக் அவர்களும் மாணவராக இருந்து கல்வி கற்றிருக்கின்றார்கள்.

எமது முன்னோர்கள் அறிவை நேசித்தார்கள். அறி ஞர்களை நேசித்தார்கள். அறிஞர்களோடு நேசம் பாராட் டுவதை தம் வாழ்வில் கிடைத்த பெரும் பாக்கியமாகக் கருதினார்கள். அறிஞர்களை எங்கு கண்டாலும் எதனையேனும் புதிதாக அறிந்து கொள்ள வேண்டும் என்கிற தணியாத தாகத்துடன் ஒரு பெரும் கூட்டம் திரண்டுவிடும்.

ஒரு தடவை கலீபா முஆவியா இப்னு அபீ சுப்யான் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் ஹஜ் பயணம் மேற்கொண்டார். அதே ஆண்டு 'ஹகீமுல் உம்மா' (சமுதாயத்தின் ஞானி) எனப்படும் இப்னு அப்பாஸ் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களும் ஹஜ்ஜுக்கு சென்றிருந்தார். அந்த வேளையில் அவர் அரச பதவிகள் எதிலும் இருக்கவில்லை. கலீபா முஆவியாவுடன் அதிகாரிகள், அலுவலர்கள், வணிகர்கள், பிரமுகர்கள், பாதுகாவலர்கள் என ஏராளமானோர் வருகை தந்திருந்தனர். இதே போன்று அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களுடனும் கல்வியார்வத்தில் திளைத்த மிகப் பெரும் கூட்டம் ஒன்று கூடவே வந்திருந்தது. இவ்விருவரும் மக்கா வின் பாதையில் சென்றபோது கலீபாவுடன் சென்றவர்களை விட இப்னு அப்பாஸுடன் சென்றவர்கள் தொகைதான் அதிகமாக இருந்தது.

அறிவைத் தேடிய சமூகம் அதன் ஆணி முத்துக்களை அள்ளி எடுத்தது. அதனை உலகுக்கு வாரி வழங்கியது. அலி இப்னு ஸீனாவும் இப்னு கல்தூனும் இத்ரீஸியும் அஸ்ஸஹ் ராவியும் அல்பிரூனியும் இப்னு நபீஸும் குவாரிஸ்மியும் அறிவியக்க வானின் மங்கா நட்சத்திரங்கள். மருத்துவம், விஞ்ஞானம், புவியியல், வானியல், கணிதவியல், அழகியல், கட்டடக் கலை, தாவரவியல், விலங்கியல் என எண்ணற்ற துறைகளின் கருவாக எமது முன்னோர்கள் ஆற்றிய பங்களிப்பு காத்திரமானது மட்டுமல்ல, விசித்திரமானதும்கூட.

(மிகுதி அடுத்த இதழில்)

**மாவனல்லை பதுரியா BASE-System**
**வழங்கும் உயர்தர விஞ்ஞான கற்கை நெறி**

2014 ஆம் ஆண்டு க.பொ.த.(சாதாரண தரத்தில்) பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு

**Baduriya Advanced Level Science Education (BASE) System**

பதுரியா மத்திய கல்லூரியுடன் இணைந்து நடாத்தவிருக்கும் விஞ்ஞானம் மற்றும் கணித உயர்தர வகுப்புகளில் இன்றே உங்களைப் பதிவு செய்து கொள்ளலாம்.

தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளிலான இவ்வகுப்புக்கள் தேர்ச்சியும் பயிற்சியும் மிக்க சிறந்த ஆசிரியர்களால், பாதுகாப்பான இஸ்லாமிய சூழலில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் தொடக்கம் ஆரம்பிக்கப்பட இருக்கின்றன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**சிறந்த உயர்தரப் பெறுபேறுகளைப் பெற விரும்புகின்ற, நாட்டின் எப்பாகத்தில் இருக்கின்ற மாணவர்களும் இவ்வகுப்புக்களில் கலந்து பயன் பெறலாம்.**

அதிபர்
பதுரியா மத்திய கல்லூரி
மாவனல்லை
தொடர்புகளுக்கு:

**0774090283, 0718369311**

# இஸ்லாமிய கற்கைகளுக்கும் பயிற்றுவித்தலுக்குமான 5 வருட வதிவிட கற்கை நிலையம்


## الكلية الإصلاحية العربية للبنات - بوتالام

## Islahiyyah Ladies Arabic College - Puttalam









**அரபு மொழி மற்றும் இஸ்லாமிய கலைகள்**

- Diploma in Islamic Studies & Arabic Language (முதல் 2 வருடங்கள்)
- Higher Diploma in Islamic Studies & Arabic Language (அடுத்த 3 வருடங்கள்)

**அரச அங்கீகாரம் பெற்ற ஷரீஆ சான்றிதழ்கள்**

- முஸ்லிம் தஹம் பாடசாலை இறுதிச் சான்றிதழ்
- தீனிய்யாத் (தர்மாச்சாரிய) சான்றிதழ்
- அல்ஆலிம் முதவஸ்ஸிதா சான்றிதழ்
- அல்ஆலிம் ஸானவிய்யா சான்றிதழ்

**தகவல் தொழில்நுட்பம்**

- அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் கற்கை (3ம் வருடத்தில்)

**சான்றிதழ் தர பயிற்சிநெறிகள்**

- நூலக விஞ்ஞானம்
- ஊடகவியல்

**மொழிவிருத்தி**

- தமிழ்
- ஆங்கிலம்
- சிங்களம்

**கலைமாணி பட்டப்படிப்பு**

- கலைத்துறையில் G.C.E. A/L (முதல் 2 வருடங்கள்)
- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் அங்கீகாரம் பெற்ற பட்டப்படிப்புக்கு தயார்படுத்துதல்

**த'.வா மற்றும் தொழில் தகைமை பயிற்சிநெறிகள்**

- குர்ஆன் மத்ரஸா
- முன்பள்ளி

**உன்னதமிக்க இஸ்லாமிய குடும்பங்களின் - தலைவிகளாய்,**

**த'.வா களத்தின் வெற்றிகரமான - தாஇய்யாக்களாய்,**

**இலங்கை தேசத்தின் பொறுப்பு மிக்க - பிரஜைகளாய்,**

**நின்றுழைக்கும் ஆலிமாக்களை உருவாக்குதல்.**

### 25 வருட அடைவுகள்

| | |
|---|---|
| கற்கைநெறியை நிறைவு செய்தோர் | - 471 |
| பல்கலைக்கழக பட்டப்படிப்பை நிறைவு செய்தோர் | - 104 |
| பட்டப்படிப்பை தொடர்வோர் | - 232 |
| அல்அஸ்ஹர் ப.கழகத்தில் மேற்படிப்பைத் தொடர்வோர் | - 04 |
| முதுமாணி பட்டத்தை நிறைவு செய்தோர் | - 02 |
| முதமாணி பட்டப்படிப்புக்கு பதிவு செய்துள்ளோர் | - 07 |
| கல்வியியல் கல்லூரியில் பயின்றோர் | - 55 |
| தனியார் பாடசாலைகளில் கற்பிப்போர் | - 30 |
| மத்ரஸாக்களில் கற்பிப்போர் | - 22 |
| ஏனைய அரச நிறுவனங்களில் பணிபுரிவோர் | - 10 |

**நேர்முகப் பரீட்சை இன்ஷா அல்லாஹ் 2014 க.பொ.த. (ச/த) பெறுபேறுகள் வெளியானதன் பின்னர் அறிவிக்கப்படும்.**

**நுழைவுக் கட்டணம்:** Rs. 20,000/=

**மாதக் கட்டணம்:** Rs. 5,000/=

மேலதிக விபரங்களுக்கு, Islahiyyah Ladies Arabic College
185, Mannar Road, Puttalam, SL.
Tel & Fax: +94 32 2266638, Mobile: 0777 859905, 0773 171726, Email: islahiyalac@gmail.com

## நீங்களும் ஒரு சிறந்த முன்பள்ளி ஆசிரியையாக வரவேண்டும் என்று விரும்புகின்றீர்களா?

## மாதருக்கென்றே வடிவமைக்கப்பட்ட இப்பாடநெறியில் இன்றே இணைந்து கொள்ளுங்கள்.

எமது நிறுவனம் இப்பாடநெறியைத் தொடர்வதற்கு TVEC (Tertiary and Vocational Education Commission ) மற்றும் Ministry Of Child Affairs என்பவற்றில் அங்கீகாரம் பெற்றது.

- மிகக் குறைந்த கட்டணம் (தவணை முறையிலும் செலுத்தலாம்)
- தொழில் பயிற்சியும் வழங்கப்படும்
- தேர்ச்சியும் அனுபவமும் உள்ள விரிவுரையாளர்கள்
- கற்கைத் துணைச் சாதனங்கள் அனைத்தும் காணப்படுகின்றன.

பதிவுகளுக்கு முந்திக் கொள்ளுங்கள்

ஒரு பாடநெறியைக் கற்பதன் மூலம் பின்வரும் (4) நான்கு சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.



1. Diploma in Pre - School Training
2. Diploma in Child psychology
3. Certificate in presentation Skills (Train the trainer)
4. Diploma in AMI Method

வார இறுதி நாட்களில் வகுப்புகள் நடைபெறும்

## உலகில் மிக வேகமாக வளர்ந்து வரும் மற்றும் அதிகமான வேலைவாய்ப்புக்களை அள்ளிவரும் இஸ்லாமிய வங்கித்துறையில் நீங்களும் இணைய விரும்புகிறீர்களா?

இஸ்லாமிய வங்கி மற்றும் நிதியியல் துறையில் கற்கைநெறிகளை நடாத்தும் முன்னோடி நிறுவனமான IBS Campus இல் இணைந்து உங்கள் கல்வித் தகைமைகளை உறுதி செய்து கொள்ளுங்கள்.



- தேர்ச்சி பெற்ற விரிவுரையாளர்கள்
- மாணவர்களிடம் தனிப்பட்ட கவனம்
- இத்துறையில் சர்வதேச பரிசில்கள் பலவற்றை வெல்ல வைத்த பல வருட அனுபவம்
- நியாயமான கட்டணம்
- அரச அங்கீகாரம்
- உடனடி வேலைவாய்ப்பு சந்தர்ப்பங்கள்
- இப்பாடநெறியில் இணைந்து கொள்ளும் முதல் 10 மாணவர்களுக்கு மிகப் பெறுமதி வாய்ந்த முப்தி பேராசிரியர் தகிஉஸ்மானி எழுதிய An Introduction to Islamic Finance நூல் இலவசமாக வழங்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கும் பதிவுகளுக்கும்

## IBS Campus (Pvt) Ltd

67, Kawdana Road, Dehiwala Tel: 2712149, 0777394208

▲ பாத்திமா ஸைனப் பின்த் பவாஸ் ▲

சியைக் கண்டிராவிட்டால் அவளை விரும்பியிருப்பார். அவரிடமிருந்து தீமையையும் மானக்கேடான செயலையும் அகற்றவே இவ்வாறு நாம் செய்தோம்." (12: 24)

இந்த வசனத்திலுள்ள "ஹம்ம" என்ற சொல் மொழி ரீதியாக இரண்டு விதங்களில் விளக்கப்படுகிறது. ஒன்று, ஒருவர் நிறைவு செய்து கொள்ள விரும்புகின்ற ஒரு கட்டாயத் தேவை. அடுத்தது, ஒருவர்

"கதை சொல்வதிலும்கூட குர்ஆனின் புனிதத் தன்மையைப் பாருங்கள்! அப்பெண்ணை நேரடியாக "அமைச்சரின் மனைவி" என்று குறிப்பிடாமல் "எந்தப் பெண்ணின் வீட்டில் இருந்தாரோ அவள்" என்று குறிப்பிடுகிறது."

# ஸுலைஹா:
## தீமையின்பால் சாயும் மனித ஆன்மா!

இறைதூதர் யூஸுஃப் (அலைஹிஸ்ஸலாம்) எகிப்தின் முதலமைச்சருடைய மாளிகையில் பல வருடங்களைக் கழிக்க வேண்டியிருந் தமை அவர் எதிர்கொண்ட முக்கிய சோத னைகளுள் ஒன்றாகும். சிறுபராயம் முதல் வாலிபப் பருவம் வரை மாளிகையில் வளர்ந்து வந்த யூஸுஃப் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களின் அழகையும் எழிலையும் கண்ட அமைச்சரின் மனைவி ஸுலைகா அவர் மீது அளவு கடந்த மோகம் கொண்டாள்.

"அவர் எந்தப் பெண்ணின் வீட்டில் இருந் தாரோ, அவள் அவர் மீது மோகம் கொண்டு வாயில் களையெல்லாம் மூடிவிட்டு தவறான நடத் தைக்கு 'வாரும்' என அழைத்தாள்." (12:23)

கதை சொல்வதிலும்கூட குர்ஆனின் புனிதத் தன்மையைப் பாருங்கள்! அப்பெண்ணை நேரடியாக "அமைச்சரின் மனைவி" என்று குறிப்பிடாமல் "எந்தப் பெண்ணின் வீட்டில் இருந்தாரோ அவள்" என்று குறிப்பிடுகிறது. அவர் மீது மையல் கொண்ட அப்பெண் இந் நிகழ்வுக்கு முன்னர் பல தடவைகள் மறைமுக மாகவும் நளினமாகவும் அழைப்பு விடுத்திருக்க வேண்டும்.

அவரது பேரழகில் மயங்கிய அவள் தன் னை இனியும் கட்டுப்படுத்த முடியாது என்ற நிலை வந்தபோதே தன்னை நன்கு அலங்க ரித்துக் கொண்டு, கதவுகள் அனைத்தையும் தாழிட்டுவிட்டு அவரை நிர்ப்பந்தித்துள்ளார்.

"அவள் அவரை அடையத் திடமாக நாடி விட்டாள். அவரும் தம் இறைவனின் அத்தாட்

இன்னும் அடைந்து கொள்ளாத மனோ இச்சை.

"தப்பிப்பதற்காக அவரும், பிடிப்பதற்காக இவளுமாக இருவரும் வா யிலை நோக்கி ஓடினர். அவள் பின்புறமாக அவரது சட்டையை இழுத் துக் கிழித்து விட்டாள்." (12:25) அப்போது அவர்கள் இருவருக்கும் பேரதிர்ச்சி தரும் ஒரு நிகழ்வு காத்திருந்தது. "அவளது கணவனை வாயிலடியில் அவ்விருவரும் கண்டனர்." (12: 25)

கதவுகளைத் தாழிட்டதன் பயனென்ன? அவள் சூழ்ச்சியாலும் சதியாலும் அந்நெருக்கடியிலிருந்து மீள முயன்றாள். கணவனிடம் தன்னை நிரபராதியாகக் காட்டிக் கொண்ட அவள், யூஸுஃப் தன் னைக் கற்பழிக்க முயன்றதாகப் பழிசுமத்தி, "உமது மனைவிக்குத் தீங் கிழைக்க நாடியவருக்குரிய கூலி, அவர் சிறையில் அடைக்கப்படுவதோ அல்லது கடுமையாகத் தண்டிக்கப்படுவதோ அன்றி வேறு எதுவாக இருக்க முடியும்?" என்று கேட்டாள். (12: 25)

உண்மை வெளிச்சத்துக்கு வந்தவுடன் அவளது கணவர் "யூஸுஃபே! நீர் இதைப் பொருட்படுத்தாதீர். பெண்ணே! நீ உன் பாவத்திற்கு பாவ மன்னிப்புத் தேடு. நிச்சயமாக நீயே தவறு செய்தவர்களில் இருக்கிறாய் என்று கூறினார்." (12: 29)

ஏனெனில், அரச குடும்பங்களில் இவை சாதாரண நிகழ்வுகளாகும்.

மாளிகையின் சுவர்களுக்கும் செவிகள் உள்ளன என்று சொல் வார்கள். எனவே அந்தரங்கத்தில் நடைபெற்ற அனைத்து சூழ்ச்சிகளும் பகிரங்கப் பேசுபொருளாக மாறிவிட்டன. அமைச்சரின் மனைவி தன் அடிமை வாலிபரைத் தன் விருப்பத்துக்கு இணங்க வற்புறுத் துகிறாள் என்றும் அவர் மீதுள்ள மோகம் அவளை அழித்து விட்டது என்றும் எகிப்திலிருந்த தலைவர்கள், அதிகாரிகள் ஆகியோரின் மனைவிமார் பேசலாயினர்.

"அமைச்சரின் மனைவி தன் வீட்டிலுள்ள இளைஞர் மீது மோகம் கொண்டு விட்டாள். அவர் மீது கொண்ட மோகம் அவளை மயக்கிவிட்டது. நிச்சயமாக அவளைப் பகிரங்கமான வழிகேட்டில் இருப்ப தாகவே நாம் காண்கிறோம் என்று அந்நகரில் உள்ள பெண்கள் கூறினர்." (12:30)

அரசாங்கத்திலுள்ள ஓர் உயர் அதிகாரியை மணந்துள்ள அப்பெண் ஏனைய பெண்களுக்கு முன்மாதிரியாக இருக்க வேண்டியவள் என்று அவர்கள் கருதியிருக்க வேண்டும். ஆனால், அவர்களது மனோநிலையும் எத்தகையது? இப்னு இஸ்ஹாக் (ரஹிமஹுல்லாஹ்) குறிப்பிடுகிறார்.

"யூஸுப் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களின் பேரழகு பற்றிய செய்தி அப்பெண்களுக்குக் கிடைத்ததும் அவரைப் பார்க்க வேண்டும் என்று அவர்கள் ஆசைப்பட்டனர். எனவே அமைச்சரின் மனைவியைக் கடுமையாகக் குறை கூறினால் யூஸுஃபை நேரடியாகப் பார்க்க அவள் ஏற்பாடு செய்வாள் என்று கருதினார்கள்."

மேற்கூறிய 12:30 வசனத்தில் அப்பெண்களைக் குறிக்க 'நிஸ்வத்' என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இது 'நிஸா', என்ற சொல்லிலிருந்து வேறுபடுகிறது. இந்த சம்பவத்தில் அந்நகரத்தைச் சேர்ந்த பெண்கள் அந்தஸ்து, இயல்பு, நிகழ்ச்சி நிரல் முதலானவற்றில் ஒன்றிணைந்து சம்பந்தப்பட்டுள்ளார்கள். அனைவரின் நோக்கமும் அமைச்சரின் மனைவியை மட்டம்தட்டி விடுவதாகவே இருந்துள்ளது.

"இவர்களின் சூழ்ச்சியைச் செவியுற்ற அவள் அவர்களிடம் விருந்துக்காகத் தூதனுப்பி, சாய்மானத்தையும் அவர்களுக்கு ஏற்பாடு செய்தாள்." (12: 31)

மாளிகைக்கு அழைக்கப்பட்ட அப்பெண்களும் கிட்டத்தட்ட அதே அந்தஸ்தில் உள்ளவர்களாக இருக்க வேண்டும். உயர் அரச குடும்பங்களில் மட்டுமே நடைபெறும் இன்னொரு நிகழ்வு அடுத்து வருகிறது. பல ஆயிரம் வருடங்களுக்கு முன்பு பழங்களை நறுக்கிச் சாப்பிட ஒவ்வொருவருக்கும் கத்திகள் கொடுக்கப் பட்டிருந்தமை அன்று அவர்கள் அடைந்திருந்த ஆடம்பர நாகரிகத்தை எடுத்துக் காட்டுகிறது. "அவர்கள் ஒவ்வொருவரிடமும் கனிகளை வழங்கி கத்தியைக் கொடுத்து 'இப்பெண்களுக்கு எதிரே செல்லும்' என யூஸுஃபிடம் கூறினாள். அவரை அப்பெண்கள் கண்டபோது அவர் அழகில் மயங்கி, அவரை மிக மேன்மையாகக் கண்டு தமது கைகளை வெட்டிக் கொண்டனர்." (12: 31) அவர்களுக்கு ஏற்பட்ட ஆச்சரியத்தால் அல்லாஹ்வின் படைப்புக்களிலுள்ள அற்புதத் தன்மையைப் பார்த்தும் "அல்லாஹ் தூய்மையானவன்! இவர் மனிதரேயல்லர். இவர் கண்ணியத்துக்குரிய ஒரு மலக்கேயன்றி வேறில்லை" என்று கூறினர்." (12:31)

அனைத்துப் பெண்களும் இவரது அழகில் மயங்கிய போது "இவர் விடயத்தில்தான் என்னை நீங்கள் பழித்துப் பேசினீர்கள். 'நான்தான் அவர் மீது மோகம் கொண்டேன். அவர் தன்னைப் பாதுகாத்துக் கொண்டார்' என்று அமைச்சரின் மனைவி கூறினாள்." (12: 32)

"என் விருப்பத்தக்கு நான் அவரை அழைத்தும் அவர் மறுக்கவே செய்தார்" என்பதன் மூலம் அவரது அக அழகையும் அவள் அப்பெண்களுக்கு விவரித்தாள். பிறகு, அப்பெண்களுக்கு முன்னால் இனியும் வெட்கப்படுவதற்கு என்ன இருக்கிறது என்று அவளுக்குத் தோன்றியது போலும்! எனவே, இன்னோர் அழைப்பு பகிரங்கமாக ஓர் அச்சுறுத்தலுடன் இணைந்து வருகிறது.

"நான் கட்டளையிடுவதை அவர் செய்யாவிட்டால் அவர் சிறையில் அடைக்கப்பட்டு சிறுமையடைந்தவர்களில் ஆகிவிடுவார் என்று அவள் கூறினாள்." (12: 32)

தான் புரியாத குற்றத்திற்காகப் பல வருடங்கள் சிறைவாசம் அனுபவித்துக் கொண்டிருந்த யூஸுஃப் (அலைஹிஸ்ஸலாம்) பற்றி எகிப்து அரசர் கேள்விப்பட்டதும் "அவரை என்னிடம் கொண்டு வாருங்கள்" என்று கூறினார். அரசரின் தூதுவர் வந்தபோது யூஸுஃப் உன் எஜமானனிடம் சென்று தங்கள் கைகளை வெட்டிக் கொண்ட பெண்களின் நிலை என்ன? என்று கேளும் என்றார்." (12: 50) அப்போது அரசர் அப்பெண்களை வரவழைத்து, "யூஸுஃப் மீது நீங்கள் மோகம் கொண்டபோது உங்களுக்கு நேர்ந்தது என்ன? என்று அரசர் அப்பெண்களிடம் கேட்டார். "அல்லாஹ் எம்மைக் காப்பாற்றுவானாக! நாம் அவரிடம் எந்தத் தீங்கையும் காணவில்லை எனக் கூறினர். அப்போது அமைச்சரின் மனைவி, உண்மை இப்போது வெளிப்பட்டு விட்டது. நான் தான் அவர்மீது மோகம் கொண்டேன். நிச்சயமாக அவர் உண்மையாளர்களில் உள்ளவர் என்று கூறினாள்." (12: 51)

இவ்வாறு நான் உண்மையை ஏற்றுக் கொண்டு வாக்குமூலம் அளித்ததற்குக் காரணம் யாதெனில், என் கணவர் இல்லாத நேரத்தில் அவருக்கு நான் உண்மையில் துரோகமிழைக்கவில்லை என்பதையும் நான் குற்றமற்றவள் என்பதையும் அவர் அறிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகவேயாகும்.


"இது நிச்சயமாக நான் அவருக்கு மறைவில் மோசடி செய்யவில்லை என்பதை அவர் அறிந்து கொள்வதற்காகவேயாகும். என் மனதை நான் குற்றமற்றது என்று கூறவில்லை. என் இறைவன் அருள் புரிந்தாலேயன்றி மனம் தீமையைத் தூண்டக்கூடியதாகவே உள்ளது." (12: 52-53)

இஸ்லாமிய அறிஞர்கள் மனித ஆன்மாவின் நிலையை மூன்று வகைகளாகப் பிரித்துள்ளனர்.

01. மேற்கூறிய (12: 53) வசனத்திலுள்ள தீமையை நாடும் உள்ளம்.

02. நிந்திக்கும் உள்ளம் (75: 2) தான் புரிந்த தீமைகள் பற்றி அலட்டிக் கொண்டு, பாவமன்னிப்புத் தேடி தவறிலிருந்து மீள முயற்சிக்கும் உள்ளம் இதுவாகும்.

03. அமைதியடையும் உள்ளம் (89: 27) பாவங்களிலிருந்து முழுமையாக விலகி நன்மையை மட்டும் நாடி, அதில் நிலைத்திருந்து அமைதியும் ஆரோக்கியமும் பெற்ற உள்ளம் இவ்வகையைச் சாரும். ■



# உலகத்து ஹூருல் ஈனின் சுவனத்துப் பண்புகள் இருபது

- அபூ பரீரா -

அல்குர்ஆன், ஹதீஸின் நிழலில் உலகத்து ஹூருல் ஈனின் சுவனத்துப் பண்புகள் இருபதை பின்வருமாறு அடையாளப்படுத்தலாம்.

1. இறைவன் மீது பரிபூரணமான ஈமான் கொண்டிருப்பாள்.

2. ஐங்காலத் தொழுகை, நோன்பு, ஸகாத் போன்ற பர்ழான வணக்கங்களை அலட்சியப்படுத்த மாட்டாள்.

3. உபரியான வணக்கங்கள், ஓதல்கள், மற்றும் அவ்ராதுகளில் கவனம் செலுத்துவாள்.

4. நன்மையை ஏவி தீமையைக் தடுப்பாள்.

5. ஹிஜாபை உடலுக்கும் உள்ளத்துக்கும் அணிந்திருப்பாள்.

6. உடல், ஆடைகளை வீடு வாசல்களை துப்புரவாக வைத்திருப்பாள்.

7. கல்வி கற்பதிலும் அறிவைத் தேடுவதிலும் ஆர்வமுள்ளவளாய் இருப்பாள்.

8. தோழமை, நட்பு, அன்பு பாராட்டுவதில் இஸ்லாத்தின் வரையறைகளை மீற மாட்டாள்.

9. பெற்றோருக்கு உபகாரம் செய்வதில், உறவுகளை சேர்ந்து நடப்பதில், அண்டை அயலவர்களுக்கு உதவி செய்வதில் இன்பம் காண்பாள்.

10. இறைவனுக்கு அடுத்தபடியாக கணவனுக்கு கீழ்ப்படிந்து நடப்பாள்.

11. கணவனுடன் அன்பாகவும் பிள்ளைகளுடன் பாசமாகவும் நடந்து கொள்வாள்.

12. பிள்ளைகளை வளர்த்தெடுப்பதில், அவர்களுக்கு தர்பிய்யா வழங்குவதில் அதிக பிரயத்தனம் எடுப்பாள்.

13. பிள்ளைகளுக்கும் சகோதரர்களுக்கும் மருமக்களுக்கும் அழகிய அறிவுரைகள் கூறுவாள்.

14. பொய் பேசுவதைத் தவிர்த்து எப்பொழுதும் உண்மை பேசுவாள்.

15. வெட்கத்துடனும் சுயமரியாதையுடனும் நடந்து கொள்வாள்.

16. பிறருக்கு தொல்லையாகவோ பிறர் கண்ணியத்தை பாழ்படுத்தும் விதமாகவோ நடந்து கொள்ள மாட்டாள்.

17. புறம், கோள் பிறர் பற்றிய தீய எண்ணங்களை விட்டும் தன்னைப் பாதுகாத்துக் கொள்வாள்.

18. எல்லோருடனும் அன்பாகவும் மென்மையாகவும் பெருந்தன்மையுடனும் நடந்து கொள்வாள்.

19. சமூக சேவைகளில், பொது விடயங்களில், பிறருக்கு நன்மை செய்வதில் பங்கெடுத்துக் கொள்வாள்.

20. தனது சகல விவகாரங்களிலும் இஸ்லாத்தை அளவுகோலாகக் கொண்டு செயற்படுவாள்.

இவள்தான் உலகில் வாழுகின்ற சுவனத்து ஹூருல் ஈன். இவளது இல்லம் ஒரு சுவனம்.

குடும்ப அங்கத்தவர்களை மறுமையின் சுவனத்தை நோக்கி பயணிக்கச் செய்வதில் இவளது வகிபாகம் அலாதியானது.

இவள் வாழுமிடம் ஒரு குட்டி சுவனமாய் மலரும், இன்ஷா அல்லாஹ்.

எனக்கும் உனக்கும்
மட்டுமேயான போராட்டம் இது!
எனது
உள்ளமும் உணர்வுகளும்
தினந்தினம் சண்டையிடுகின்றன
உன்னோடு!

ஒரு
தொடர் கதை போன்று
நீடித்துக் கொண்டு போகிறது...
உனது இந்த மௌனம்!

இனியும்
பொறுமை இல்லை
என்னிடம்!

எனது
வேதனைகள் யாவும் உனக்கு
வேடிக்கையாகிப் போய்விட்டதா?
போதும் நிறுத்து!
உனது விளையாட்டை!
இந்த மௌனத்தை!

கரைந்து கொண்டிருக்கிறேன்...
இராப் பகலாக
உன்னை எண்ணி!
உனது இந்த மௌனத்தை எண்ணி!!

கருணையின்
சொந்தக்காரன் நீ என...
பல நூறு கவிதைகள் எழுதினேன்
உனக்காக!

நீதிக்கு நிகரானவன்
உனையன்றி எவருமில்லை என்
கதைகள் எழுதினேன்...
பக்கம் பக்கமாக!

உன்னையே நம்பி...
நாடும்படி
கட்டுரைகள் எழுதினேன்
தாராளமாக!!!

உயர்வான
வெற்றிகள் கிடைத்ததாகச் சொன்னார்கள்
அதை படித்தவர்கள்!

எனது கரங்கள்...
என்றுமே தோற்றுப் போனதில்லை...
உன்னிடம்!!

வெற்றிகளால்
எனது வாழ்வை
அழகுபடுத்தியவன் நீ!

நான் அறிவேன்!
இவை உனது தண்டனையல்ல
சோதனைதான்!!

எனினும்
இந்தச் சோதனைகளின் ஆயுளை
அதிகப்படுத்தி விட்டாயே!

(ஏ.சி. ஜரீனா முஸ்தபா, வெலிவிட்ட)

# இது எப்படி நியாயமாகும்?


# நவீன அபாயா



உடலை ஒட்டி
உடம்பை விற்கும்
உடையொன்று தேவையா உனக்கு?
தலையை மறைத்து
கூந்தலைக் காட்டும்
ஒரு துண்டு- ஹிஜாப்
சிந்தித்துப் பார் நீயும்
இது மாநபி வழியா?
இல்லை, யூதர்களின் வலையா?
வாங்கியது உன் குற்றமா?
இல்லை, உன் பெற்றோர் செய்த குற்றமா?
விடை தேடு நீயும்
விடை காண்பாய் விரைவில்!

எம்.எல். நதா பர்வீன், ஜாமிஆ ஆயிஷா ஸித்தீக்கா

# நிமிடங்கள் போதும்



பல வருடங்களை
கடந்த நான்
மாற்றங்களை
அறியவில்லை - ஆனால்
இறை நினைவில்
நிமிடங்களை கழிக்கிறேன்

உணர்கிறேன் இப்போது
கடந்து செல்லும்
ஒவ்வொரு நிமிடமும்
மாற்றங்களுக்கான
சந்தர்ப்பங்களென்று...

இனி வரும் காலங்களோ
மாற்றத்தால்
புதுயுகம் காணவென
இன்ஷா அல்லாஹ்

ரீஸா, மடபொகுனை, மாகோ

PUBLIC LIBRARY
JAFFNA


# எதுவரை வாழ்வது?

நான் வாழ வேண்டும்
மறுமை விளைநிலத்தில்
கண்ணியமான
அறுவடைக்காக
புனிதத்தை
பூமியில் விதைக்கும் வரை - இம்மையில்
என்னை வாழச்செய் அல்லாஹ்!

மண்ணுயிர் அனைத்திலும்
மனிதம் நிலைக்கச் செய்யும்
அந்த
உன்னத பணியில்
நானும் ஓர் அங்கம்
ஆகும் வரை - இம்மையில்
என்னை வாழச்செய் யா அல்லாஹ்!

கருவறை முதல்
கடைசி வரை
என் பணிப் பயணத்தில்
பங்குகொள்வோர்
கடன் அடைக்கும் வரை - இம்மையில்
என்னை வாழச்செய் யா அல்லாஹ்!

செந்தழல் சுவைத்து
செம்மையுற்ற இரும்பென
கருமை அகற்றி
என் இதயம்
வெண்மை அடையும்வரை- இம்மையில்
என்னை வாழச்செய் யா அல்லாஹ்!



என் ஒவ்வொரு
பார்வையும் எண்ணமும்
பேச்சும் மூச்சும்
நேர்மைச் சமஸ்தானத்தில்
நல்லாட்சி புரியும் வரை- இம்மையில்
என்னை வாழச்செய் யா அல்லாஹ்!

▸ இராணி பௌசியா, கல்லளை

# மனதோடு ஓர் உரையாடல்

மனமே! உனக்கு
எப்படித் தெரிந்தது!
உன்னிடம் நிம்மதியென்றேன்
மறையென்றாய்!

சுகம் கேட்டேன்
ஸுஜூதுகளென்றாய்
மனப்பாரமென்றேன்
தஹஜ்ஜுதில் என்னை
வீழ்ந்திடக் கூறினாய்!

ஆறுதல் தேடினேன்
ஈமானிய உறவுகளென்றாய்!
பொறுமையைக் கேட்டேன்
தொழுகையில் நிதானமென்றாய்!

பாசத்தைக் கேட்டேன்
பண்பாடுகளின் பக்கங்களை
பட்டை தீட்டென்றாய்!

தேவையைக் கூறினேன்
படைத்தவனை மட்டும்
தொடர்பு கொள்ளென்றாய்!

மனத்திருப்தி என்றேன்
இறைவனுக்காய் கொடு என்றாய்!
சுவாசிக்கக் கேட்டேன்
நபி வழியும் இறை
மொழியுமென்றாய்!
பெருந்தன்மை என்றேன்
போதுமென்ற மனமென்றாய்!
ஆரோக்கியம் கேட்டேன்
உடற்பயிற்சியும்
வாரமிரு நோன்புமென்றாய்!

நான் நேசிக்கக் கேட்டேன்
வாசிப்பு என்றாய்!
நேரத்தைக் கேட்டேன்
உரிய வேளையில் தொழு என்றாய்!
சந்தோஷமென்றேன்
உன்னால் மட்டுமென்றாய்!
மண்ணறை என்றேன்
அடுத்த வாழ்வின் ஆரம்பமென்றாய்!
மறுமை என்றேன்
அத்தனையும் இதற்கென்றாய்!

சுவனமென்றேன்
பெருமையில்லா அமல்களென்றாய்!
என் இலட்சியமென்றேன்
இறை திருப்தியும் மறுமை வெற்றியுமென்றாய்!
உயிரென்றேன்
இறை பாதையானால்
மரணத்தை சந்திக்க
நொடி கூட சிந்திக்காதே என்றாய்
அத்தனையும் உண்மை என்றேன்
உண்மையானால்
இயற்கை கூட இறையடிமை!
உன் வாழ்க்கைக்கு புதிய
வழி சொல்லும்!

▸ அரபா அப்துல் ரஸ்ஸாக், புத்தளம்




12 YEARS EXPERIENCE
குறுகிய காலத்தில்
Computer Netwoking
துறையில் நிபுனத்துவம் பெறுவதற்கு
CISCO CCNA
Microsoft MCSA
Linux / Cent OS
vmware Virtualization Technology
php MySQL Web Engineering
CITRIX Virtualization Technology
android
Microsoft Hyper-V Virtualization Technology
Cisco Labs with Equipments
CCNA 200-120 Cisco Certified Network Associate
CCNA-Security 640-554 Cisco Certified Network Associate - Security
CCNA-Voice 640-461 Cisco Certified Network Associate - Voice
MCSA 70-410, 411, 412 Microsoft Certified Solutions Associate
MCSE-SI 413 & 414 Microsoft Certified Solutions Expert Server Infrastructure
CCNP-R&S Route, Switch & TShoot Cisco Certified Network Professional
Next Batch: 20/04/2015
Microsoft Labs with Laptops & Servers
Certificate in HARDWARE Networking
Certificate in NETWORK Administration
PHP & MySQL Web Engineering
Server Virtualization
VMware, Citrix & Hyper-v
25% Special Discount
100% Practical Sessions
INTERNET
ONE-DAY Practical Workshop
CCTV Camera Installation, Network Cabling, PABX Intercom & Wireless
*With Lunch, Refreshments & Certificate
Only 2500/-
Next Batch: 22/04/2015
Four-DAYS Residential Practical Workshop
Fiber Cabling, Copper Cabling, CCTV Installation with DDNS (Remote View)
PABX Advanced Technologies with Access Control System
*With Lunch, Refreshments, Toolkit & Certificate
Next Batch A: 23-26/04/2015 | Next Batch B: 05/04/2015(Every Sundays)
ஏன் WinSYS தெரிவு செய்யப்பட வேண்டும்...
▲ 12 வருட அனுபவம் கெண்ட நிறுவனம்
▲ தொழில்துறை அனுபவம் மிக்க பயிற்றுனர்கள்
▲ நவீன வசதிகளுடனான பயிற்சியறை (A/C Labs, Real Routers)
▲ அனைத்து மாணவர்களுக்கும் தனிப்பட்ட கணனி மற்றும் Routers
Our Aniversary Offer
CCNA+MCSA: Just LKR 25000
Hardware+Network: Just LKR 10000
WinSYS NETWORKS
The Network Security Training Provider of the Nation !
Address : 14, Schofield Place, Kollupitiya, Colombo-03
Telephone : 011-2589567 011-2589568 0777-259927
Online : www.winsys.lk info@winsys.lk
HOTLINES
Colombo - 0777-259927
Kandy - 0777-047708
Batticaloa - 0777-832871
Jaffna - 0777-259927
TVEC REG NO: P01-/0402

# BREAKING NEWS!

இலங்கை வரலாற்றில் முதற் தடவையாக ஒரே வகுப்பில் கல்வி கற்ற 12 மாணவர்கள், ஒரே நாளில் MCSA பரீட்சையில் சித்தியடைந்த சாதனை!



Name: Akthar Farvees
Exam: MCSA-410
Marks: 906/1000



Name: M.Abrar
Exam: MCSA-410
Marks: 793/1000



Name: M.Anees
Exam: MCSA-410
Marks: 850/1000



Name: M.Arsath
Exam: MCSA-410
Marks: 868/1000



Name: M.Himas
Exam: MCSA-410
Marks: 850/1000



Name: M.Sarhfarash
Exam: MCSA-410
Marks: 831/1000



Name: M.Sifad
Exam: MCSA-410
Marks: 850/1000



Name: M.Safras
Exam: MCSA-410
Marks: 700/1000



Name: Neel Jeyaruthan
Exam: MCSA-410
Marks: 718/1000



Name: P.Surenraj
Exam: MCSA-410
Marks: 812/1000



Name: R.Sabran
Exam: MCSA-410
Marks: 850/1000



Name: M. Safry
Exam: MCSA-410
Marks: 850/1000

## O/L மற்றும் A/L பரீட்சை எழுதிய உங்களுக்காகவே...

### கண்டி, மட்டக்களப்பு மற்றும் யாழ்ப்பாணம் கிளைகளில்

- MS Office Applications
- Computerized Accounting
- Graphic Designing
- Hardware & Networking
- Web Designing
- Network Administration
- Web Development
- AutoCAD 2D & 3D Drafting

**WinSYS NETWORKS**®

The Network Security Training Provider of the Nation !

Address : 14, Schofield Place, Kollupitiya, Colombo-03
Telephone : 011-2589567 011-2589568 0777-259927
Online : www.winsys.lk info@winsys.lk


HOTLINES

Colombo - 0777-259927
Kandy - 0777-047708
Batticaloa - 0777-832871
Jaffna - 0777-259927

TVEC

மூன்றாம் நிலைக்கல்வி தொழில்கல்வி ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்றது

TVEC REG NO: P01-/0402



அஷ்ஷெய்க் ரிழ்வான் ரிஸ்வி (இஸ்லாஹி)

# வாழ்நாளை ஒழுங்குபடுத்துவோம்; வாழ்வை அழகுபடுத்துவோம்!

இப் பிரபஞ்சத்தைப் படைத்த எல்லாம் வல்ல இறைவன் அது இயங்குவதற்கான ஓர் ஒழுங்கையும் நிர்ணயித்துள்ளான். இவ்வொழுங்குகளை மீறி செயற்படும் ஆற்றல் இப் பிரபஞ்சத்திற்கில்லை. இதுவே இப் பிரபஞ்சத்தின் சீரான இயக்கத்திற்கான அடிப்படை. இவ்வுண்மைகளை அல்குர்ஆன் கீழ்வருமாறு கூறுகிறது:

"சூரியன் சந்திரனை (நெருங்கிப்) பிடிக்க முடியாது; இரவு பகலை முந்த முடியாது. இவ்வாறே எல்லாம் (தம்) வட்டவரைக்குள் நீந்திச் செல்கின்றன." (36: 40)

அவ்வாறே மனித வாழ்வும் ஓர் ஒழுங்கில் இயங்க வேண்டும் என்பதற்காக அல்லாஹ் இஸ்லாம் எனும் வாழ்க்கை ஒழுங்கை எமக்கருளினான். அதில் தனி மனித, குடும்ப வாழ்வொழுங்குகள், ஒரு நாட்டிற்கான அரசியல், பொருளாதார, சமூக, கலாசார ஒழுங்கு விதிகள் என்பவற்றை கண்டுகொள்ள முடியும். இதனால்தான் இஸ்லாத்தை நிழாமுல் ஹயாத் (வாழ்க்கைக்கான ஒழுங்கு விதிகள்) என்று கூறுவது மிகப் பொருத்தமானது.

இவ் வாழ்வொழுங்கில் எப்போது எமது வாழ்நாளை ஒழுங்குபடுத்துகின்றோமோ அப்போதே எமது வாழ்வின் இம்மை, மறுமை இலக்குகளை அடைந்து கொள்ள முடியும். ஆக நேர்த்தியான வாழ்வொழுங்கை போதிக்கின்ற மார்க்கத்தைப் பின்பற்றும் ஒரு முஸ்லிமின் செயற்பாடுகள் நேர்த்தியின்றி இருக்க முடியாது என்ற உண்மையை புரிந்து கொள்வது அவ்வளவு சிரமமான விடயமல்ல.

இறைவன் அருளிய இஸ்லாம் எனும் வாழ்வொழுங்கில் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தனது வாழ்வை முழுமையாக ஒழுங்கமைத்தார்கள். அன்னாரது வாழ்வின் அனைத்து விடயங்களும் ஓர் ஒழுங்கில் நிர்வகிக்கப்பட்டிருந்தது.

இறைத் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ஸுப்ஹ் மற்றும் அஸர் தொழுகைக்குப் பின்னும் இஷா தொழுகைக்கு முன்னும் தூங்க மாட்டார்கள். அதே போன்று இஷாவுக்குப் பின் வீணாக விழித்திருக்க மாட்டார்கள். இவை தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தங்களின் தூக்கத்தை ஒழுங்குபடுத்திய விதம். ஏனெனில், ஒருவர் தூக்கத்தை ஒழுங்குபடுத்தாதபோது அது பல ஒழுங்கீனங்களுக்குக் காரணமாக அமையும்.

நாம் ஒரு விடயத்தை செய்வதற்கு முற்படுகின்றபோது அதனை எவ்வளவு நேர்த்தியாகவும் ஒரு முறைமையின் கீழும் செய்து முடிக்கின்றோமோ அப்போதுதான் அச்செயற்பாடு அழகாகவும் சீரானதாகவும் இருக்கும். இவ்வாறான செயற்பாட்டையே அல்லாஹ் நேசிக்கின்றான் என்ற கருத்தை பின்வரும் நபிமொழி எமக்கு உணர்த்துகின்றது.

إِنَّ اللهَ يُحِبُّ إِذَا عَمِلَ أَحَدُكُمْ عَمَلًا أَنْ يُتْقِنَهُ

"உங்களில் ஒருவர் ஒரு காரியத்தை செய்வதானால் அதனை அவர் மிகவும் நேர்த்தியாக செய்வதனையே அல்லாஹ் விரும்புகின்றான்."

கவலை என்னவென்றால் ஒழுங்கமைப்பு (Organizing), முகாமைத்துவம் (Management), நேரமுகாமைத்துவம் (Time Management), நேர்த்தி (Perfection) ஆகிய விடயங்கள் மேற்கத்திய கண்டுபிடிப்புகளாகவும் இவற்றுக்கும் இஸ்லாத்திற்கும் தொடர்பே கிடையாது என்ற கருத்தும் எம்மில் பலருக்கும் இருக்கின்றது. இக்கருத்தை மெய்ப்பிக்கும் வகையிலேயே எமது செயற்பாடுகளும் பலபோது அமைந்து விடுகின்றன. இஸ்லாம் பிழையாக புரிந்து கொள்ளப்பட்ட விடயங்களுள் இதுவும் ஒன்று.

இமாம் ஹஸனுல் பன்னா (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் இஸ்லாமிய அழைப்பாளனிடம் இருக்க வேண்டிய அடிப்படைப் பண்புகளுள் ஒன்றாக வாழ்வை ஒழுங்குபடுத்திக் கொள்ளல் என்ற பண்பை அடையாளப்படுத்து

கின்றார்கள்.

இஸ்லாமியப் பணிக்கு இறை நிராகரிப்பாளன் எவ்வாறு பொருத்தமற்றவனோ அவ்வாறே வாழ்வை ஒழுங்குபடுத்திக் கொள்ளாத ஸாலிஹான முஸ்லிமும் பொருத்தமற்றவன்.

ஆம்! வாழ்வை ஒழுங்குபடுத்தாத ஒருவர் இஸ்லாமிய அழைப்புப் பணியில் ஈடுபடுகின்றபோது இஸ்லாத்திற்கு பிழையான சான்றுகளை வழங்குவதோடு, இவரது ஒழுங்கீனங்கள் இஸ்லாமியப் பணியின் மூலம் நிர்மாணிக்கப்படும் எச்ச சொச்சங்களையும் தகர்த்து விடும்.

இறைதூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்.

إن الله كتب الإحسان على كل شيء

"அனைத்து விடயங்களையும் நேர்த்தியாக செய்வதை அல்லாஹ் விதியாக்கியுள்ளான்."

வாழ்வை ஒழுங்குபடுத்துவதில் அடிப்படையான அம்சம் எமது காலநேரத்தை ஒழுங்குபடுத்துவதாகும். ஏனெனில், காலம்தான் வாழ்க்கை.

உலகில் தோன்றிய எல்லா மனிதர்களுக்கும் ஒரு நாளில் 24 மணித்தியாலங்களைத்தான் இறைவன் அருளினான். இவ்விடயத்தில் எவருக்கும் பாரபட்சம் காட்டவில்லை. குறித்த நேரத்தைப் பயன்படுத்தித்தான் சிலர் சாதனையாளர்களாக மாறினர். அவர்களின் சாதனைகளால் இன்று வரை உலகம் பயன் பெற்றுக் கொண்டிருக்கின்றது. இதற்குக் காரணம், அவர்களுக்கு வழங்கப்பட்ட கால நேரத்தின் உச்ச பயனை அடைந்துகொள்ளும் விதத்தில் வாழ்நாளை அவர்கள் ஒழுங்குபடுத்தியமையாகும். எனவே நேரமின்மை என்பது பொய்; திட்டமிடவில்லை என்பதுவே உண்மை.

நேரத்தின் பெறுமானத்தைப் புரிந்து அதனை திட்டமிட்டுப் பயன்படுத்தும் கலையை தெரிந்தவர்கள் தேவையற்ற மன அழுத்தங்களுக்கு ஆளாக மாட்டார்கள். அவரது பேச்சில், நடத்தையில் நிதானத்தை எம்மால் கண்டுகொள்ள முடியும்.

காலநேரத்தை திட்டமிடுவது எவ்வளவு முக்கியமானதோ அதை விடவும் முக்கியமான அம்சம் என்னவென்றால், வாழ்வில் எத்தகைய அம்சங்களுக்கு நேரம் ஒதுக்கி ஒழுங்குபடுத்தியாக வேண்டுமோ அவற்றில் எதுவும் விடுபடாமல் எமது கால நேரத்தை திட்டமிட்டு ஒழுங்குபடுத்துவதாகும். அவ்வாறு விடுபடுமேயானால் அவர் நேரத்தை முழுமையாக திட்டமிட்டவராக கருதப்பட மாட்டார்.

ஒருவர் நேரம் ஒதுக்கி அவசியம் ஒழுங்குபடுத்த வேண்டிய விடயங்களாவன:

**1. நம்பகமானதும் மிகச் சரியானதுமான சிந்தனையின் அடிப்படையில் தனது சிந்தனையை ஒழுங்கமைத்தல்.**

மனித வாழ்வை இயக்கும் அடிப்படை அவனது சிந்தனைகளாகும். அது பிழைத்தால் முழு வாழ்வும் பிழைத்துவிடும். அந்த வகையில் சரியான சிந்தனையைப் பெறுவதற்கு தனது வாழ்நாளை ஒழுங்குபடுத்தாதவர்களை கால்நடைகளைப் போன்றவர்கள் இல்லை; அதை விடவும் மோசமானவர்கள் என அல்குர்ஆன் சாடுகிறது.

மனித வாழ்வை இயக்கும் அடிப்படை அவனது சிந்தனைகளாகும். அது பிழைத்தால் முழு வாழ்வும் பிழைத்துவிடும். அந்த வகையில் சரியான சிந்தனையைப் பெறுவதற்கு தனது வாழ்நாளை ஒழுங்குபடுத்தாதவர்களை கால்நடைகளைப் போன்றவர்கள் இல்லை; அதை விடவும் மோசமானவர்கள் என அல்குர்ஆன் சாடுகிறது.

**2. அமைதியும் நிம்மதியும் பிரவாகிக்கின்ற உள்ளமாக தனது உள்ளத்தை மாற்றியமைத்தல்**

வாழ்வில் உண்மையான செல்வம் மன அமைதியே. வாழ்க்கைப் போராட்டத்தில் சிக்குண்ட இன்றைய மனிதன் இச்செல்வத்தை இழந்து தவிக்கின்றான். இதற்குரிய ஏக வழி தன்னைப் படைத்த இறைவனுடனான உறவை வலுப்படுத்துவதாகும்.

"மேலும், அல்லாஹ்வை நினைவுகூருவதால் அவர்களுடைய இதயங்கள் அமைதி பெறுகின்றன. அல்லாஹ்வை நினைவுகூர்வதன் மூலமே இதயங்கள் அமைதி பெறுகின்றன என்பதை அறிந்து கொள்ளுங்கள்!" (13: 28)

**3. குடும்ப வாழ்வில் கண்குளிர்ச்சியை அனுபவிக்கும் வகையில் வீட்டை ஒழுங்கமைத்தல்**

குடும்ப வாழ்வில் கண்குளிர்ச்சியை இழந்தவர்கள் மனநிறைவான வாழ்வை அனுபவிப்பது சாத்தியமில்லை. ஆக வீட்டை அலட்சியம் செய்து விட்டு, அதன் ஒழுங்கமைப்பில் கவனம் செலுத்தாது ஒழுங்குபடுத்துதல் முழுமை பெற மாட்டாது. ரஹ்மானின் அடியார்களின் பிரார்த்தனைகளுள் ஒன்றை அல்குர்ஆன் இவ்வாறு கூறுகிறது.

"எங்கள் இறைவா! எங்கள் மனைவியரிடமும் எங்கள் சந்ததியரிடமும் இருந்து எங்களுக்குக் கண்களின் குளிர்ச்சியை அளிப்பாயாக!" (25: 74)

**4. இரத்த உறவுகளைப் பேணி அவர்களின் சுக துக்கங் களில் பங்கேற்றல்.**

நவீன உலகம் பல சாதனைகளை நிகழ்த்திய போதும் மனிதனை தனித் தனி மரமாக மாற்றியுள்ளது. அன்றி

ருந்த உறவுகள் இன்று சிதைவடைந்துள்ளன. வாழ்வில் பல அழுத்தங்கள் வருகின்றபோது அவனது சுகதுக்கங்களில் பங்குகொள்ள இரத்த உறவுகள் இன்றி வாடும் பலரைக் காண்கின்றோம்.

**5. மனிதர்களை ஏமாற்றாது, பிறருடைய பொருட்களை அபகரிக்காது வியாபார நடவடிக்கைகளை ஒழுங்கமைத்தல்.**

பொருள் தேடுவது எப்படி முக்கியமோ அதேபோல் பொருளீட்டலில் மேற்கூறிய அம்சமும் முக்கியமானது. வியாபாரத் துறையில் பல நவீன ஒழுங்குகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளபோதும் கொடுக்கல்-வாங்கலில் பல ஒழுங் கீனங்கள் காணப்படுகின்றன. இதனால் பலரும் ஏமாற்றப் படுவதும் பாதிக்கப்படுவதும் நாளாந்த நிகழ்வுகளாக மாறி விட்டன.

**6. உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தி மனித நலன்பேண உழைத்தல்**

உடலாரோக்கியம் ஓர் அருள். அதன் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவதும் அதனைப் பராமரித்து வருவதும் வாழ்வை ஒழுங்குபடுத்தலில் முக்கியமான அம்சமாகும். இல்லாவிடில் அவை வாழ்வை சீர்குலைத்துவிடும். அத்தோடு எமது உடலாரோக்கியத்தின் மூலம் எம்முடையதும் மனித சமூகத்தினதும் உயர்வுக்காக உழைக்க வேண்டும்.

இன்றும் நேரமுகாமைத்துவம், நேர்த்தி, ஒழுங்கமைப்பு என்பன கற்பிக்கப்படுவதன் நோக்கம், இவற்றின் மூலம் ஒருவர் உலக இலாபங்களை அடைந்து கொள்ள வழிகாட்டுவதுதான். இதனால் இன்றைய முகாமைத்துவ தத்துவங்கள் உலகை வளப்படுத்தியுள்ளன; ஆனால், மனித உள்ளங்களை வளப்படுத்த தவறி விட்டன.

இஸ்லாத்தின் சிறப்பம்சம் என்னவென்றால், வாழ்வில் எல்லா அடிப்படைகளுக்கும் அதன் தர விகிதாசாரத்தின் அடிப்படையில் முன்னுரிமை வழங்கி ஒழுங்கமைக்க வழிகாட்டுகிறது. அவ் ஒழுங்கில் நாம் நமது வாழ்வை ஒழுங்கமைக்கின்றபோது நிச்சயம் எமது வாழ்வு அழகு பெறும். எமது வாழ்வை ஓர் ஒழுங்கில் அமைத்துக் கொள்கின்ற நற்பாக்கியத்தை வல்ல நாயன் எமக்கு அருள்வானாக! ■


ஜாமிஆ ஆஇஷா ஸித்தீக்கா
மாவனல்லை
Jamiah Ayesha Siddeeqa
P.O.Box: 14, Mawanella. Mob: 0773950087
புதிய மாணவிகள் அனுமதி- 2015



பின்வரும் தகுதி உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்
- 2014 இல் க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றியிருத்தல்
- 01.05.2015 இல் 18 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல்
- சுகதேகியாக இருத்தல்

விண்ணப்ப முடிவுத் திகதி:
05-04-2015

முக்கிய குறிப்பு:
குறித்த திகதிக்கு பின்னர் வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
மேலும், விண்ணப்பிக்கத் தவறி நேர்முகப் பரீட்சைத் தினத்தில் சமுகமளிப்பவர்களும் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

மேலதிக தவல்களுக்கு எமது இணையதளத்தைப் பார்வையிடலாம்
www.siddeeqa.org



A/L results வந்துவிட்டதா
நீங்கள்எதிர்பார்த்த results கிடைக்கப் பெறவில்லையா?
உங்கள் கனவுகள் கலைந்துவிட்டதென்று கவலைப்படுகிறீர்களா?
கவலையே வேண்டாம்!!!
Crown Business College Sri Lanka & Transwork Education Consultant Bangalore- India இணைந்து உங்களின் எதிர்கால முன்னேற்றத்திற்காகவும் கனவுகள் வெற்றி பெறும் பொருட்டும் UGC, Medical Council of Sri Lanka
மற்றும் உலக அங்கீகாரம் பெற்ற India வில் உள்ள சிறந்த பல்கலைக்கழக கல்லூரிகளில் நீங்கள் விரும்பிய (Diploma, Degree & Post graduate) கற்கைநெறிகளைத் தொடர முடியும்.
**Lowest Fees Guaranteed இலங்கையின் தலைநகரில் (Colombo) தங்குவதை விட குறைந்த கட்டணத்திலும் பாதுகாப்பாகவும் கற்கைநெறிகளை வெற்றிகரமாக முடிக்கலாம்.**
மேலதிக விபரங்களுக்கும்:
Free Career Guidance Seminar நடைபெறும் இடம், காலம் அறிய தொடர்பு கொள்ள வேண்டிய Mobile இலக்கம்:
Azri - 0777 890 463 Hish - 0727 12 12 18
Crown Business College
198/1, 1st Floor, Galle Road, Dehiwela. (next to HNB bank)
Crown Islamic Academy 113,China fort road, Beruwala.
➤ Next Free Career Guidance Seminar
Beruwala - 26/04/2015 at 9 a.m. in Crown Islamic Academy.
Maruthamunai Cultural Hall - 18,19/04/2015 - A.R. Ahamed Nafais (MA. JP)
Mob: 0777866064

# நபிகளாரின் உஹூதும் அலெக்ஸாண்டரின் காகமேலாவும்!!

## இராணுவ ரீதியான பகுப்பாய்வு



**ஏ.எச். ரெஸா உல் ஹக்**
**(பொறிமுறைப் பொறியியலாளர், பகுப்பாய்வாளர்)**

பண்டைய கிரேக்கத்தின் 2ஆம் பிலிப் மன்னனின் (Philip II of Macedon) தலைமையில் மெசிடோனியர்களின் எழுச்சியானது புராதன பிராந்திய சக்திகளான அதென்ஸ்தேபஸ் மற்றும் ஸ்பார்றாவை கட்டுப்படுத்தும் அளவுக்கு தனது அதிகாரத்தை நிலைநாட்ட முற்பட்டது. 2ஆம் பிலிப் மன்னனைத் தொடர்ந்து முடிசூடிய 3ஆம் அலெக்ஸாண்டர் பிராந்திய சக்திகளின் மெசிடோன்களுக்கெதிரான கிளர்ச்சிகளை ஒரு முடிவுக்குக் கொண்டுவந்து விட்டு மகா அலெக்ஸாண்டராக மெசிடோனிய சாம்ராஜ்யத்தை கீழைத்தேயம் நோக்கி விரிவுபடுத்திடத் துணிந்தார். கிரேக்கத்தின் தத்துவ ஞானியான அரிஸ்டோட்டிலின் கொள்கைகளாலும் கற்பித்தலாலும் உந்தப்பட்டு முறையான தொழில்சார் இராணுவப் பயிற்சி மற்றும் நுட்பத்தினால் வார்க்கப்பட்ட தமது துடிப்புள்ள இளைய தோழர்களையும் உள்ளடக்கிய படையுடன் கிளம்பி கி.மு. 333இல் சிரியா, மத்தியத் தரைக்கடல் பகுதியின் கரையோரம் மற்றும் எகிப்து ஆகிய பிரதேசங்களில் தனது இருப்பை உறுதிபடுத்தும் பிரயத்தனத்தில் வெற்றி பெற்றார். அடுத்ததாக அவரின் கவனம் 3ஆம் டரியஸ் மன்னனின் பாரசீக சாம்ராஜ்யத்தின் பக்கம் திரும்பியது.

தமது படைகளுடன் எதிர்ப்பின்றி சிரியாவைத் தாண்டி கிழக்காக நகர்ந்த அலெக்ஸாண்டர் யூப்பிரடீஸ் மற்றும் தைகிரிஸ் நதிகளை எதிர்ப்பின்றி கடந்தார். 3ஆம் டரியஸ்சின் பாரசீக சாம்ராஜ்யத்தின் வட புற எல்லைப் பகுதியினுள் சுமார் நான்கு கிலோ மீற்றர்கள் ஊடுருவி நிலை கொண்டார். தன்னை நோக்கி வரும் அலெக்ஸாண்டரின் படையை அரிபெலாவிற்கு (ஈராக்கின் குர்திஸ்தான் பிராந்தியத்தின் தற்போதைய ஏர்பில் நகரம்) அண்மையில் எதிர்கொள்வதற்குத் தயாரானார் டரியஸ். இராணுவ உபகரணங்கள் மற்றும் ஆள்பலத்தில் செழிப்பான தமது படைகளையும் அதனுள் அங்கம் வகிக்கும் குதிரைப்படை (cavalry), காலாட் படை (Infantry) வில் வீரர்கள் (Archers) மற்றும் தாக்குதற் திறன் கொண்ட இரதங்கள் (chariot) என பெரும் எண்ணிக்கையிலான தனது படையினைச் சிறப்பாகப் போரில் ஈடுபடுத்துவதன் பொருட்டு, 3ஆம் டரியஸ் தேர்ந்தெடுத்த வெட்டவெளிப் பிரதேசமே அரிபெலாவுக்கு அண்மையான காகமேலா!!

அலெக்ஸாண்டரின் இராணுவத்தின் ஜெனரல் பாமெனியன் அவரது தந்தை 2ஆம் பிலிப்பினது நம்பிக்கையை பாராட்டையும் பெற்ற முதிர்ந்த அதிகாரியாவார். மற்றைய மிக முக்கிய கட்டளைத் தளபதி மனிடாஸ். 3ஆம் டரியஸ்சின் படையுடன் ஒப்பிடும்போது அலெக்ஸாண்டரின் படை ஆள் பலத்திலும் படைக்கலன்களிலும் குறைவு. எனவே, தந்திரோபாயமானது உச்ச கட்ட முக்கியத்துவத்தினைப் பெறுவதாக இருந்தது. ஒரு போரின் வெற்றியைத் தீர்மானிக்கும் காரணிகள் எவை என்பதனை பிரத்தியேகத் தலைப்பொன்றின் மூலம் விளக்க முனைவதே உசிதம் என்று கருதுவதால் இங்கு அதனைக் கலந்துரையாடவில்லை. அவ்வாறிருப்பினும்.போரை நடத்துவதற்கான மூலோபாயம் என்பது அக்காரணிகளில் முக்கியமானதொன்றாகும் என்பதனைக் குறிப்பிடுதல் இங்கு தகும்.

காகமேலா பொருந்துகைக்கு முன்னைய நாள் இரவு, தாக்குதலுக்கான வியூகத்தை விளக்கும் கூட்டம் அலெக்ஸாண்டர் தலைமையில் அவரது பிரத்தியேகக் கூடாரத்தினுள் நடத்தப்பட்டது. அக்கூட்டத்தில் ஜெனரல்

**உஹுத் போரின் அச்சாணியே இவ்வியூகம்தான். ஏனெனில், பெரும் படைகளைக் கூட ஒரு சிறிய படையாக இருப்பினும் பக்க வாட்டில் ஊடுருவித் தாக்குவதானது நிலைகுலைவையும் பெரும் நாசத்தையும் தோற்றுவிக்கும். ஆக சிறிய படையை பெரும்படை சுற்றி வளைத்து மற்றும் ஊடுருவித் தாக்குவது தடுக்கப்பட்டு விட்டது.**

பாமெனியன் மனிடாஸ் மற்றும் முக்கிய தாக்குதற் பிரிவு கட்டளைத் தலைவர்களுடன் அலெக்ஸாண்டரின் நெருங்கிய தோழர்களும் இருந்தனர். ஆள் பலத்திலும் படைக்கலன்களிலும் கூடிய 3ஆம் டரியஸ்சின் படையினைக் கருத்திற் கொண்ட ஜெனரல் பாமெனியன் இரவு நேரத்தில் தமது தாக்குதலைத் தொடுப்பதற்கு ஆலோசனை வழங்கினார். இதனை சில தோழர்களும் ஆமோதித்தனர். ஆனால், இவ்வாலோசனையை தள்ளுபடி செய்த அலெக்ஸாண்டர், ஆசியாவிற்கான தனது வெற்றியை இரவில் திருடிக் கொண்டு செல்வதற்குத் தான் தயாரில்லை என்பதுடன் இதன் பிறகும் இப்பூமி இரண்டு அரசர்களைத் தாங்காது என்றும் கூறி தனது தாக்குதல் வியூகத்தை முன்வைத்தார். எனினும், இரவுத் தாக்குதலை முகங்கொடுக்கத் தனது படைகளைத் தயார் நிலையில் வைத்திருந்தார் டரியஸ்!

ஒக்டோபர் 01, கி.மு.331 காகமேலா போர்க் களம்! தனது நாற்பதாயிரம் (40,000) போர் வீரர்களுடன் 3ஆம் டரியஸ்சின் இரண்டரை இலட்சம் (250,000) படையினரை முகங்கொடுப்பதற்கு அலெக்ஸாண்டர் களமிறங்கினார்! படையினருக்கிடையேயான விகிதம் 1: 6 ஐ விடவும் அதிகம்! 3ஆம் டரியஸ்சின் படை முன்னரங்கிற்குச் சமாந்தரமாக தனது படையை நிறுத்தாது எதிரணிக்கு 45 பாகைக் கோணத்தில் தனது முன்னரங்கு படையணி மற்றும் பிற படையணிகளை நிறுத்தினார் அலெக்ஸாண்டர். இந்த அமைப்பு வியூகத்தின் மூலம் எண்ணிக்கையில் அதிகமான 3ஆம் டரியஸ்சின் படை முன்னரங்கினை தனது குறை ஆளணிப் படைக்குத் தெளிவாக அவதானிக்க முடியுமாகும் என்பதுடன் தனது படையினரை டரியஸ் சுற்றிவளைத்துத் தாக்குவதனைத் தடுக்கும்.

3ஆம் டரியஸ்சின் இடது முனைப் பாரசீகப் படைகளுக்கு தளபதி பெசேயஸ்சும் வலது முனைப் பாரசீகப் படையினருக்கு தளபதி மெஸேயஸ்சும் தலைமை தாங்கினார்கள். டரியஸ் முதலில் தமது முன்னரங்கை நோக்கி நிதானமாக நகரும் மெசிடோன் காலாட் படையினரை நோக்கி தனது வில் வீரர்களின் மூலம் தாக்குதலைத் தொடுத்தார். இதனைத் தொடர்ந்து தாக்குதற் திறன் கொண்ட இதர அணிகளை மெஸிடோனிய முன்னரங்கை நோக்கி ஏவினார். ஆனால், மெஸடோனிய காலாட்படையினர் இடம் விட்டு விலகி டரியஸ்சின் இரதங்களை உள்வாங்கி சாணக்கியமாக தடுத்துத் தாக்கியதனால் டரியஸ்சின் அவ்வணியினர் முறியடிக்கப்பட்டனர். அலெக்ஸாண்டர் தலைமையிலான விஷேட குதிரைப் படையினருடனும் அதனைத் தொடர்ந்து வந்த மற்றைய துணைப்பிரிவும் 3ஆம் டரியஸ்சின் இடது முனைத் தளபதி பெசேயஸ்சின் படைகளை அவரது முன்னரங்கிலிருந்து பக்கவாட்டில் வெளியே இழுக்கும் வியூகத்தை அமுல்படுத்தும் பொருட்டு மெஸடோனிய முன்னரங்கிலிருந்து வலப்பக்கமாக நகர்ந்தது.

டரியஸ் அலெக்ஸாண்டரின் நகர்வுக்குச் சமாந்தரமாக பெசேயஸ்சின் படைகளை தன் பக்கத்திலிருந்து இடது பக்கமாக நகர்த்தினார். 3ஆம் டரியஸ்சின் நிலைக்கும் பெசேயஸ்சின் படைகளுக்கும் மத்தியில் இடைவெளி ஏற்பட்டது. தன்னைத் தொடர்ந்த துணைப் படைகளிடம் டரியஸ்சின் வெளியில் இழுக்கப்பட்ட பெசேயஸ்சின் படைப் பிரிவை தாக்கும் பொறுப்பைத் தொடர விட்டு விட்டு இடையில். தனது விஷேட தாக்குதல் பிரிவுடன் அப்படியே இலாவகமாக தனது இடது பக்கமாக வளைவெடுத்தார் அலெக்ஸாண்டர். திட்டமிட்டபடி பெல்டாஸ்ட் விஷேட படையினரின் ஹைபஸ்பிஸ்ட் தாக்குதல் பிரிவு பாதுகாப்பு வழங்க 3ஆம் டரியஸ்சின் நிலையில் ஏற்பட்டிருந்த இடைவெளியினை ஊடுருவி காகமேலாச் சமரை தடம்புரள வைத்த வரலாற்றுப் புகழ்பெற்ற தனது தாக்குதலை 3ஆம் டரியஸ் மன்னனின் மத்திய நிலையை நோக்கி இடது பக்கத்தினால் தொடுத்தார். அவ்வளவு தான்! எதிர்பாராத இத்தாக்குதலின் அதிர்வு மூலகத்தின் விளைவாக ஏற்பட்ட குழப்பத்தினால் டரியஸ்சின் படைகள் சிதறி ஓடின. துணைப் படையினரும் தொடர்ந்து பெசேயஸ்சின் படைகளுக்குச் சமாந்தரமாக நகர்ந்து சற்று தூரம் சென்று அலெக்ஸாண்டரைப் போலவே அப்படையை நோக்கி இடதுபக்கமாக வளைவெடுத்துத் தாக்கியது. இதனைத் தொடர்ந்து மத்திய மற்றும் இடது முனைப் பாரசீகப் படைகளின் போரிடும் மனோ வலிமை குன்றியது. விளைவாக, டரியஸ்சின் நிலை தளர்ந்தது. அவரைப் பின்வாங்க நிர்ப்பந்தித்தது. அலெக்ஸாண்டர் காகமேலா சமரில் வெற்றிவாகை சூடினார். தனது உற்ற தோழர்களில் அறுபது பேர்கள் உட்பட நான்காயிரம் (4000) மெசிடோனிய போர் வீரர்களை அலெக்ஸாண்டர் இச்சமரில் இழந்தார். கீர்த்திமிக்க பாரசீக சாம்ராஜ்யத்தின் இதயத்தை நோக்கி நகருவதற்கும் இறுதியில் அதனை வெற்றி கொள்வதற்கும் துணை நின்ற ஆரம்பச் சமர் இதுவே.

காகமேலா போர் நடந்து சுமார் ஒன்பதரை நூற்றாண்டுகள் கடந்து விட்டிருந்த நிலையில் முஹம்மத் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் தலைமையில் மதீனாவில் அமைக்கப்பட்டிருந்த இஸ்லாமிய அரசு, பத்ர் யுத்தத்தில் தோல்விக்கும் இழப்புகளுக்கும் ஆளான மக்கத்துக் குறைஷிகளின் பதிலடிப்

படையெடுப்பினை முகங்கொடுக்க வேண்டிய நிலையில் இருந்தது. மக்கத்துக் குறைஷிகள் ஒரு வருடமாக போரா யத்தங்கள் செய்து மூன்றாயிரம் காலாட்படைகள், இரு நூறு குதிரைப்படையினர் மற்றும் நூறு வில் வீரர்கள் சகிதம் போர்ப்படைத் தளபதிகளினது வெறியூட்டல்களினாலும் கவிஞர்கள் மற்றும் பெண்களின் போர்ப் பாடல்களாலும் உந்தப்பெற்று மதீனாவை நோக்கி தமது போர் யந்திரத்தினை (War Mechine) நகர்த்தினர்! தம்மை நோக்கிய படையின் பலம் மற்றும் படையெடுப்பு குறித்தான உளவுத் தகவல்களை மக்காவில் இருந்து துரிதகதியில் நபியவர்கள் பெற்றுக் கொண்டார்கள். நபியவர்களின் உயர்மட்ட இராணுவக்குழு இறுதியில் எதிரிப்படையை மதீனாவினுள் வைத்து தாக்கும் எண்ணத்தைக் கைவிட்டு மதீனாவிற்கு வெளியே சந்திக்கும் முடிவு எட்டப்பட களத்தை நோக்கி நகர்த்தப்பட்டது. ஆயிரம் காலட்படை மற்றும் ஐம்பது வில் வீரர்கள் ஆரம்பத்தில் இடம் பெற்றனர்.

இதற்கிடையில் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் புலனாய்வுப் பிரிவு (Intelligent Unit) மக்கா எதிரிப்படை குறித்து துல்லியமான உளவுத் தகவலினை வழங்கியது. எதிரிகளின் இராணுவப் படை முகாம் அமைந்துள்ள இடம் மற்றும் பிற முக்கியத் தகவல்கள் இதில் அடக்கம். மக்கா குறைஷிகளின் படையுடன் ஒப்பிடும்போது நபியவர்களின் படை பலத்தில் கருதத்தக்க அளவு குறைபாடுகள் இருந்தன. அதில் எதிரிகளின் தாக்குதல் திறன் (Fire power-in this case Attacking power) மற்றும் துரிதமாகத் தாக்கிவிட்டு நகரக் கூடிய குதிரைப் படைப்பிரிவை கொண்டிருந்தமை மிக முக்கியமானவை. ஆக இந்தப் பின்னணியில் போர்த் தந்திரோபாயம் நபியவர்களின் இராணுவ நடவடிக்கையில் (Operation Uhad) உயிர்மையப் புள்ளியாக பரிணமிக்கின்றது. அதேபோன்று ஒவ்வொரு விடயத்தில் இருந்தும் தமது படைக்கான சாதகத்தன்மையை பெற்றுக் கொள்ள வேண்டியது இன்றியமையாததாகின்றது. ஆக நபியவர்கள் முதலில் தமது சிறிய படையைப் பாதுகாத்துக் கொண்டு தாக்குதல் தொடுப்பதற்கான இராணுவப் புவியியல் மூலகங்களைக் கருத்திற் கொண்டார்கள்.

பொதுவாகவே யுத்தங்களின்போது ஒரு படையின் சொந்தப் பிரதேசம் அப்படைக்குப் பின்னால் இருப்பதாக அணிவகுப்பதே வழக்கம். எனினும், தமது படையின் பலம், பலவீனம் என்பவற்றைக் கருத்திற் கொண்டு நிலைமையைக் கையாளுவதற்கு (manoeuvre) இராணுவப் புவியியல் மூலகங்களுக்கமைய நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தனது படைகளுக்கான முகாமைத் தேர்ந்தெடுத்த இடம் எதிரிப்படை நிலைகளுக்கப்பால் அவர்களைத் தாண்டிச் சென்று மதீனாவை முன்னோக்கியதாக இருந்தது. தான் கவனமாகத் தேர்ந்தெடுத்த தனது படைநிலையை அடையும் பொருட்டாக சந்தடியில்லாமல் எதிரிகளைத் தாண்டி மாற்று வழியினூடு ஊடுருவுவதற்குச் சற்று முன்னர் நயவஞ்சகர்களின் தலைமையிலான 300 படை வீரர்கள் விலகியதானது இஸ்லாமியப் படையின் போராடுதல் குறித்த மனோவலிமையை வீழ்த்தியிருக்க வேண்டும். எனினும், நபியவர்களின் கொள்கையூட்டலால் வார்க்கப்பெற்ற இஸ்லாமியப் படையானது அத்தகைய கையறுநிலையினை விட்டும் தன்னைக் காத்துக் கொண்டது.

உஹுத் போர்க்களம்! தனது எழுநூறு போர் வீரர்களுடன் மூன்றாயிரம் மக்கத்து படையினரை முகங்கொடுப்பதற்கு நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் களமிறங்கினார்கள்! படையினருக்கிடையேயான விகிதம் 1: 4 ஐ விடவும் அதிகம்! நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தேர்ந்தெடுத்த இடம் இஸ்லாமியப் படையின் வலது பக்கத்தினையும் உடனடி பின்பக்கத்தினையும் மலைகளால் அரணமைத்தது. இடது பக்கத்தின் பாதுகாப்பினை குன்றின் மீது நபியவர்கள் கடும் இராணுவ சட்டதிட்டங்களையும் கட்டளைகளையும் இட்டு நிறுத்திய வில் வீரர்களின் பாதுகாப்பு அணி (Prime Archers Defence Line) நிலைநிறுத்தும். உஹுத் போரின் அச்சாணியே இவ்வியூகம்தான். ஏனெனில், பெரும் படைகளைக் கூட ஒரு சிறிய படையாக இருப்பினும் பக்க வாட்டில் ஊடுருவித் தாக்குவதானது நிலைகுலைவையும் பெரும் நாசத்தையும் தோற்றுவிக்கும். ஆக சிறிய படையை பெரும்படை சுற்றி வளைத்து மற்றும் ஊடுருவித் தாக்குவது தடுக்கப்பட்டு விட்டது.

மக்கா படையின் மத்திய கட்டளைத் தளபதியாக (Central Command) அபூ ஸுஃப்யான் இருக்க வலது போர்முனைக்கு (Right Battle Front) காலித் இப்னு வலீத், இடது போர்முனையில் (Left Battle Front) இக்ரிமா, மத்திய பிரிவு காலாட்படைகளுக்கு ஸஃப்வான் மற்றும் வில் வீரர்களுக்கு அப்துல்லாஹ் இப்னு அபூ ராபி ஆகியோரால் தலைமை தாங்கப்பட்டது. இஸ்லாமியப் படையில் இடது போர்முனையில் ஜுபைர் இப்னு அவ்வாம் (ரழியல்லாஹு அன்ஹு) மற்றும் மிஸ்காத் இப்னு அஸ்வத் (ரழியல்லாஹு அன்ஹு) ஆகியோர் தலைமை தாங்கினர். வலது போர் முனையில் முன்திர் இப்னு அம்ர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களும் மத்திய காலாட்படைப் பிரிவில் ஹம்ஸா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களும் இடம்பெற்றனர். மேலும் மத்திய படைப் பிரிவானது வீரமும் தீரமும் மிக்க போர் வீரர்களைக் கொண்டு அணிவகுக்கப்பட்டிருந்தது.

முஸ்லிம்களின் தீர்மானமிக்க தாக்குதல் திறன் எதிரிப் படைகளுக்குக் கடும் சவாலாக இருந்ததுடன் மக்கத்து போர்க்கொடி நிலைத்து நிற்கவே இல்லை. இது எதிரிப் படைகளின் போராடும் மனோவலிமையைச் சிதைத்தது. அவர்களைப் பின்வாங்க நிர்ப்பந்தித்தது. இப்போரில் விஷேட பணியொன்று (Special mission) மக்கா தரப்

பிலிருந்து வடிவமைக்கப்பட்டிருந்தது. அதுதான், ஈட்டி வீரர் ஹபஷியிடம் பொறுப்புச் சாட்டப்பட்ட ஹம்ஸா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களை வேட்டையாடும் பணியாகும். அது அவ்வாறே நடந்தேறியது. உஹுத் போரின் வெற்றியை மக்கா தரப்பிற்குத் திருப்ப வேண்டும் எனில், ஒரே வழி வளைவாக ஊடுருவி இடதுபக்கவாட்டில் திடீர்த் தாக்குதல் தொடுப்பதே என்பதனை காலித் இப்னு வலீத் நன்றாகவே அறிந்திருந்தார். மூன்று முறை அம்முயற்சியை மேற்கொண்டார். எனினும், நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் போர் வியூகம் அது அவ்வாறு நடைபெறுவதனைத் தடுப்பதாக இருந்தது.

முஸ்லிம்களுக்கு வெற்றி கிட்டிக் கொண்டு வருகையில் குன்றின் மீது அமர்த்தப்பட்டிருந்த பிரதான வில் வீரர்களின் தற்காப்பு நிலையில் ஏற்பட்ட விலகலினூடான தளர்ச்சி, போரின் போக்கைத் தடம் புரள வைத்தது. அவ்வளவுதான்! கட்டளைத் தளபதி காலித் இப்னு வலீத் தலைமையிலான குதிரைப்படை இடது பக்கத்தால் ஊடுருவி இஸ்லாமியப் படை மீது தனது பேரிடியை (Devastating Blow) கட்டவிழ்த்து விட்டது. இம்மின்னல் தாக்குதலினால் சிதறுண்ட இஸ்லாமியப் படை, முன்பக்கத்தினாலும் எதிரிகளினால் தாக்கப்பட, இடையில் மாட்டிக் கொண்ட முஸ்லிம்கள் பெரும் அமளிதுமளிக்கு ஆளாகினர். எனினும், நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் திறமையான தலைமைத்துவத்தினால் தனது படைகளை மீள் ஒழுங்கு செய்து தந்திரோபாயமாக பின்வாங்கியதனால் முழுப் படையும் அழிக்கப்படுவது தடுக்கப்பட்டது.

தாக்குதல் கண்ணோட்டத்தில், காகமேலா சமருக்கும் உஹுத் யுத்தத்திற்குமான யுத்தத்தின் போக்கினை மாற்றிய தாக்குதல் பாணி ஒன்றுதான். போராட்டக் கொள்கை எதுவாக இருப்பினும், அதில் நல்ல சக்திகளோ அல்லது தீய சக்திகளோ எது ஈடுபடினும் அவ்வெழுச்சிக்குரிய விலையை அது செலுத்தியே ஆக வேண்டும். எனினும், மறுமையில் ஈடேற்றம் என்பது அவற்றில் ஈடுபடுபவர்களின் நோக்கத்தைப் பொறுத்து வேறுபடும். தமது நிலை குறித்த சரியான மதிப்பீட்டுடன் எதிர்கால செல்திசைகள் மற்றும் பலப்படுத்தல்கள் பற்றி நன்கு அறிந்தவர்களாக நோக்கம் குறித்து செய்யத் தகுந்த அனைத்தையும் இயன்றளவு செய்து விட்டு பின்னர் இறைவனின் முடிவு எதுவென்பது எதிர்ப்பார்க்கப்படும்போது நிகழ்வு முழுமைபெற எத்தனிக்கின்றது.

"ஏனென்றால் நீங்கள் கஷ்டத்தை அனுபவிப்பது போன்றே அவர்களும் கஷ்டத்தை அனுபவிப்பதுடன் அவர்களால் எதிர்பார்க்க முடியாததையும் அல்லாஹ்விடமிருந்து நீங்கள் எதிர்பார்த்திருக்கின்றீர்கள்." (4: 104)

Visit:
www.alhasanath.lk

SKILL
CAMPUS
தற்போது
வத்தளையில்
4 Diploma சான்றிதழ்களை உள்ளடக்கிய
3 மாத பயற்சிநெறி
பெண்களுக்கான வதிவிட பயிற்சிநெறி
DIPLOMA IN
SPOKEN ENGLISH
COMPUTER STUDIES
GRAPHIC DESIGNING
FAMILY COUNSELING
மற்றும்
இஸ்லாமியக் கற்கைகள்
LIFE SKILL TRAININGS
2015
மே மாதம்
ஆரம்பம்
16+ GIRLS
குளிரூட்டப்பட்ட வகுப்பறைகள்
நவீன கணனி அறை
பாதுகாப்பான சூழல்
தேர்ச்சிபெற்ற ஆசிரியர் குழாம்
சிறந்த தங்குமிட, உணவு வசதி
விபரங்களுக்கு
0777 967667 | 071 9900355
Hunupitiya, Wattale

அஷ்ஷெய்க் கியாஸ் முஹம்மத் (நளீமி) M.A. விரிவுரையாளர்- ஜாமிஆ ஆஇஷா ஸித்தீக்கா



# சோதனைகள்

“நிச்சயமாக நாம் உங்களை பயத்தாலும் பசியாலும் உயிர் உடைமை மற்றும் விளைச்சலில் ஏற்படும் குறைகளாலும் சோதிப்போம். இதன்போது பொறுமையாக இருப்பவர்களுக்கு நன்மாராயம் கூறுவீராக.” (2: 155)

இங்கு அல்லாஹ் சோதனைகளை ஏற்படுத்துகிறான் என்பது தெளிவுபடுத்தப்படுகின்றது. இச்சோதனைகளுக்குப் பின்னால் இருக்கும் நோக்கத்தை குர்ஆன், ஸுன்னா பல இடங்களில் எடுத்தியம்புகின்றன. சுருங்கக் கூறின், மனிதர்களுள் நல்லவர்களையும் தீயவர்களையும் இனங்காண்பதும், நல்லவர்களுக்கான பாக்கியங்களை அதிகரிப்பதும், தீயவர்களைத் தண்டிப்பதுவுமே சோதனைகளின் தாத்பரியமாகும்.

தனது வாழ்வில் கஷ்டங்கள், சோதனைகளை எதிர்கொள்ளாதவர்கள் எவருமே இல்லை என்று கூறுமளவுக்கு வாழ்வின் பொதுத் தன்மையாக இது அமைந்துள்ளது.

வறுமை, சொத்துக்களை இழத்தல், குழந்தைப் பாக்கியம் இல்லாமை, நேசத்துக்குரியவர்கள் உலகை விட்டுப் பிரிதல், நோய்கள், பாதுகாப்பு இன்மை, மன நிம்மதி குலைதல், பொருத்தமற்ற துணைவர்கள்... என சோதனைகளின் வட்டம் விரிந்து செல்கிறது. ஒருவருக்கு ஏக காலத்தில் பல சோதனைகள் ஏற்படுவதுமுண்டு.

இத்தகைய சோதனைகளின்போது சஞ்சலமும் கவலையும் அடைவது மனித இயல்பு. இதனை இஸ்லாமும் அங்கீகரிக்கின்றது. மறுபக்கத்தில் சோதனைகளை எவ்வாறு எதிர்கொள்ள வேண்டும் என்ற வழிகாட்டலையும் மார்க்கம் எமக்குக் கற்றுத் தருகிறது. சோதனைகள் எப்போதும் எமக்கு எதிரானவை அல்ல. பலபோது அல்லது மிகப் பெரும்பாலும் அவை எமக்குச் சார்பானவை. “அல்லாஹ் யாருக்கு நலவை நாடுகின்றானோ அவரைச் சோதிப்பான்” (அல்புகாரி) எனும் நபிமொழி இதற்குத் தகுந்த சான்றாகும். அதாவது வாழ்வில் அதிகம் சோதிக்கப்படுபவர்கள் இறை நெருக்கம் பெற்றவர்கள். அதனால்தான் நபிமார்கள் அதிகம் சோதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

“தனது அன்புக் குழந்தையை இழந்த ஒருவன், இறை கூலியை எதிர்பார்த்து பொறுமை காக்கும் போது சுவனம் அடைகிறான்.” (அல்புகாரி)

“தனது நோயை பொறுமையோடு தாங்கிக் கொண்ட ஒரு பெண் சுவனம் நுழைகிறாள்” (அல்புகாரி, முஸ்லிம்) முதலான நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களது வழிகாட்டல்கள் ஒரு முஃமினின் இலக்காக அமையும் சுவனப் பாக்கியம் பெறுவதற்கு சோதனைகளும் கஷ்டங்களும் வழியமைக்கும் விதத்தை விளக்குகின்றன.

அதாவது கஷ்டங்கள் காரணமாக சுவனமே கிடைத்து விடுகிறது எனில் அதை விட நமக்கு என்ன தேவை இருக்கிறது. ஆனால், எமக்கு வரும் துன்பங்களின்போது நாம் இந்த உண்மைகளை மறந்து விடுகிறோம். கஷ்டங்களைப் பெரிதுபடுத்திக் கொள்கிறோம்; மனம் உடைந்து போகிறோம். இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன் எனும் வார்த்தைகளோ, அவை உணர்த்தும் கருத்தாழமோ எமது சிந்தனைக்கு எட்டாமல் தூரமாகி விடுகின்றன. பலபோது அல்லாஹ்விடத்தில் கரமேந்தி துஆ கேட்பதற்கும் மறந்தவர்களாக, சடரீதியாக மட்டும் பிரச்சினைகளை ஆராய்ந்து அவற்றைத் தீர்க்க முற்படுகிறோம். வெளியில் சொல்லிக் கொள்ளாவிட்டாலும் கூட இறை நாட்டம் (கழா கத்ர்) குறித்த சில தப்பெண்ணங்களும் கூட உள்ளத்தில் பளிச்சிட்டு மறைகின்றன.

“காலில் தைக்கின்ற முள் உட்பட ஒரு முஸ்லிமுக்கு ஏற்படும் அனைத்துக் கஷ்டங்களும் அவனது பாவங்களை மன்னித்துக் கொண்டிருக்கின்றன” (அல்புகாரி, முஸ்லிம்) எனும் தூதரின் வழிகாட்டல் நமது உள்ளத்தில் இன்னும் இடம்பிடிக்கவில்லை. சோதனைகளுக்குக் காரணமாக எமது பாவங்கள் இருக்கலாம் என உணரும் ஒரு முஃமின் அஸ்தஃபிருல்லாஹ் எனும் வார்த்தையையே அதிகம் மொழிவான்.

நபித் தோழர்களில் சிலர் உலகப் பாக்கியங்கள் அதிகமாகக் கிடைப்பது குறித்து அச்சம் கொண்டிருக்கிறார்கள். அதாவது தமது நன்மைகளின் விளைவுகளும் கூலியும் உலகிலேயே தரப்பட்டு மறுமையின் நஷ்டத்துக்கு ஆளாகி விடுவோமோ? என்ற அச்சமே இது.

கஷ்டங்கள், சோதனைகளைப் பொறுமையாக ஏற்று, அவை சுமந்து வரும் நன்மைகளை முழுமையாகப் பெற்றிட தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் அழகான ஒரு வழிகாட்டலைத் தந்தார்கள். “உங்களை விட கீழ் நிலையில் உள்ளவர்களை நீங்கள் பாருங்கள்.”

(58ஆம் பக்கம் பார்க்க)

# சப்ரகமுவ பிராந்திய ஊழியர் முஅஸ்கர்





2015ஆம் ஆண்டுக்கான சப்ரகமுவ பிராந்தியத்தின் ஊழியர் முஅஸ்கர் கடந்த மார்ச் 5ஆம் திகதி உயன்வத்தை, Peace Centre வளாகத்தில் காலை 9.30 மணி முதல் மாலை 4.30 வரை நடைபெற்றது.

“ஆக்கப் பணியின் ஆணி வேர்கள்” எனும் கருப் பொருளில் நடைபெற்ற இந்நிகழ்வின் கருப்பொருள் உரையை அஷ்ஷெய்க் ஹுஸைன் (நளீமி) நிகழ்த்தினார். ஜமாஅத் அங்கத்தவர் சகோதரர் ஜாஸில் தான் ஜம்இய் யாவில் இணைந்து பணியாற்றிய காலப் பகுதி குறித்த தனது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டார். நிகழ்வில் ஜம்இய்யாவின் நாஸிம் உட்பட மத்திய சபை அங்கத்த வர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வின் விஷேட அம்சங்களாக க.பொ.த. உயர் தர பரீட்சையில் 3 A சித்தியடைந்த மாணவர்களுக் கான பரிசளிப்பு விழா மற்றும் குறுந்திரைப்படப் போட்டி மற்றும் விஷேட கலந்துரையாடல் என்பன இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# மத்திய பிராந்திய விளையாட்டு விழா

2015ஆம் ஆண்டுக்கான ஜம்இய்யாவின் மத்திய பிராந்திய விளையாட்டு விழா கடந்த பெப்ரவரி முதல் நடைபெற்று வருகிறது. இந்நிகழ்வின் முதற் கட்டமாக அணிகளுக்கிடையிலான கால்பந்தாட்டப் போட்டிகள் அண்மையில் கம்பளை சாஹிரா கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டியில் முதலாம் இடத்தை ஜம்இய்யாவின் கெலிஓய கிளையும் இரண்டாம் இடத்தை உலப்பனை கிளையும் தட்டிச் சென்றன.

கிரிக்கட் மற்றும் கரப்பந்தாட்டப் போட்டிகள் மார்ச் 5ஆம் திகதி அக்குரணை அல்அஸ்ஹர் கல்லூரி மைதா னத்தில் நடைபெற்றன. கிரிக்கட் போட்டியில் உலப்பனை கிளை அணி முதலாம் இடத்தையும் உடத்தலவின்னை கிளை அணி இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்ட தோடு கரப்பந்தாட்டப் போட்டியில் கெலிஓய அணி முதலாமிடத்தையும் அக்குரணை அணி இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன.





# வடமேற்குப் பிராந்திய கிரிக்கட் போட்டி



ஜம்இய்யாவின் வடமேற்குப் பிராந்திய கிரிக்கட் சுற்றுப் போட்டிகள் கடந்த மார்ச் மாதம் 15ஆம் திகதி சிலாபம் நகர சபை மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டியில் முதலாம் இடத்தை அபுக்காகம கிளையும் இரண்டாம் இடத்தை புத்தளம் கிளையும் பெற்றுக் கொண்டன.

## அதிபர்களுடனான சந்திப்பு

ஜம்இய்யாவின் பாடசாலைப் பிரிவு இவ்வருடம் அதன் செயற்பாடுகளை முன்னெடுக்கும் முகமாக கொழும்பிலுள்ள 14 பாடசாலைகளின் அதிபர்களைச் சந்தித்து கலந்துரையாடலை நடத்தி வருகிறது.


இதன் ஒரு கட்டமாக கடந்த மாதம் 2ஆம் திகதி பாடசாலைக் கல்விப் பிரிவின் பிரதிநிதிகள் கொழும்பு சாஹிரா கல்லூரி அதிபர் மற்றும் கல்லூரியின் ஆளுநர் சபை தலைவர் பௌஸுல் ஹமீட் ஆகியோரையும் சந்தித்து கலந்துரையாடினர்.






## கணித முகாம் (Maths Camp)

ஜம்இய்யாவின் பாடசாலைப் பிரிவின் ஏற்பாட்டில் கணித முகாம் நாடளாவிய ரீதியில் நடத்தப்பட்டு வருகிறது. அந்த வகையில் கடந்த மாதம் மடவளை மதீனா தேசிய பாடசாலை, நாவலப்பிட்டிய சென் மேரிஸ் கல்லூரி, கொழும்பு அல்ஹிக்மா கல்லூரி, பதியுத்தீன் மஹ்மூத் மற்றும் ஹம்சா முதலான பாடசாலைகளில் இரண்டு நாள் கணித முகாம் நடத்தப்பட்டமை குறிப்பிடத் தக்கது.



# நாவைப் பேணுக: அல்குர்ஆனின் போதனைகள்!



### உண்மை பேசுக!

"இது உண்மை பேசுபவர்களுக்கு அவர்களுடைய உண்மை பலனளிக்கும் நாளாகும். கீழே சதா நீரருவிகள் ஓடிக்கொண்டிருக்கும் சுவனபதிகள் அவர்களுக்குண்டு. அவற்றில் அவர்கள் என்றென்றும் இருப்பார்கள்." (5: 119)

### நேர்மையாக பேசுக!

"ஈமான் கொண்டவர்களே! நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். (எந்நிலையிலும்) நேர்மையான சொல்லையே சொல்லுங்கள். அழகானதைப் பேசுக! பெற்றோருக்கும், உறவினர்களுக்கும், அநாதைகளுக்கும், மிஸ்கீன் (களான ஏழை) களுக்கும் நன்மை செய்யுங்கள்; மனிதர்களிடம் அழகானதைப் பேசுங்கள்." (2: 83)

### கனிவாகப் பேசுக!

"உறவினர்களோ, அநாதைகளோ, ஏழைகளோ வந்து விடுவார்களானால் அவர்களுக்கும் அ(ச்சொத்)திலிருந்து வழங்குங்கள். மேலும் அவர்களிடம் கனிவான வார்த்தைகளைக் கொண்டே பேசுங்கள்." (4: 80)

### நியாயமாகப் பேசுக!

"நீங்கள் பேசும்பொழுது அதனால் பாதிக்கப்படுபவர் நெருங்கிய உறவினராக இருந்த போதிலும் நியாயமே பேசுங்கள்." (6: 152)

### அன்பாகப் பேசுக!

"அண்டை வீட்டிலுள்ள உறவினர்களுக்கும் அருகிலுள்ள அண்டை வீட்டாருக்கும் (பிரயாணம், தொழில் போன்றவற்றில்) கூட்டாளிகளாக இருப்போருக்கும், வழிப்போக்கர்களுக்கும், உங்களிடமுள்ள அடிமைகளுக்கும் அன்புடன் உபகாரம் செய்யுங்கள். நிச்சயமாக அல்லாஹ் கர்வமுடையோராக, வீண் பெருமை உடையோராக இருப்பவர்களை நேசிப்பதில்லை." (4: 36)

### வீண் பேச்சை தவிர்த்திடுக!

"நம் வசனங்களைப் பற்றி வீண் விவாதம் செய்து கொண்டிருப்போரை நீர் கண்டால், அவர்கள் அதைவிட்டு வேறு விடயங்களில் கவனம் செலுத்தும் வரையில் நீர் அவர்களைப் புறக்கணித்து விடும்." (6: 68)

### பொய் பேசாதீர்!

"உங்கள் நாவுகள் (சில பிராணிகள் பற்றி) பொய்யாக வர்ணிப்பது போல், இது ஹலாலானது, இது ஹராமானது என்று அல்லாஹ்வின் மீது பொய்யை இட்டுக்கட்டாதீர்கள்; நிச்சயமாக, எவர் அல்லாஹ்வின் மீது பொய்யை இட்டுக் கட்டுகிறார்களோ அவர்கள் வெற்றியடைய மாட்டார்கள்." (16: 116)

### புறம் பேசாதீர்!

"உங்களில் சிலர் சிலரைப் பற்றிப் புறம் பேசவேண்டாம்." (49: 12)

### ஆதாரமின்றி பேசாதீர்!

"யாதோர் ஆதாரமுமின்றி, அல்லாஹ்வின் வசனங்களைப் பற்றித் தர்க்கம் செய்வது, அல்லாஹ்விடத்திலும் ஈமான் கொண்டவர்களிடத்திலும் மிகவும் வெறுக்கப்பட்டதாகும்." (40: 35)

### அவதூறு பேசாதீர்!

"எவர்கள் முஃமினான ஒழுக்கமுள்ள, பேதைப் பெண்கள் மீது அவதூறு சொல்கிறார்களோ, அவர்கள் நிச்சயமாக இம்மையிலும் மறுமையிலும் சபிக்கப்பட்டவர்கள்." (24: 23)

ஆயிஷா அம்ரா அனீஸ், புத்தளம்

## சிறுவர் பூங்கா

முதல் பரிசுக்குரியவர்:

**எம்.ஐ.எப். நுஸ்ஹா**

கல்பொக்க, வெலிகம

### ஆறுதல் பரிசைப் பெறுவோர்

01. அஹ்ஸன் முஹம்மத் - அகலவத்தை
02. ஆர்.ஏ.ஏ. அஷ்பாக் - கஹட்டோவிட்ட
03. எம்.எப்.எப். ஹானிம் - மதுரங்குளி
04. ஆயிஷா நௌபர்தீன் - பண்டாரகொஸ்வத்தை
05. பைனாஸ் ஸப்ரா - வெலம்பொட
06. ரைஹானா பர்ஹான் - மடவளை
07. பாத்திமா மஸ்ஹரா - மினுவங்கொடை
08. எம்.எச்.ஏ. பாத்திமா முப்லிஹா - கிண்ணியா
09. எம்.ஆர். பாத்திமா றிகாஸா - புத்தளம்
10. சுஹா புஹாரி - சியம்பலா கஸ்கொடுவ

**குறிப்பு:**

விடைகளை தபால் அட்டையில் (Post Card) மாத்திரம் எழுதி அனுப்பவும்.

## போர்க்களத்தில் ஷஹீத்களுக்கு கிடைக்கும் ஆறு வெகுமதிகள்

01. முதலாம் இரத்தத் துளியுடன் அவரது பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன.

02. சுவனபதியில் அவர் தங்குமிடத்தைக் கண்ணால் காண்கிறார்.

03. மண்ணறையின் வேதனையில் இருந்து பாதுகாக் கப்படுகிறார்.

04. மறுமையின் பெரும் திடுக்கங்களிலிருந்து பாது காப்புப் பெறுகிறார்.

05. நம்பிக்கையின் அணிகலன்கள் அணிவிக்கப்பட்டு ஹூருல் ஈன்களுடன் திருமணம் செய்து வைக்கப்படுகிறார்.

06. அவரது நெருங்கிய உறவினர்களுள் எழுபது பேரை பரிந்துரை செய்து சுவர்க்கத்தில் சேர்த்து விடுகிறார் என நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறி னார்கள். (ஆதாரம்: அஹ்மத், திர்மிதி, இப்னு மாஜா)

**எஸ்.ஸபீலா பேகம்**

**பாத்திமா ஸஹ்ரா பெண்கள் அரபுக் கல்லூரி, ஓட்டமாவடி**

## அல்குர்ஆன் கூறும் உவமைகள்

அல்லாஹ் அல்குர்ஆனில் சில விடயங்களை விளக்குவ தற்காக உவமையைப் பயன்படுத்துகிறான். உதாரணமாக:

“எவர்கள் தங்களின் பொருட்களை அல்லாஹ்வின் பாதையில் செலவு செய்கின்றார்களோ அவர்களுக்கு உதார ணமாவது; ஒவ்வொரு கதிரிலும் நூறு தானியங்கள் கொண்ட ஏழு கதிர்களை முளைப்பிக்கின்ற ஒரு வித்தைப் போன்றதா கும். அல்லாஹ் தான் நாடியவர்களுக்கு (இதனை இன்னும்) இரட்டிப்பாக்குகிறான். அல்லாஹ் விசாலமான (கொடையு டைய) வன்; முற்றிலும் அறிந்தவன்.” (2: 261)

அல்லாஹ்வின் பாதையில் செலவிடப்பட்டதற்கு பதிலாக மறுமையில் எழுநூறு மடங்காக சில சமயம் அதைவிட கூடுத லாக நற்கூலி கிடைக்கப்பெறும். இதனையே இவ்வசனம் எடுத்துக் கூறுகிறது. மனிதனின் அறிவால் இவ்விடயத்தை விளங்கிக் கொள்வதென்பது சற்று கடினமான விடயமாக இருந்தது. இதன் காரணமாக அல்லாஹ் அதனை ஓர் உதார ணத்தின் மூலம் இங்கு விளங்கப்படுத்தியுள்ளான். அதாவது பூமியில் விதைக்கப்பட்ட ஒரு வித்தின் மூலம் உருவான மரத்தில் ஏழு கதிர்கள் உருவெடுக்கின்றன. ஒவ்வொரு கதிரிலும் நூறு வித்துக்கள் என எழுநூறு வித்துக்கள் முளைக்கின்றன. இதைப் போன்று அல்லாஹ்வுக்காக செலவிடப்படும் பொருளிலும் மறுமையில் பிரதிகூலி கிடைக்கப் பெறும் என்பது இங்கு எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

விடயத்தை தெளிவுபடுத்துவதற்காக அல்குர்ஆனில் இத்தகைய பல உவமைகள் கூறப்பட்டுள்ளன.

**இபாஸ் இக்பால்**

## நானும் உனக்காய்

எத்தனை தடவை - என்
வாயருகில் வந்து முத்தமிட்டுள்ளாய்
எத்தனை தடவை - உன்
மார்போடு என்னை அணைத்திருப்பாய்,
எத்தனை தடவை- என்
நெஞ்சின் பாரத்தை சுமந்திருப்பாய்,
எத்தனை தடவை- எனக்காய்
மட்டும் நீ வாழ்ந்திருப்பாய்.
இன்னும், எத்தனை எத்தனையோ...
இத்தனைக்கும் மத்தியில் உனக்கு - நான்
எத்தனை செய்துள்ளேன்???
அத்தனைக்கும் தினம் தினம் தவம் இருக்கின்றேன்.
நாளை மறுமையில் நானும் - உனக்காய்
ஒரு கிரீடம் அணிவிக்க வேண்டுமென்று!!
இன்ஷா அல்லாஹ்!

**நஸ்மா பின்த் ஸவாஹிர்**
**அல்ஹஸனியா ம.வி.**
**மக்கொனை**

## வினா-விடைப் போட்டி-81

01. கல்வி அமைச்சு 2013இல் வெளியிட்ட தகவல் களின்படி இலங்கையிலுள்ள அரச பாடசாலைகளின் எண்ணிக்கை யாது?

02. இறை தூதர் யூஸுஃப் (அலைஹிஸ்ஸலாம்) அவர் களின் எழிலைக் கண்டு அவர்மீது மோகம் கொண்ட பெண்மணி யார்?

03. 17 நாட்களில் யூத மொழியைக் கற்றுக் கொண்ட நபித் தோழர் யார்?

04. உஸ்மானியப் பேரரசின் 7வது ஸுல்தான் யார்?

05. ‘இமாமுல் மதீனா’ என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்படும் இமாம் யார்?

**உங்கள் விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் எழுதி ஏப்ரல் 22ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வையுங்கள்.**

**சிறுவர் பூங்கா**
அல்ஹஸனாத்
77, தெமடகொட வீதி, கொழும்பு-09

# - ஜனாபத்துடைய நிலையில் நகம், தலை முடி கத்தரிக்கலாமா?
# - தொழுகைக்கு இகாமத் கூறப்பட்ட பின் ஸுன்னத்து தொழுகையை நிறைவேற்றலாமா?
# - EPF பணத்தோடு கிடைக்கும் வட்டிப் பணம் குறித்து...

அஷ்ஷெய்க் முஹம்மத் முபீர் (இஸ்லாஹி), (M.A).
விரிவுரையாளர், இஸ்லாஹிய்யா அரபுக் கல்லூரி, மாதம்பை. mufeer96@gmail.com

**கேள்வி:** ஜனாபத்துடைய நிலையில் நகம், தலை முடி கத்தரிக்கலாமா?

**பதில்:** சில இஸ்லாமிய அறிஞர்கள் மனிதன் மற்றும் அவனுடைய உடல் உறுப்புகள் கண்ணியப்படுத்தப்பட வேண்டும் என்பதற்காக குளிப்பு கடமையான நிலையில் நகம், தலை முடியை களைவது வெறுக்கத்தக்கது (மக்ரூஹ்) என குறிப்பிடுகின்றனர்.

எனினும், இமாம் புகாரி அவர்கள் தன்னுடைய ஸஹீஹுல் புகாரியில் "மாதவிடாய் ஏற்பட்டுள்ள ஒரு பெண் ஹஜ்ஜின்போது கஃபாவைத் தவாப் செய்வதைத் தவிர ஏனைய எல்லா கிரியைகளையும் செய்வாள்" எனும் தலைப்பில் பின்வரும் ஹதீஸை சுட்டிக் காட்டுகிறார்:

ஆஇஷா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்கள் ஹஜ்ஜில் மாதவிடாயை அடைந்து கவலையுடன் இருக்கும்போது நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் "ஒரு ஹாஜி செய்கின்ற அனைத்துக் கிரியைகளையும் நீங்களும் செய்யுங்கள். ஆனால், நீங்கள் சுத்தமடையும் வரை கஃபாவைத் தவாப் செய்ய வேண்டாம்" எனக் கட்டளையிட்டார்கள்.

ஹஜ்ஜின் கிரியைகளில் ஒன்றுதான் தலை முடியை சிரைத்தல். இதனை ஆஇஷா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்கள் அசுத்தமாக இருக்கின்ற போதிலும் செய்வதற்கு நபியவர்கள் மறைமுகமாக அனுமதி வழங்கியுள்ளார்கள் என்பதனை இந்த ஹதீஸ் சுட்டிக் காட்டுவதாக புகஹாக்கள் குறிப்பிடுகின்றனர்.

அதே போன்று ஜனாபத்துடைய நிலை மாதவிடாய் நிலையை விட குறைவானது. எனவே, ஜுனுபான ஒருவர் நகம், முடி வெட்டுவதில் தடையேதுமில்லை என்கின்ற நுணுக்கமான பிக்ஹு சட்டத்தையும் வகுத்துள்ளார்கள்.

**கேள்வி:** நான் ஸுப்ஹு தொழுகையை நிறைவேற்றுவதற்காக மஸ்ஜிதுக்குச் சென்றேன். அப்போது தொழுகைக்கு இகாமத் கூறப்பட்டு விட்டது. அப்போது ஸுப்ஹுடைய இரண்டு ரக்அத் ஸுன்னத்து தொழுகையை அவசரமாக தொழுது விட்டு இமாம் ஜமாஅத்துடன் சேர்ந்து கொள்ள முடியுமா?

**பதில்:** இகாமத் கூறப்பட்டு விட்டால் ஜமாஅத் தொழுகையைத் தவிர வேறு தொழுகைகளில் ஈடுபடக் கூடாது என்பதுதான் அடிப்படை. அது ஸுப்ஹுத் தொழுகையுடைய ஸுன்னத்தாக இருந்தபோதிலும் சரியே. எனவே, நீங்கள் மஸ்ஜிதுக்குச் செல்லும்போது இகாமத் கூறப்பட்டு விட்டால் வேறு ஸுன்னத்தான தொழுகைகளில் ஈடுபடாமல் இமாமுடன் சேர்ந்து ஜமாஅத்துத் தொழுகையிலேயே ஈடுபட வேண்டும்.

ஸுப்ஹுடைய இரண்டு ரகஅத் ஸுன்னத்து தொழுகை வலியுறுத்தப்பட்ட (முஅக்கதா) மிகவும் ஏற்றமான தொழுகையாகும். இதனை நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் விடாமல் தொழுது வந்துள்ளார்கள். அதன் சிறப்பைப் பற்றிக் கூறும்போது "ஸுப்ஹுடைய ஸுன்னத்தான இரண்டு ரகஅத்துக்களும் உலகம் உலகத்தில் இருக்கின்ற அனைத்தையும் விட சிறந்தது" என்றார்கள். (முஸ்லிம்)

எனவே, ஸுப்ஹுத் தொழுகையைத் தொழுது முடித்ததன் பிறகு உள்ள நேரம் வேறு ஸுன்னத்தான தொழுகைகளைத் தொழுவதற்கு தடுக்கப்பட்ட நேரமாக இருந்தபோதிலும் கூட, ஸுப்ஹுடைய ஸுன்னத்தான இரண்டு ரகஅத்துக்களையும் தொழுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதற்கு பின்வரும் சம்பவம் ஆதாரமாக கொள்ளப்படுகின்றது:

கைஸ் இப்னு உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் கூறுகின்றார்கள். நான் ஸுப்ஹுடைய சுன்னத்து தொழுகையை ஸுப்ஹுத் தொழுகைக்குப் பிறகு தொழுது கொண்டிருந்தபோது நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் என்னைக் கண்டார்கள். பின்னர் "கைஸே! நீங்கள் தொழுத இந்த இரண்டு ரகஅத்துக்களும் என்ன தொழுகை?" என வினவினார்கள். அப்போது நான்

PUBLIC LIBRARY
JAFFNA



"அல்லாஹ்வின் தூதரே! ஸுப்ஹுடைய சுன்னத்து தொழுகை தவறி விட்டது. அதனைத்தான் இப்பொழுது தொழுதேன்" எனக் கூறினேன். நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் அதனை மறுக்கவில்லை.

(அபூதாவூத், அத்திர்மதி)

**கேள்வி:** நீண்ட காலமாக ஒரு நிறுவனத்தில் பணியாற்றிய நான் தற்போது ஓய்வு பெற்று என்னுடைய EPF பணத்தையும் பெற்றுக் கொண்டுள்ளேன். அந்தப் பணத்துடன் எனக்கு வட்டியும் கிடைத்துள்ளது. அதனை நான் என்ன செய்ய வேண்டும்?

**பதில்:** நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள். "நிச்சயமாக ஹலால் தெளிவானது; ஹராமும் தெளிவானது. இரண்டுக்குமிடையில் சந்தேகமானவை காணப்படுகின்றன." (அல்புகாரி, முஸ்லிம்)

உங்களுக்கு கிடைத்துள்ள EPF பணத்தில் வட்டியாக கிடைத்திருப்பது தெளிவான ஹராமாகும். ஏனையவை தெளிவான ஹலாலாகும். இங்கு வட்டியாக உங்களுக்கு கிடைத்துள்ள பணம் பிறருடைய பணம். அது உங்களுக்கு அநியாயமாகக் கிடைத்துள்ளது. அடிப்படையில் இப்பணம் அநியாயமிழைக்கப்பட்டவர்களுக்கே மீட்டிக் கொடுக்கப்பட வேண்டும். எனினும், இங்கு அநியாயமிழைக்கப்பட்டவர் யார் என்பதை அறிந்து கொள்ள முடியாத காரணத்தினால் அப்பணத்திலிருந்து நீங்கள் உங்களை விடுதலையாக்கிக் கொள்ள வேண்டிய பொறுப்பு உங்களுக்கு இருக்கிறது.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள். "எந்த உடம்பு ஹராத்தினால் வளர்கின்றதோ அது நரகத்துக்கே மிகவும் பொருத்தமானது."

(முஸ்னத் அஹ்மத், அத்திர்மிதி)

எனவே, வட்டியாக உங்களுக்கு கிடைத்த இந்தப் பணத்தை உங்களது தேவைக்கோ அல்லது உங்களுடைய பராமரிப்பில் உள்ளவர்களது தேவைக்கோ செலவளிக்க முடியாது. அவ்வாறே எந்தவிதமான நன்மையையும் எதிர்பார்க்காமலும், நான் எனக்குக் கிடைத்த இந்த ஹராமான பணத்திலிருந்து என்னை நீக்கிக் கொள்கின்றேன் என்ற நோக்கிலும் சில பொதுவான நன்மையான காரியங்களுக்குக் கொடுத்து விடுங்கள்.

உதாரணமாக ஒரு பாதையைச் சீரமைத்தல், மலசல கூடங்களைக் கட்டிக் கொடுத்தல், மிகவும் கஷ்டத்தில் இருப்பவர்களுக்கு வழங்குதல், கடனாளிகளின் கடன் சுமையை நீக்குவதற்காக கொடுத்தல்... முதலானவற்றைக் குறிப்பிடலாம். ■

كلية خديجة الكبرى للدراسات الإسلامية والتدريب المهني
கதீஜதுல் குப்ரா மகளிர் கல்லூரி
7th Mile Post, Watadeniya, Velamboda.
Tel: 081205505050, 0770319545 E-mail: kklc2009@gmail.com


புதிய மாணவியர் அனுமதி 2015

தகைமைகள்:
- 2014 இல் க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றி க.பொ.த. உயர்தரத்துக்கு தகுதி பெற்றிருத்தல்
- 01.06.2015 இல் 18 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல்
- 05 வருட கல்வியை தொடர்வதற்கு தடையில்லாத சுகதேகியாக இருத்தல்

நேர்முகப் பரீட்சை
- இன்ஷா அல்லாஹ் 09.05.2015 சனிக்கிழமை கிழக்கு, வட, வடமேல், மத்திய, தென் மாகாணங்களைச் சேர்ந்தவர்களுக்கும்,
- 10.05.2015 ஞாயிற்றுக்கிழமை வட மத்திய, ஊவா, சப்ரகமுவ, மேல் மாகாணங்களைச் சேர்ந்தவர்களுக்கும் நடைபெறும்.
- நேர்முகப் பரீட்சைக்கு தகைமை பெற்ற மாணவிகள் பாடசாலை அதிபரினால் உறுதிப்படுத்தப்பட்ட க.பொ.த சா/த பரீட்சைப் பெறுபேறு, தேசிய அடையாள அட்டையுடன் சமுகமளிக்கவும்
- நேர்முகப்பரீட்சை மு.ப 08.30 க்கு ஆரம்பமாகும்
- எழுத்துப்பரீட்சை பி.ப 12.00 க்கு ஆரம்பமாகும்

மாதாந்த விடுதிக் கட்டணம்
ரூபா 6000.00

குறிப்பு:
- சிங்கள அல்லது ஆங்கில மொழி மூலம் கல்வி கற்றவர்கள் மற்றும் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டியவர்கள் கவனத்தில் கொள்ளப்படுவர்
- மாதாந்தக் கட்டணத்தில் சலுகைகள் வழங்கப்பட மாட்டாது
- தெரிவு செய்யப்படும் மாணவிகள் க.பொ.த. உ/த பரீட்சைக்கு நான்காம் கல்வியாண்டில் அனுமதிக்கப்படுவர்
- க.பொ.த. உயர்தர வகுப்புகள் மூன்றாம் கல்வியாண்டில் ஆரம்பிக்கப்படும்.




பெருங் கொடையாளனே! எண்ணில டங்காஅருள்களைஅள்ளிச் சொரிந்திருக்கி றாய். இவற்றையெல்லாம் பெறுவதற்கு எந்தத் தகுதியும் அற்றவர்கள் நாங்கள். உன் அடியார்கள் மீது கொண்ட அளவற்ற அன்பினால் அள்ளித் தருகிறாய். நாம் அனுபவித்துக் கொண்டிக்கிறோம், நன்றி கூறக்கூட நேரமில்லாமல்.

நாயனே! எங்கள் வளமான வாழ்வுக்காய் வகை வகையாய்ச் செல்வங்களை நீ வாரி வழங்கினாலும் பொருள் வளத்தை மட்டுமே மனிதன் செல்வம் என எண்ணுகிறான். பொருள் வளம் உள்ளவன் மட்டுமே பாக் கியவானாய் பார்க்கப்படுகிறான்.

இன்றைய உலகில் பணமில்லாதபோது கல்வி பெறும் வாய்ப்பும் தூரமாய்ப் போகும். நோய்க்குச் சிகிச்சையும் கேள்வியாய் மாறும். எதைச் செய்வதற்கும் பொருளே ஆதாரமாய் நிற்கிறது. அதனால் மனிதன் வாழ்வு நெடு கிலும் பொருளுக்குப் பின்னால் ஓடிக் கொண்டிருக்கிறான். கடமைகளை ஒதுக்கி வைத்து, உறவுகளை உதறித் தள்ளி, ஆரோக் கியத்தையும் புறக்கணித்து பொருள் தேடி ஓடுகிறான். அது ஓயாத ஓட்டம்.

இறைவா! எல்லாச் செல்வங்களுக்கும் உரிமையாளன் நீ. உன் பொக்கிஷத்திலி ருந்து நீ நாடியவர்களுக்கு அள்ளியும் கொடுக்கிறாய்; குறைத்தும் கொடுக்கி றாய். மனிதன் உழைத்துப் பெற்றுக் கொள் ளும் செல்வம் முழுக்க முழுக்க உனக்குரி யதே! அதை நீ அமானிதமாக அவனுக்க ளிக்கிறாய். ஒருவனுக்கு நீ வழங்கும் செல் வத்தில் இன்னும் பலருக்கு உரிமையை வைத்திருக்கிறாய். செல்வம் பெற்றவன் உன் திருப்தியை நாடி தனக்குக் குறைவாய் பிறருக்கு அதிகமாய் செலவு செய்யும்போது வெற்றி பெறுகிறான்.

ஆனாலும் மனிதன் தான் சிரமப்பட்டு உழைத்த செல்வத்துக்கு அதிபதியாய் தன்னை நினைக்கிறான். தான் தேடியதை தன் விருப்பப்படி செலவு செய்யலாம். அதைத் தடுக்க யாருக்கும் உரிமையில்லை எனக் கருதுகிறான். இறைவன் தந்த அமானிதம் என்னிடம் இருக்கிறது. அவன் எந்தக் கணத்திலும் இதைத் திருப்பி எடுத்து விடலாம். இதில் யாருக்கெல்லாம் உரிமையை வைத்திருக் கிறானோ அதை நிறைவேற்ற வேண்டும் என்றெல்லாம் சிந்திக்க அவனுக்கு நேரமில்லை. அதனால் பொருளைத் தேடுவதிலும் அதனைச் செலவு செய்வதிலும் தன் அடுத்தடுத்த பரம்பரைகளுக்காய்ச் சேமிப் பதிலுமே வாழ்வு கரைகிறது.

அளவில்லாச் செல்வங்களுக்கு அதிபதியே! பொருட் செல்வம் இல்லாத வறுமை நிலை இறைவனை மறுக்கின்ற நிலைக்கு மனிதனை இட்டுச் செல்லும் என்றார் உன் இறுதித் தூதர். அத்தகைய பயங்கரத் திலிருந்து எம்மைப் பாதுகாத்து விடு! செல்வம் உயர் பாக்கியம். அதுவே பெருஞ் சோதனை. நீ எதற்காக இந்தச் செல்வங்களை எமக்குத் தந்தாயோ அதற்காகவே இவற்றைச் செலவு செய்யும் மனநிலையையும் எமக்குத் தந்து விடு!

உன் வழியில் ஈந்தவருக்கு அளவிலாக் கூலி கொடுப்பதாய்க் கூறு கிறாய். இறைவா! உன் பொருளைத்தானே உன் வழியில் கொடுக்கி றோம். இதற்குமா வெகுமதி? நாயனே! உன் கருணைக்கு ஈடேது?

இறைவா! நீ தந்தாய். கொடுக்கச் சொன்னாய். உன் பணி மறந்து தண்டிக்கப்படக் கூடாதென அழகிய சுவனங்களைச் சொல்லி ஆசை காட்டினாய். எம்மைப் பாதுகாக்க என்னவெல்லாமோ செய்கிறாய். ஆனாலும், நாங்கள் விழித்துக் கொள்ளவில்லை.

உனக்காக அதிகம் செலவு செய்வதில் போட்டியிட்ட உத்தமர்களை வரலாற்றில் பார்க்கிறோம். கேவலம்! உன் பொருளை எடுத்து எமக் காகச் செலவு செய்வதில் முன்னுக்கு நிற்பதற்கல்லவா முண்டியடிக்கி றோம். மறுமையில் நீ விசாரிக்கும்போது என்ன செய்யப் போகிறோம்.

நேர்வழி காட்டுபவனே! செல்வத்தை எமக்குச் சோதனையாக்கி விடாதே! அதை எமக்குச் சுவனத்துக்கான முதலீடாக மாற்றி விடு! இந்த வளங்களுக்கு உரிமையாளன் நீ என்பதை எமக்கு மறக்கடித்து விடாதே! பணத் தீயைச் சுற்றும் விட்டில்களாகி விடாமல் எம்மைக் காத்து விடு! மனித குலத்தின் தேவைகளை நிறைவேற்றவும் மண்ணில் உன் தீனை நிலைநாட்டவும் நீ ஈந்த அனைத்தும் அர்ப்பணமாகட்டும்!

(தொடரும்)

# كلية النهجة العرفانية العربية

## 2015/2016 புதிய மாணவர் அனுமதி

## இர்பானிய்யா அரபுக் கல்லூரி, கெகுணகொல்ல.

ஷரீஆத் துறையில் உயர் கற்கையுடன் கூடிய பல சான்றிதழ்கள் உள்ளடக்கிய 05 வருட வதிவிட கற்கைநெறி.

- அரபு, இஸ்லாமிய கற்கைகள் சான்றிதழ் கற்கை நெறி - Licentiate Certificate in Arabic and Islamic Studies (அல்குர்ஆன், அஸ்சுன்னா, பிக்ஹ், அகீதா, தாரீஹ், ஸீறா, உஸுலுல் பிக்ஹ், உலூமுல் குர்ஆன், உஸுலுல் ஹதீஸ், உஸுலுத் த்.வா, நவீன கலைகள்...)
- வெளிவாரிப் பட்டப்படிப்புக்கான வாய்ப்பு - External Degree
- அரபு மொழி - Classical and Modern Arabic
- கணணி சான்றிதழ் கற்கைநெறி - Certificate in Computer Studies
- ஆங்கில மொழி சான்றிதழ் கற்கைநெறி - Certificate in English Language
- இதழியல் சான்றிதழ் கற்கைநெறி - Certificate in journalism
- அல்ஆலிம் சான்றிதழ் பரீட்சை - Certificate in Al-Aalim Exam
- தர்மாச்சாரிய சான்றிதழ் பரீட்சை - Certificate in DarmacharyaExam
- இஸ்லாமிய நாகரிகம், அரபு, அரசியல் விஞ்ஞானம் - க.பொ.த (உ.த)
- சிங்கள மொழி - Sinhala Language

ஐந்து வருட கால பாடத்திட்டம். பத்தாவது அனுமதி

- அறிவு விருத்தி Cognitive Development
- திறன், மென்திறன் விருத்தி Skills & Soft skills Development
- ஆன்மிக விருத்தி - Spiritual Development
- பண்பாட்டு விருத்தி - Moral Development
- நடத்தை மாற்றம் - Behavioral Change

**தகைமைகள்:**
- அல்குர்ஆனை ஓதத் தெரிந்திருத்தல்.
- கா.பொ.த சாதாரண தர பரீட்சையில் சித்தியடைந்து க.பொ.த உயர் தரத்தில் கலைப்பிரிவில் கற்பதற்கான தகைமையைப் பெற்றிருத்தல்.
- 18 வயதிற்கு உட்பட்ட முஸ்லிம் ஆண் மாணவனாக இருத்தல். 1997.01.01 ஆம் திகதிக்குப் பின் பிறந்திருத்தல்
- சிறந்த பண்பாடு, நடத்தை உள்ளவராக இருத்தல்.
- ஆரோக்கியமுள்ளவராக இருத்தல்

**நேர்முகப் பரீட்சை:**

க.பொ.த (சா.த) பரீட்சை பெறுபேறு வெளியாகிய பின்னர் ஏப்ரல் மாதம் 27,28,29,30 ஆம் திகதிகளிலும் மே 4,5,6 ஆம் திகதிகளிலும் காலை 9.00 மணி முதல் மாலை 05 மணி வரை நடை பெறும். பிறப்புச் சான்றிதழ், அடையாள அட்டை, க.பொ.த சா.த பெறுபேறு, ஏனைய சான்றிதழ்கள், நற்சான்றிதழ் என்பவற்றுடன் மேற்குறிப்பிட்ட ஒரு தினத்தில் நேரடியாக சமூகமளிக்க வேண்டும்.

**Irfaniyya Arabic College**
Jumma masjid Rd,Kekunagolla, Narammala.
SMS 0772105992 tmnilam@gmail.com



# SAFIYYA LADIES COLLEGE FOR ARABIC AND ISLAMIC STUDIES
## GINTOTTA, GALLE.

## كلية صفية للدراسات الإسلامية والعربية للبنات

## ஸபிய்யா அரபு மற்றும் இஸ்லாமிய கற்கைளுக்கான மகளிர் கல்லூரி

## மாணவிகளை சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பம் கோரல்- 2015

இக்கல்லூரி க.பொ.த (உ/த) கலைப் பிரிவு, அல்ஆலிம் பகுதி 1, அல்ஆலிம் பகுதி 11, (உ/த) கலாபீடத்தின் கற்கைநெறி, மேலும் பல சிறப்புப் பயிற்சிகள் உள்ளடக்கிய கற்கைநெறிகளை வழங்கவுள்ளது.

ஆல்குர்ஆனை சரளமாக ஓதத் தெரிந்த, 2013-14 இல் க.பொ.த. (சா/த) தமிழ், கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்த மாணவிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**விண்ணப்பம்:** Download செய்ய :www.manaruddawa.org/net/com.
Twitter:safiyyaladies@safiyya_lcface book:Safiyya Ladies College

**முகவரி:** M.M. MUMTHAZ (Secretary)
305/3, NAVINNA, ULUVITIKE, GALLE

**தொடர்புகளுக்கு:** Ashsheikh M.M. Zaky (Madani) B.A. 0770316371
Moulaviya Maziyya Yahiya B.A. (Hons) - 0775979310

ஹிந்தி மூலம்: மௌலானா வஹீதுத்தீன் கான்
தமிழில்: ஸீயெம்மே அமீன்

# ஸகாத்தும் ஸதகாவும்

வெற்றிக்கான வழிமுறைகள் - 11

ஒருவன் ஸதகா, ஸகாத் என்ற பெயர்களில் எவருக்காவது எதையாவது கொடுக்கிறான் என்றால், வெளிப்படையாக பிறருக்குக் கொடுப்பதாக இருந்தாலும், உண்மையிலேயே இதனுடைய பொருள் தனக்காகக் கொடுப்பதாகவே இருக்கிறது. மற்றவருக்குக் கொடுத்து, ஒருவன் தன்னைப் பரிசுத்தப்படுத்திக் கொள்கிறான்.

இவ்வாறு செய்து மனிதன் தன்னுடைய உள்ளத்திலிருந்து பொருளாசையை அகற்றிக் கொள்கிறான். தன்னிடம் இருக்கின்ற பொருட் செல்வமானது இறைவனால் வழங்கப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பேயன்றி, தனக்குச் சொந்தமானதல்ல என்ற நம்பிக்கையை உறுதிசெய்து கொள்கிறான். இவ்வாறு தன்மீது மற்றவர்களுக்கும் உரிமை இருப்பதான உணர்வை விழிப்புறச் செய்கின்றான்.

ஒருவன் பிற மனிதனுக்குக் கொடுக்கட்டும். ஆனால், இதற்கான பிரதிபலனை இறைவனிடமிருந்தே எதிர்பார்க்கட்டும் என்பதற்கான பயிற்சியாகவே ஸகாத் அல்லது ஸதகா விளங்குகிறது. அவன் ஒருமுகமாகப் பிற நலனை விரும்புபவனாகவும் அவர்களுக்கு உதவியாளனாகவும் இருக்கட்டும். அவன் தனது வாழ்வில் அத்தகைய மனிதர்களுக்குத் தன்மீது உரிமை இருப்பதாக விளங்கிக் கொள்ளட்டும். ஆனால், அவர்களிடமிருந்து எதையும் அடைந்து கொள்ளும் எதிர்பார்ப்பு இல்லாதிருக்கட்டும்.

ஸகாத் கொடுத்தல் என்பது இன்னொரு கருத்தில் பிறருக்கு உதவி புரிவதாக அமைகிறது. நீ இவ்வுலகில் கேட்டு வாங்குபவனாக அன்றி, கொடுப்பவனாக இருக்க வேண்டும் என்பதை ஸகாத் மனிதனுக்கு ஞாபகப்படுத்துகிறது. உனது உரிமைகளை விட கடமைகளிலேயே நீ கவனம் செலுத்த வேண்டும். உனது கை எப்போதும் மேலே இருக்கட்டும். கீழே வராதவாறு நீ உன்னை ஆக்கிக் கொள்ள வேண்டும்.

ஸகாத் ஒருவகையில் செயல் ரீதியான துஆவாகும். ஸகாத் கொடுப்பவன் இறைவனிடமிருந்து பெற்றுக் கொள்வதற்காகவே கொடுக்கிறான். இறைவன் தனக்கு உதவியாக இருக்க வேண்டுமென்பதற்காக அவன் மற்றவர்களுக்கு உதவியாக இருக்கிறான். இறைவன் ஒருமுகமாகத் தனது ரஹ்மத்தினதும் உதவியினதும் நிழலில் தன்னை எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகப் பிறருக்கு உதவிபுரிபவனாக விளங்குகின்றான்.

இவ்வுலகில் வெளிப்பார்வைக்கு ஒருவன் ஏழையாகவும் இன்னொருவன் பணக்காரனாகவும் இருக்கின்றான். ஆனால், உண்மையில் எல்லா மனிதர்களும் சார்ந்திருப்பவர்களேயாவர். செல்வம் எவருக்கும் ஏகபோக உரிமையானதல்ல. எல்லா மனிதர்களிடமும் இருக்கின்ற செல்வமானது இறைவனால் அளிக்கப்பட்டதாகும். செல்வந்தனொருவன் வறியவனுக்கு எதையாவது கொடுக்கின்றான் என்றால், அவன் தன்னுடைய யதார்த்த நிலையைத் தனக்குத்தானே ஞாபகமூட்டிக் கொள்கிறான் என்பதே பொருளாகும். அவன் தனது நிகழ்காலத்தில் இருந்து கொண்டு சொல்கிறான்: "நானும் உன்னைப் போன்றவனே. இறைவன் நாடினால் நாளை எனது நிலையை உன்னைப் போலவும் உனது நிலையை என்னைப் போலவும் மாற்றி விடுவான்."


ஓர் அரிய சந்தர்ப்பம்
கண்ணில் வெள்ளை படர்தல் நோய்க்கான
சத்திர சிகிச்சை
(Cataract Surgery)
விஷேட வில்லையுடன்
கட்டணம் ரூபா. 15,000/-
குவைத் வைத்தியசாலை புத்தளம்
தொடர்புகளுக்கு:
0322266480, 0777272107,
0718183833

மாதம் இருமுறை கத்னா செய்யப்படும் 2950.00 மட்டுமே
ஏப்ரல்- 25 பதிவுகளுக்கு முந்திக் கொள்ளுங்கள்

உங்களது பிள்ளைகளுக்காக...
இஸ்லாமிய வரலாற்றுடன் தொடர்புடைய
72 படங்கள்
இக்ரா படப் புத்தகம்
வெளியீடு:
விலை: 75.00
இக்ரா கல்வி நிலையம்,
த.பெ.இல: 750, கொழும்பு- 09
தொலைபேசி: 0115928978
கிடைக்குமிடம்:
இஸ்லாமிக் புக் ஹவுஸ்
77, தெமடகொட வீதி, கொழும்பு- 09
தொலைபேசி: 0112684851

# WORLD FOCUS COLLEGE MAWANELLA

முன்மாதிரி முஸ்லிம் பெண்களை உருவாக்குவதற்கென்றே தலைசிறந்த உலமாக்களையும், துறைசார் புத்திஜீவிகளையும் கொண்டு வடிவமைக்கப்பட்டு பலநூற்றுக்கணக்காக பெற்றோர்களின் மனதை வென்று குடும்பங்களிலும் சமூகத்திலும் மாற்றங்கள் பல ஏற்படுத்திய பாடநெறி

பதிவுகள் தற்பொழுதிலிருந்தே ஆரம்பம்

Age Limit
வயதெல்லை 16 - 25

ஜமாத் 10ஆம் பிரிவு ஜே 10ஆம் திகதி ஆரம்பம்

Gold Medals

## OUR 9TH BATCH STARTS ON 4TH OF JANUARY 2015

3 MONTHS Residential Course for Unmarried Girls

பிரதி வியாழக்கிழமை காலை 9.00 முதல் SLBC முஸ்லிம் சேவையில் செவிமடுக்கலாம்.

இதில் தமிழ், ஆங்கிலம், சிங்களம் மொழிகளில் கல்வி கற்றவர்களுக்கும் இதில் கலந்து கொள்ள முடியும்.

More Than 5 Certificates

திருமணமாகாத பெண்களுக்கான 03 மாத கால வதிவிடப்பயிற்சி நெறி

"வாழ்க்கைத்திறன் பயிற்சி நெறியை"
வளவாளர் - SAABIR MOHAMED HASHIM
அவர்களால் நடாத்தப்படுகிறது.

இதில் 20 க்கும் மேற்பட்ட பாடங்கள் நடாத்தப்படுகின்றன அவைகளில் சில....

- குர்ஆன் அல் தஜ்வீத் (குர்ஆனை சரளமாக ஓதுதல்)
- ஹதீஸ் (Hadhees)
- அல்குர்ஆன் மனனம் (Hifl)
- பிக்ஹ் (Fiqh)
- தப்ஸீர் சூறா விளக்கம்
- அஹ்லாக் (Ahlaq)
- ஸீரதுல் ஸஹாபிய்யா
- தர்பியா பயிற்சி முகாம்
- English
- Life learning activities
- Habaya stone works
- Health Care
- Food & Nutrition
- Life Skill (வாழ்க்கை திறன்)
- Child care
- First Aid
- Pre marriage counseling/ Carrier Guidance/ Self Employment/ General Knowledge
- Islamic Medicines
- Paper Quilling, Mehendi Designing, Glass painting
- Psychology
- தையற்கலை (Stitching)

### இதில் பங்கு கொள்வோர்

- ❑ 16 வயது பூர்த்தியடைந்த அனைத்து பெண்கள்
- ❑ மௌலவியாக்கள் தாயிகளாக மாறுவதற்காக எதிர்பார்ப்பு உள்ளவர்கள்
- ❑ O/L A/L செய்து விட்டு பெறுபேறு வரும் வரை காத்திருப்பவர்கள்
- ❑ மார்க்கத்திலும் படிப்பிலும் பின்தங்கியிருப்பவர்கள்
- ❑ திருமணம் முடிப்பதற்கு தயாராக இருக்கும் பெண்கள்
- ❑ தனது திறமையை வெளிக்காட்ட முடியாது இருக்கும் பெண்கள்
- ❑ வீட்டிலிருந்து சம்பாதிப்பதற்கு விருப்பம் உள்ள பெண் கள்
- ❑ ஆங்கிலம், தையற்கலை மற்றும் சமயற்கலை ஆகியவற்றில் ஆர்வமுள்ளவர்கள்

## WORLD FOCUS COLLEGE

20/ 2, Hemmathagama Road, Beminiwaththa, Mawanella.
+ 94 777 344474/ + 94 77 4370320

# புதுப் பொலிவுடன் இஸ்லாமிக் புக் ஹவுஸ்

அறிவுக் களஞ்சியத்தின் நுழைவாயில்

IBH

## ஒரே கூரையின் கீழ்

IBH Publication



விலை: 195.00



விலை: 78.00



விலை: 760.00



விலை: 585.00




விலை: 273.00



விலை: 507.00



விலை: 585.00



விலை: 585.00



விலை: 273.00



விலை: 200.00

இன்னும் பல அளவுகளில் புனித அல்குர்ஆன் பிரதிகள் நேரடியாக விஜயம் செய்து நீங்கள் விரும்பியதை தெரிவு செய்யுங்கள் அல்லது தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளுங்கள்.

## இஸ்லாமிக் புக் ஹவுஸ்

77, Dematagoda Road, Colombo-09 T.P. 011 2684851, Fax: 011 2688102

கையடக்கத் தொலைபேசியில் புதிய நூல்களின் விபரம் உடனுக்குடன் உங்களை வந்தடைய F <Space> ibhbooks என Type செய்து 40404 க்கு அனுப்புங்கள்.



மலையாள மூலம்: ஷெய்க் முஹம்மத் காரக்குன்னு ▸ தமிழில்: ஜே. இஸ்ஹாக்

# ஹிஜாப் முதல் சாட்சியமளித்தல் வரை பெண்கள் அடக்கி ஒடுக்கப்படுகின்றனரா?

ஐரோப்பா, அமெரிக்க நாட்டு ஆண் பணியாளர்களைப் பாருங்கள். அவர்கள் நீண்ட காற்சட்டை, மூடிய நீண்ட மேலாடை, டை, கோட், தொப்பி, காலணி, சப்பாத்து அனைத்தும் அணிந்து இஸ்லாம் பெண்களுக்குச் சொல்வது போன்று தமது முழு உடலையும் மூடிக் கொண்டல்லவா தமது வேலைகளில் ஈடுபடுகின்றார்கள். அவர்களது வேலையில் எந்தத் தடையையும் இது ஏற்படுத்தவில்லையே!

**கேள்வி:** ஹிஜாப் அணிவதை பெண்களுக்கு நிர்ப்பந்தித்திருப்பதன் மூலம் இஸ்லாம் அவர்களை அடக்கி ஒடுக்குகின்றதல்லவா? முஸ்லிம் பெண்களின் பின்தங்கிய நிலைக்கு மிகவும் பிரதான காரணம் ஹிஜாப் அணிவதல்லவா?

**மறுமொழி:** பெண்கள் தங்கள் கை மணிக்கட்டு முகம் தவிர்ந்த உடலின் மற்ற எல்லாப் பாகங்களையும் மறைக்க வேண்டியது கட்டாயமாகும் என்று இஸ்லாம் விதித்துள்ளது என்பது உண்மையே. ஆயினும், இது அவர்களின் முன்னேற்றத்திற்கு எந்த விதத்திலும் தடையாக அமையவில்லை. மாறாக அவர்களின் முன்னேற்றத்திற்கு துணை நிற்கின்றது. மேலும் ஹிஜாப் அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துகின்றதே தவிர, அவர்களின் முன்னேற்றத்திற்குத் தடையாக அமைவதில்லை.

உலகம் முழுவதும் முஸ்லிம் பெண்கள் பல்வேறு துறைகளில் ஹிஜாப் அணிந்த வண்ணம் பிரகாசிப்பதை இன்று காணக் கூடியதாக இருக்கின்றது. ஆராய்ச்சித் துறை விஞ்ஞானிகளாகவும் விமானிகளாகவும் பத்திரிகை ஆசிரியர்களாகவும் துணிகரமான ஊடகவியலாளர்களாகவும் பாராளுமன்ற உறுப்பினர்களாகவும் அவர்கள் ஹிஜாப் அணிந்து கொண்டு சேவையாற்றுகின்றனர். ஒரு சில உதாரணங்களை மாத்திரம் இங்கே தருகின்றோம். ஹிஜாப் அணிகின்ற மஃசூமா இஃப்திகார் ஈரானின் ஐந்து உதவி ஜனாதிபதிகளுள் ஒருவராக இருக்கின்றார். (தற்போது 2013 முதல் இவர் மீண்டும் உதவி ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது) அமெரிக்காவில் தனது உயர் கல்வியைப் பூர்த்தி செய்த அவர், தெஹ்ரான் பல்கலைக்கழகத்தில் இணைப் பேராசிரியராக இருக்கிறார். பிரபல எழுத்தாளருமாவார். பிரசித்தி பெற்ற சமூகசேவையாளரான இவர் பல்வேறு சர்வதேச மாநாடுகளில் ஈரான் அரசு சார்பாக பங்கெடுத்திருக்கின்றார்.

மற்றுமொரு ஈரானியப் பெண்மணி துரான் ஜம்ஷீத்யான். ஹிஜாப் அணிகின்ற அவர் சர்வதேச புகழ்பெற்ற மஹ்ஜுபா எனும் மகளிர் சஞ்சிகையின் ஆசிரியராகவும் தெஹ்ரான் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகவும் பணியாற்றுகிறார். பாராளுமன்றத்தின் உதவி சபை முதல்வராகவும் தேசிய ஒலிம்பிக் குழுவின் இணைத் தலைவராகவும் இருக்கும் பஸீஹா ஹாஷ்மி, மகளிர் நலன்புரி திணைக்களத்தின் ஆலோசகராக விளங்கும் சஹ்லா ஹபீபி மற்றும் மலேஷிய அரசியலில் உற்சாகமாக இயங்கும் பெண்மணி கலாநிதி வான் அஸீஸா ஆகிய அனைவரும் ஹிஜாப் அணிந்த வண்ணமே தமது பணிகளில் ஈடுபடுகின்றனர். ஈரானிலும் ஆப்கானிஸ்தானிலும் நவீன யுத்த களத்தில் ஹிஜாப் அணிந்த வண்ணம் பெண்கள் இராணுவத்திலும் பணியாற்றுகின்றனர். ஈரானியப் பெண்மணிகள் விளையாட்டுத் துறையில் பிரகாசிப்பதை எந்த விதத்திலும் தடுக்கவில்லை. காற்பந்து, கூடைப்பந்து, டென்னிஸ், குறிபார்த்து சுடுதல், துவிச்சக்கர வண்டி ஓட்டுதல், செஸ், கராட்டி, ஜுடோ, குதிரைசவாரி, உள்ளக விளையாட்டுகள் போன்ற அனைத்திலும் ஹிஜாப் அணிந்த வண்ணமே அவர்கள் ஈடுபடுகின்றனர்.

இஸ்லாமிய ஹிஜாபுக்கு ஏறத்தாழ சமமான உடையணிந்து கொண்டு சமூகசேவை செய்த சர்வதேச புகழ் பெற்ற அன்னை தெரேசாவுக்கும் அவரது மூடிய ஆடை தடையாக அமையவில்லை. உலகம் முழுவதும் கிறிஸ்தவ பணியில் ஈடுபடும் கன்னியாஸ்திரி பெண்மணிகள் முஸ்லிம்களைப் போல மூடிய ஆடைகளுடன் அல்லவா பணிபுரிகிறார்கள். அவர்களது ஆடை பின்னடைவை ஏற்படுத்துவதாக யாரும் வாதாடவில்லை! விண்வெளிக்குச் செல்லும் விண்வெளி வீரர்களைப் பாருங்கள்! அவர்கள் முகங்களைக் கூட மூடிக் கொண்டல்லவா செல்கின்றார்கள். அப்படியிருக்க முழு உடலையும் மூடுவது எப்படி முன்னேற்றத்துக்கு

தடையாக அமைய முடியும்!? ஐரோப்பா, அமெரிக்க நாட்டு ஆண் பணியாளர்களைப் பாருங்கள். அவர்கள் நீண்ட காற்சட்டை, மூடிய நீண்ட மேலாடை, டை, கோட், தொப்பி, காலணி, சப்பாத்து அனைத்தும் அணிந்து இஸ்லாம் பெண்களுக்குச் சொல்வது போன்று தமது முழு உடலையும் மூடிக் கொண்டல்லவா தமது வேலைகளில் ஈடுபடுகின்றார்கள். அவர்களது வேலையில் எந்தத் தடையையும் இது ஏற்படுத்தவில்லையே! ஆயினும், அவர்களது பெண்கள் அணியும் உடை முற்றிலும் வித்தியாசமாகத்தான் இருக்கின்றது.

நவீன மேற்கத்தேய காலனித்துவவாதம் உருவாக்கிய வணிகக் கலாசாரம், பெண்களை அவர்களது உடலின் பரிமாணங்களையும் அழகுப் பிரதேசங்களையும் ஆண்களுக்கு காண்பிக்க வேண்டும் என்ற ஒரு மாயையான அபிப்பிராயத்தை ஏற்படுத்தியுள்ளது. இதனால் பெண்களின் உடை இவ்வாறுதான் இருக்க வேண்டும் என்று ஒரு கட்டாயத்தை பல்வேறு வழிகளினூடாக பரப்பி விட்டிருக்கின்றனர். பெண்களின் தனித்தன்மை அவர்களின் அழகை வெளிப்படுத்துவதிலேயே தங்கியுள்ளது என்றும் நம்ப வைத்து விட்டார்கள். இந்தப் பரவலாக்கப்பட்ட பிரசாரத்தின் ஊடாக இஸ்லாமிய ஹிஜாப் முறை பெண்களின் முன்னேற்றத்திற்கு தடையாக அமைகின்றது என்றும் கூக்குரலிடுகிறார்கள். தங்களது அழகையும் அலங்காரத்தையும் காட்டிக் கொண்டு நகரங்களிலும் வீதிகளிலும் வலம் வந்து, அதன் மூலம் ஆண்களின் காமக் கண்களுக்கு விருந்தாகி, மனத் திருப்தியடைவதுதான் முன்னேற்றம் என்று எந்தப் பெண்கள் நினைக்கின்றார்களோ அவர்களுக்கு ஒரு வகையான மனநோய் பீடித்துள்ளது என்றுதான் கூற வேண்டும்.

பெண்களின் உடலை ரசித்து தனது காம இச்சைகளை திருப்திப்படுத்த முனைகின்ற சமூகத்திலுள்ள மோசமான ஆண்களிடமிருந்து தமது உடலை மறைத்துக் கொள்வதே பெண்களுக்கு பாதுகாப்பானதும் கண்ணியமானதும் ஆகும். இதன் காரணமாகவே உடல் முழுவதையும் மறைத்து ஹிஜாப் உடையை அணியுமாறு இஸ்லாம் வலியுறுத்துகின்றது. அதேவேளை பெண்களின் முன்னேறறத்திற்கு ஹிஜாப் ஒருபோதும் தடையாக அமையவில்லை. இந்தியப் பாராளுமன்ற உறுப்பினர் விரேந்திரகுமார் ஈரானுக்கு விஜயம் செய்த பின்னர் எழுதிய வரிகள் இங்கு குறிப்பிடத்தக்கவை.

"தங்களது தலையை மறைத்து ஹிஜாப் அணிகின்ற ஈரானியப் பெண்கள் தங்களது முகத்தை திறந்து வைத்துள்ளனர். ஹிஜாப் அணிந்தவாறு பிக்னிக் போகின்ற ஹிஜாப் பெண்களை நான் அங்கு கண்டேன். *IRNA* எனப்படும் ஈரானின் செய்தி நிறுவனத்தின் தலைமையகத்திற்கு நான் சென்றேன். அங்கு பணி புரிபவர்களில் அதிகமானோர் பெண்களாக இருந்தனர். அவர்கள் அனைவருமே பர்தா அணிந்திருந்தனர். ஈரானில் சர்வசாதாரணமாக பெண்கள் கார் ஓட்டுகின்றனர். அவர்களது பர்தா இதற்கு தடையாக அமையவில்லை. ஆயினும் அமெரிக்கா நியுயோர்க்கில் நடப்பது போல ஈரானியர்கள் தமது பெண்களை பாலியல் தூண்டு பொருட்களாக (sex symbols) மாறுவதற்கு அனுமதிப்பதில்லை. இதற்குக் காரணம் ஆண்களின் தொல்லையிலிருந்து அவர்களைப் பாதுகாப்பதற்காகும். (ப்ரபோதனம் 1993 நவம்பர் 6)

திருமதி கல்பனா ஷர்மாவின் வினா இங்கே குறிப்பிட்டுக் காட்டக்கூடியது. "கல்வி கற்பதற்கும் தொழில் புரிவதற்கும் விவாக வாழ்க்கை ஏற்புடையதாக அமையாதபோது விவாக விலக்குப் பெற்றுக் கொள்ள நீதிமன்றம் செல்லவும் சுதந்திரம் பெற்றுள்ள ஈரானியச் சகோதரிகளை நோக்கி விமர்சிப்பதற்கு எமக்கு என்ன அருகதை இருக்கின்றது? பர்தா அணிகின்ற ஈரானிய பெண்களை விட எமக்கு இங்கே என்ன மகத்துவம் இருக்கின்றது?'' *(Kalpana Sharma- Behind The Veil- The Hindu 20- 7-97 ).*

**கேள்வி: பெண்களுக்கு ஹிஜாப் அணியுமாறு வலியுறுத்தியுள்ள இஸ்லாம் ஆண்களுக்கு அவ்வாறு நிர்ப்பந்திக்காதது இஸ்லாம் பெண்களுக்கு வேறுபாடு காட்டுவதைத்தானே குறிக்கின்றது?**

**மறுமொழி:** இந்த வேறுபாடு முற்றிலும் இயற்கையானதாகும். இரு பாலாரினதும் உடலமைப்பு முற்றிலும் வித்தியாசமாக இருப்பதே இதற்குக் காரணம். பலசாலியான ஓர் ஆணுக்கு பெண்ணின் விருப்பமின்றியே அவள் மீது பலாத்காரம் புரிய முடியும். ஆயினும் ஓர் ஆணின் விருப்பமின்றி அவனோடு ஒரு பலமான பெண்ணால்கூட பலவந்தமாக உறவு கொள்ள முடியாது. இந்த இயற்கையான வேறுபாட்டின் காரணத்தினாலேயே இஸ்லாம் ஆண், பெண் ஆடைகளிடையே வேறுபாட்டை நிர்ணயித்துள்ளது.

ஆண்களுக்கும் பெண்களுக்குமிடையே உள்ள இந்த வேறுபாட்டை உலகம் ஏற்றுக் கொண்டதனால்தான் இந்தியா உட்பட முழு உலகமும் பெண்களைப் பாதுகாப்பதற்கான கடுமையான சட்டங்களை இயற்றி அவற்றை அமுலாக்குகின்றன. ஆயினும், பெண்களிடமிருந்து ஆண்களைப் பாதுகாப்பதற்காக எங்காவது சட்டம் இயற்றியுள்ளனரா என்று காட்டுங்கள். இந்த விடயம் தெளிவாகச் சொல்லும் செய்தி இதுதான். அதாவது ஆண்களிலிருந்து பெண்களின் உடல் வேறுபடுவதன் காரணமாக தங்களின் மானத்தையும் கண்ணியத்தையும் பாதுகாத்துக் கொள்வதற்கு பெண்களுக்கு அதிக பாதுகாப்பும் பராமரிப்பும் தேவைப்படுகின்றது. இதனைக் கருத்திற் கொண்டே அவர்களுக்கான ஆடையை இஸ்லாம் நிர்ணயித்துள்ளது. இதனால்தான் உங்கள் கணவனுக்கல்லாது வேறு அந்நிய ஆண்களுக்கு உங்கள் உடல் அழகைக் காண்பிக்காதீர்கள் என்று இஸ்லாம் அறிவுறுத்துகின்றது. ஹிஜாப் பெண்களுக்கு ஒரு தடையோ அல்லது வேண்டாத சுமையோ அல்ல. மாறாக அது அவர்களின் பாதுகாப்பு அரணாகும்.

- றிஸ்வி ஸுபைர் -



# இலங்கை முஸ்லிம்களின் மூன்றாம் நிலைக் கல்வி:

## ஓர் ஆய்வுக்கான முற்குறிப்பு

(கடந்த இதழ் தொடர்)

இன்றைய இலங்கை முஸ்லிம் சமூகம் இருப்பு, பொருளாதாரம், கல்வி, அரசியல், சமயம் என அனைத்துத் துறைகளிலும் பலவிதமான இன்னல்கள், நெருக்கீடுகளுக்கு முகம் கொடுத்து வருகிறது. இவற்றை ஓரளவுக்கேனும் இழிவளவாக்குவதற்கும் எதிர்கால இருப்பை ஸ்திரப்படுத்துவதற்கும் ஒரு முதலீடாக கல்வி மீதான அக்கறை, சமூகத்தின் எல்லாத் தளங்களிலும் உணரப்பட வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

இலங்கையின் கல்வித்துறை சார்ந்த சுட்டிகள், அறிக்கைகள் என்பவற்றை நோக்குகையில் எமது நாடு சர்வதேசரீதியான போட்டித் தன்மைக்கு ஏற்ப கல்வி முறைமைகளில் மீள் ஒழுங்குகளை அறிமுகம் செய்து வருவது ஆரோக்கியமான பதிவாகும். எழுத்தறிவு மட்டம் 97% ஆகவும் பாடசாலையில் சேர்வு வீதம் 100 ஆகவும் மற்றும் பாடசாலை முதல் பல்கலைக்கழகம் வரையில் இலவசக் கல்வி முறை நடைமுறையில் இருப்பது இலங்கையின் கல்வித்துறையின் முன்மாதிரியான குறியீடுகளாகும். அறிவுப் பொருளாதார சிந்தனையுடன் நகரும் இன்றைய கலைத்திட்ட முறைகளை எமது சமூகம் எவ்வளவு தூரம் உள்வாங்கியிருக்கிறது; எதிர்காலத்துக்கு ஏற்ற விதத்தில் அது தன்னை எவ்வளவு தூரம் தயார்படுத்தி வருகிறது என்பது பெருத்த கேள்வியாகவே நீள்கிறது.

நாட்டின் தற்போதைய சனத்தொகைக் கட்டமைப்பில் முஸ்லிம்கள் 9.7% என உத்தியோகபூர்வ புள்ளிவிவரத் தகவல்கள் குறிப்பிடுகின்றன. இன்னும் சில உத்தியோகபூர்வமற்ற தகவல்கள் 10% எனக் கணிப்பிட்டுள்ளன. கல்வி அமைச்சு 2013 இல் வெளியிட்ட தகவல்களின்படி இலங்கையில் 10, 012 பாடசாலைகள் அரசாங்க ஆதரவுடன் இயங்கி வருகின்றன. இதில் 856 முஸ்லிம் பாடசாலைகளாகும். இது மொத்த பாடசாலைகளின் எண்ணிக்கையில் 8.6% வீதமாகும். இலங்கையில் ஏனைய இனங்கள் போலன்றி பெரும்பாலும் ஒவ்வொரு முஸ்லிம் கிராமத்துக்கும் ஒவ்வொரு பாடசாலை என்ற நிலையில் பாடசாலைகள் உருவாக்கப்பட்டுள்ளன. இவற்றின் ஊடாக எமது ஆரம்பக் கல்வி, இடைநிலைக் கல்வி என்பன ஓரளவு திருப்தியான நிலையில் இருந்தாலும் மூன்றாம் நிலைக் கல்வி தொடர்பில் போதாமைகள், பின்னடைவுகள் உணரப்படுகின்றன. இது தொடர்பான ஆழமான கவனயீர்ப்பு எமது சமூகத்தின் அனைத்துத் தளங்களிலும் மேற்கொள்ளப்பட வேண்டியது காலத்தின் தேவையாகும்.

2000/2001 ஆம் கல்வியாண்டில் முஸ்லிம்களின் பல்கலைக்கழக நுழைவு 4.7% ஆக இருந்தது. இது தற்போது ஒரு தசாப்தத்தை கடந்த நிலையில் சற்று வளர்ச்சியடைந்து 6.9%, 7.5%, 7.9, 7.6% என அடைவுகளை ஈட்டி வருவதை முதலாம், இரண்டாம் அட்டவணைகள் ஆதாரப்படுத்துகின்றன. குறித்த புள்ளிவிபரங்களை மையமாக வைத்து நோக்குகையில் எமது சமூகம் இன்னும் பல்கலைக்கழக உள்ளீர்ப்பில் பெருமைப்படும் விதமான அடைவுகளைக் காட்டவில்லை என்பது மறுக்க முடியாத யதார்த்தமாகும்.

இந்நாட்டின் சனத்தொகையில் முஸ்லிம்கள் 10% மேல் இருக்கிறோம் என அரசியல் அரங்குகளில் மார்தட்டிப் பேசிக் கொள்ளும் எமது தலைமைகள்,

எமது பல்கலைக்கழக நுழைவு எமது விகிதாசாரத்தை விடவும் வீழ்ச்சி நிலையில் இருப்பது பற்றிப் பேசுவதாயில்லை. அதற்கான தீர்வு நடவடிக்கைகளும் ஆரோக்கியமான நகர்வுகளும் மந்தமாகவே வெளிப்படுகின்றன. முஸ்லிம்களின் பல்கலைக்கழக வரலாற்றில் 1987/88ஆம் கல்வியாண்டு மாத்திரமே விகிதாசாரத்துக்கு அமைவான 8.9% பல்கலைக்கழக உள்ளீர்ப்பைப் பெற்றது. இதனை முறியடிப்பதாயின் எமது தற்போதைய பல்கலைக்கழக அனுமதி அண்ணளவாக 10 வீதத்தினை எட்ட வேண்டும்.

2012 ஆம் ஆண்டு தேசிய ரீதியில் உயர்தரம் கற்ற மாணவர்களில் 50%க்கு மேற்பட்டவர்கள் கலைத்துறையையே தெரிவு செய்திருந்ததாக கல்வி அமைச்சு சுட்டிக் காட்டியிருந்தது. அதைவிடவும் எமது சமூகமும் உயர்தரத்தில் பெரும்பாலும் 60-65% கலைத்துறையை நாடும் நிலை தொடர்கிறது.

கடந்த நான்கு வருடங்களில் பல்கலைக்கழகத்துக்கு தெரிவான முஸ்லிம் மாணவர்களின் புள்ளிவிபரங்களை தரப்படுத்துகையில் எமது மாணவர்களின் பல்கலைக்கழக நுழைவு தொடர்பான உண்மைகளைப் புரிந்து கொள்ள முடிகிறது.

* கடந்த நான்கு வருடங்களில் பல்கலைக்கழகத்துக்கு 96,208 மாணவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இத்தொகையில் முஸ்லிம் மாணவர்கள் 7,262 ஆகும். இது சராசரி 7.5% ஆன விகிதாசாரமாக பதியப்படுகிறது.

* சனத்தொகை விகிதாசாரத்துக்கு ஏற்ப கலைப்பீடம் 10.8% அடைவினைக் காட்டுகிறது. கடந்த நான்கு வருடங்களில் 29,088 மாணவர்கள் மொத்தமாக கலைத் துறைக்கு உள்வாங்கப்பட்டனர்; அவர்களுள் 3,148 மாணவர்கள் முஸ்லிம்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

* சுதேச மருத்துவக் கற்கைக்கு தெரிவுசெய்யப்பட்ட 1,722 மாணவர்களுள் 274 முஸ்லிம் மாணவர்களுக்கு வாய்ப்புக் கிடைத்தது. இது 16% ஆகும். எமது விகிதாசாரத்தை விடவும் கூடுதலான அதிகரிப்பு இத்துறையில் மாத்திரமே கிடைக்கப் பெற்றது.

* கணினி விஞ்ஞானத்துறையிலும் விகிதாசாரம் ஓரளவு பேணப்படுகிறது. கடந்த நான்கு வருடங்களில் அனுமதி பெற்ற 4,962 பேரில், 439 முஸ்லிம் மாணவர்கள் (9%) உள்ளடங்குகின்றனர்.

* சட்டத்துறையில் 7.8% அடைவு வெளிப்படுத்தப்ப

| கல்வியாண்டு | அனுமதிக்கப்பட்ட மொத்த மாணவர் தொகை | தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் (இனம் /வீதம்) சிங்களம் (%) | | இந்து (%) | | முஸ்லிம் (%) | |
|---|---|---|---|---|---|---|---|
| 2009/2010 | 21541 | 17120 | 79.4 | 2898 | 13.4 | 1487 | 6.9 |
| 2010/2011 | 21561 | 17096 | 79.2 | 2789 | 12.9 | 1637 | 7.5 |
| 2011/2012 | 28908 | 22381 | 77.4 | 4187 | 14.4 | 2292 | 7.9 |
| 2012/2013 | 24198 | 19273 | 79.6 | 2992 | 12.3 | 1846 | 7.6 |

அட்டவணை 01 தகவல்: பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிக்கை

| பீடம் | தெரிவுசெய்யப்பட்ட மாணவர்கள் / முஸ்லிம் (%) 2009/2010 | | | தெரிவுசெய்யப்பட்ட மாணவர்கள் / முஸ்லிம் (%) 2010/2011 | | | தெரிவுசெய்யப்பட்ட மாணவர்கள் / முஸ்லிம் (%) 2011/2012 | | | தெரிவுசெய்யப்பட்ட மாணவர்கள் / முஸ்லிம் (%) 2012/2013 | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சட்டம் | 353 | 19 | 5.3 | 350 | 34 | 9.7 | 448 | 29 | 6.5 | 364 | 37 | 10.1 |
| கலை | 6300 | 592 | 9.3 | 6247 | 683 | 10.9 | 9412 | 1009 | 10.8 | 7129 | 864 | 12.1 |
| முகாமைத்துவம் | 4220 | 216 | 5.1 | 4330 | 237 | 5.4 | 4979 | 280 | 5.8 | 4130 | 209 | 5.0 |
| வர்த்தகம் | - | | | - | | | 669 | 27 | 4.0 | 546 | 29 | 5.3 |
| மருத்துவம் | 1166 | 78 | 6.6 | 1177 | 83 | 7.0 | 1371 | 113 | 8.2 | 1237 | 75 | 6.0 |
| பல் மருத்துவம் | 81 | 5 | 6.0 | 83 | 4 | 4.8 | 122 | 14 | 11.5 | 97 | 9 | 9.2 |
| மிருக வைத்தியம் | 101 | 1 | 0.9 | 107 | 2 | 1.8 | 148 | 04 | 2.7 | 111 | 2 | 2.7 |
| விவசாயம் | 1036 | 57 | 5.5 | 1021 | 54 | 5.2 | 1332 | 79 | 5.9 | 1129 | 51 | 4.5 |
| விஞ்ஞானம் | 4501 | 249 | 5.5 | 4378 | 252 | 5.7 | 5495 | 350 | 6.4 | 4945 | 258 | 5.2 |
| பொறியியல் | 1342 | 59 | 4.3 | 1369 | 57 | 4.1 | 1756 | 68 | 3.9 | 1617 | 54 | 3.3 |
| கட்டடக்கலை கி.எஸ் | 310 | 13 | 4.1 | 317 | 16 | 5.0 | 504 | 23 | 4.6 | 404 | 21 | 5.1 |
| கணினி விஞ்ஞானம் | 1055 | 105 | 9.9 | 1101 | 93 | 8.4 | 1475 | 131 | 8.9 | 1331 | 110 | 8.2 |
| சுதேச வைத்தியம் | 427 | 54 | 12.6 | 427 | 76 | 17.7 | 447 | 83 | 18.5 | 421 | 61 | 14.4 |
| துணை மருந்துவக் கற்கை | 557 | 7 | 6.6 | 560 | 44 | 7.8 | 806 | 74 | 9.2 | 629 | 58 | 9.2 |
| டிசைனிங் | 92 | 2 | 2.1 | 94 | 2 | 2.1 | 108 | 08 | 7.4 | 126 | 8 | 6.3 |
| மொத்தம் | 21541 | 1487 | | 21561 | 1637 | | 28908 | 2292 | | 24198 | 1846 | |

அட்டவணை 02 தகவல்: பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிக்கை

டுகிறது. கடந்த நான்கு வருடங்களில் இப்பீடத்துக்கு தெரிவுசெய்யப்பட்ட 1,515 மாணவர்களுள் 119 மாணவர்கள் முஸ்லிம்களாவர்.

* உயர்தர வர்த்தகப் பிரிவில் அண்மைக் காலமாக முஸ்லிம் மாணவர்களின் ஈடுபாடு அதிகரித்தபோதும் முகாமைத்துவம், வர்த்தகம் ஆகிய துறைகளுக்கான அனுமதி 5.2% ஆக மட்டுமே உள்ளது.

* கடந்த நான்கு வருடங்களில் மருத்துவத்துறைக்கு அனுமதிக்கப்பட்ட 4,951 மாணவர்களில் முஸ்லிம்கள் 349 ஆகும். இது 7% அடைவு. 2000/2010 இடைப்பட்ட கல்வியாண்டுகளுடன் ஒப்பிடுகையில் இது ஓரளவு ஆரோக்கியமான பெறுபேறு ஆகும். எனினும், துணை மருத்துவக் கற்கைளில் மாணவர் நுழைவு வீதம் பின்ன டைவை வெளிப்படுத்துகிறது.

* பொறியியல் துறையில் எமது மாணவர்களின் நுழைவு மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்படுகிறது. கடந்த நான்கு வருடங்களில் பொறியியல் துறைக்கு உள்வாங்கப்பட்ட முஸ்லிம் மாணவர்களின் தொகை 238 ஆகும். இது எமக்கான வீதத்தில் 3-4 இடைப்பட்ட தாகும். எனினும், சகோதர இனமான தமிழ் சமூகத்தி லிருந்து கடந்த நான்கு வருடங்களில் 765 மாணவர்கள் பொறியியல் பீடத்துக்கு தெரிவு செய்யப்பட்டனர். இது சராசரியாக 12-13 இடைப்பட்ட வீதம் ஆகும். வடக்கு, கிழக்கு பிராந்தியங்களில் அசாதாரண சூழல் நிலவிய காலங்களில் அவர்களின் பொருளாதாரம் இழக்கப்பட் டதே தவிர, பல்கலைக்கழக அனுமதி வீதத்தில் பாரிய வீழ்ச்சி ஒப்பீட்டளவில் ஏற்படவில்லை என்பதை ஒரு முன்மாதிரியாகக் கோடிட்டுக் காட்டலாம். (பார்க்க அட்டவணை: 2)

மேற்படி குறிப்புகளிலிருந்து மூன்றாம் நிலைக் கல்வியில் முஸ்லிம்களின் பல்கலைக்கழக அனுமதி, ஈடுபாடு என்பன எமது சனத்தொகைக் கட்டமைப்புக்கு ஏற்ப எந்தளவில் உள்வாங்கப்பட்டு வருகிறது என்பதை அறிய முடிகிறது.

அடுத்து எமது நாட்டில் மூன்றாம் நிலைக் கல்வியை வழங்கும் இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்லூரி, அரச தொழில்நுட்பக் கல்லூரி, தனியார் பல்கலைக்கழ கங்கள் என்பவற்றிலும் முஸ்லிம் மாணவர்களின் ஆர்வம் குறைவாகவே காணப்படுகிறது. இலங்கையில் அரச, அரசசார் தொழில்நுட்பக் கல்லூரிகள், பயிற்சி நிறுவ னங்கள் 960க்கு மேல் இயங்கும் நிலையில், இலங்கை தொழில்நுட்பக் கல்லூரிகளில் பல்கலை கழகத்துக்கு தகுதி பெற்று அனுமதி பெற்றவர்கள் தவிர ஏனைய 4% ஆன மாணவர்கள் மட்டுமே தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்களை நாடுவதாக அறிக்கைகள் சுட்டிக்காட் டுகின்றன.

குறிப்பாக, இன்றைய தொழிற் சந்தைக்கு ஏற்ற விதத்தில் ஆடை உற்பத்தி, தகவல் தொடர்பாடல், கணினி, புடவைக் கைத்தொழில், மின்சாரம், மின்னியல் கைத்தொழில், மரக் கைத்தொழில், விலங்கு வளர்ப்பு, தாவரவியல், வாகனம் ஓட்டுதல், வாகனம் பழுது பார்த்தல், நீரியல் முகாமைத்துவம், மாணிக்கம் பட்டை தீட்டுதல், ஆபரண உற்பத்தி என இந்நி றுவனங்களில் பல்வேறு கற்கைகள் கற்பிக்கப்படுகின்றன. அநேகமான அரசாங்க தொழிநுட்பக் கல்லூரிகளில் இல வசமாவே இப்பாட நெறிகள் நடத்தப்படுவதும் பெரும் வாய்ப்பாகும். எனினும், இத்துறையில் கற்கின்ற முஸ்லிம் களின் ஈடுபாடு ஒரு வீதத்தை விடவும் குறைவானதாகவே அறிக்கைகள் சுட்டிக் காட்டுகின்றன.

### உயர் கல்வித் துறையில் பின்னடைவுக்கான முஸ்லிம் தரப்புக் காரணங்கள்- சுருக்கமாக

மூன்றாம் நிலைக் கல்வியில் முஸ்லிம்களின் தற்போ தைய நிலைமைகளை அறிந்து கொள்வதற்கு ஒரு முன் னுரையாக மேற்படி பந்தி அமைந்திருக்கும் என்பது எனது நம்பிக்கை. ஒரு சமூகத்தை கல்விச் சமூகம் எனத் தீர்மானிப் பதிலும் சமூக உருவாக்கத்திற்கான அடிப் படைகளை கட்டுருவாக்கம் செய்வதிலும் மூன்றாம் நிலைக் கல்வியின் பங்கு கனதியானது.

இந்நிலையில் எமது சமூகத்தின் அடைவுகளில் பல வீனங்கள் வெளிப்படுவது தவிர்க்க இயலாதது. அவ்வாறான பின்னடைவுகளுக்கான சில காரணங்களை சுருக்கமாக அடையாளப்படுத்தலாம்.

உயர்தரக் கல்வி தொடர்பான புரிதல்கள், வழிகாட்டல்கள் மாணவர்களுக்கு வழங்கப்படுவது குறைவாக காணப்படு கின்றது. எடுத்துக்காட்டாக, க.பொ.த. சாதாரண தரத்தில் விஞ்ஞானப் பாடத்துடன் சித்தியடைந்த மாணவர்கள் தமது ஆற்றல்களை சரியாக இனங்கண்டு கொள்ளாது உயர்தரப் பிரிவில் விஞ்ஞானம், கணிதம் ஆகிய துறைகளுக்கு செல்வதற்கு அதிக ஆர்வம் காட்டு கின்றனர். அவர்களின் இலக்குகளும் வைத்தியர் அல்லது பொறியியலாளர் என்ற உயரத்திலேயே உள்ளது. அதற்குத் தகைமை பெறாவிட்டால் பல்கைலக் கழகங்களில் வேறு துறைகளுக்கு விண்ணப்பித்து அதன் ஊடாக தமது கல்வியைத் தொடர்வதை விட்டு விடுகின்றனர்.

பெற்றோரும் ஒரு பிள்ளை விஞ்ஞானத்துறையில் கற்று அது மருத்துவ பீடம் அனுமதி பெறாவிட்டால், தமது ஏனைய பிள்ளைகளிடம் அத்தகைய திறமை, விருப்பம் இருந்தபோதும் அவர்களை விஞ்ஞானத்து றையில் தெரிவுசெய்வதற்கு தயங் குகின்றனர். உயிரியல் விஞ்ஞானத் துறையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு பல்கலைக்கழகத்தில் 52 பாடநெறிகளில் தமதுபெறு பேறுக்கு ஏற்ப விண்ணப்பிக்க முடியும் என்பதை மறந்து விடுகின்றனர். எனவேதான் துணை மருத்துவக் கற்கை, விஞ்ஞானம் போன்ற துறைகளில் எமது மாணவர்களின் அடைவுகள் போதாமல் இருக்கின்றன.

(59ஆம் பக்கம் பார்க்க)

# சிரிப்பதற்கென்று ஒரு முட்டாள் தினமா?

❖ எம்.எச்.எம். ஹஸன்

மக்களை வேண்டுமென்றே முட்டாளாக்கிச் சிரிப்பை வரவழைக்கும் நாகரிமொன்றும் உலகில் காணப்படுகிறது. அதற்காகப் பயன்படுத்தப்படும் முக்கியமான உத்தியாக பொய் காணப்படுகிறது. கேலி, கிண்டல், உடற்குறைபாடுகளை நையாண்டி செய்தல், தூஷண வார்த்தைகள், மூட்டிவிடல், மிகைப்படுத்தல், ஊரை, நாட்டை, குடும்பத்தைப் பழித்தல் போன்ற பல்வேறு உத்திகள் நகைச்சுவை என்ற பெயரிலும் சிரிப்பூட்டல் என்ற வகையிலும் பயன்படுத்தப்படுகின்றன. இவை சராசரி வாழ்க்கை முறையாகவும் மாறியுள்ளது. அதில் பொய் சொல்ல அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்ட தினமாக சில தரப்பினரிடையே ஏப்ரல் முதலாம் திகதி கொண்டாடப்படுகிறது.


மனித உணர்வுகள் பெறுமதிவாய்ந்தவை. அதனைப் புண்படுத்துவது, நோவினை செய்வது, அலைக்கழிப்பது, அலட்சியம் செய்வது, குறைத்து மதிப்பிடுவது மனிதாபிமானமற்ற, நகரிகமற்ற செயல்களாகும். சிரிப்பு பாவமான காரியமல்ல. ஒரு மனிதன் சிரிக்கும்போது அவனது கவலைகள் எங்கோ மறைந்து போகின்றன.

> **இஸ்லாத்துக்கு அப்பால் நின்று பார்த்தாலும் பொய் பண்பாட்டு விரோதமான அம்சமாகும். பொதுக் கருத்தில் நோக்கினால் பொய் சொல்வது சமூகச் சீர்கேடு என்பதே மக்களின் அபிப்பிராயமாக உள்ளது. இந்த நிலையில் பொய் கூறி சிரிக்க வைப்பதற்கு எங்கும் அனுமதியில்லை. ஆனால், நாகரிகம் என்ற நியாயத்தைக் கொண்டு பலரும் இதனைச் செய்கின்றனர்.**

சிரிப்பதால் தசைகள் வலுப்பெறுவதாகவும் இரத்த ஓட்டம் சீரடைவதாகவும் ஜீரண சக்தி அதிகரிப்பதாகவும் மருத்துவர்கள் கூறுகின்றனர். குடல் நோய்கள், ஜலதோஷம் வருவதில்லை என்றும் சிரித்து மகிழ்ந்து வாழும்போது முகப்பருக்கள் வருவதுமில்லை என்றும் தொடர்ந்து இளமைத் தோற்றம் பாதுகாக்கப்படுகிறது என்றும் மருத்துவக் குறிப்புகள் கூறுகின்றன. அந்த வகையில் சிரிப்பும் அல்லாஹ்வின் அருட்கொடைகளில் ஒன்றாகும்.

சிரிப்புகள் பல வகையில் இருக்கலாம். கள்ளம் கபடமற்ற குழந்தையின் சிரிப்பு, உன்னை ஒரு கை பார்ப்பேன் என்பது போன்ற கபடச் சிரிப்பு, வலியான் எளியான் மீது விடுக்கும் ஒரு வகைச் சிரிப்பு, வெற்றிச் சிரிப்பு, தோல்விச் சிரிப்பு, நமுட்டுச் சிரிப்பு என்று பட்டியல் நீள்கிறது. ஆனால் இன்றைய மனிதர்களின் சிரிப்பு பெரும்பாலும் பிற மனிதர்களின் மனதைப் புண்படுத்தும் விதமாகவே அமைவதுண்டு. அநேகமானோரின் நகைச்சுவைப் பேச்சுகளில் பொய்யும் புறமும் அவதூறும் பழியும் குத்தல் வார்த்தையும் நிறைந்திருக்கும். நகைச்சுவை மனிதனைச் சிரிக்க வைக்கும் அதேவேளை சிந்திக்கவும் வைக்க வேண்டும். நபிகளாரின் வாழ்விலும் பல நகைச்சுவையான நிகழ்வுகள் காணப்படுகின்றன. ஸஹாபாக்களும் அதற்கு விதிவிலக்கானவர்களல்லர். ஆனால், அந்த நகைச்சுவைகளில் உண்மை நிறைந்திருக்கும்; பொய் கலந்திருக்காது.

புனிதமாகவும் அந்தரங்கமாகவும் பேண வேண்டிய பாலியல் உணர்வுகளை நகைச்சுவைகளாக்கி சிரிக்க வைக்கும் பலரை காண்கின்றோம். இரு கருத்துத் தொனிக்கும் பிரயோகங்கள் குழூஉக்குறியாக நண்பர்களிடையே மட்டும்



புழங்கும் வார்த்தைகள் கண்களால், உடல் அசைவுகளால் வெளிப்படுத்தும் கருத்துக்கள் என தான் இருக்கும் இடத்தைக் கலகலப்பாக்கும் நோக்கத்தோடு உதிரும் வார்த்தைகள் பலபோது பாரதூரமானவையாக அமைந்து விடுவதுண்டு. இத்தகைய நகைச்சுவைகளை நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் எவ்வளவு கடுமையாக கண்டித்தார்கள் என்பதற்கு பின்வரும் சம்பவம்

ஒன்றே போதுமானது.

ஹஸ்ரத் உம்மு ஸல்மா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்களின் சகோதரரான அப்துல்லாஹ் பின் அபீ உமைய்யாவின் அடிமையாக இருந்தவர் ஹீத் எனும் அரவாணி (ஆணும் பெண்ணுமல்லாதவர்) ஆவார். அவர் இஸ்லாத்தை ஏற்று ஹுனைன் யுத்தம், மக்கா வெற்றி, தாயிப் யுத்தம் என்பவற்றிலும் கலந்து கொண்டார். அவர் உம்மு ஸல்மா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்களின் வீட்டுக்கு அடிக்கடி வந்து போவார். ஒரு தடவை நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களும் ஹஸ்ரத் அப்துல்லாஹ் (ரழியல்லாஹு அன்ஹு) இருக்கும்போது அந்த அரவாணி,

“நாளை தாயிபை வெற்றி கொள்ளும் வாய்ப்பை அல்லாஹ் உங்களுக்கு வழங்கினால் கைதியாகப் பிடிபடும் கைலானின் மகளான பாத்தியாவைப் பிடித்துக் கொள்ளுங்கள். ஏனெனில், உடல் பருமனால் அப்பெண் முன்னோக்கி வரும்போது இடுப்பில் நான்கு மடிப்புக்கள் விழும்; பின்னோக்கி நகரும் போது எட்டு மடிப்புக்களுடன் செல்வாள்” என்று கூறி அப்பெண் இச்சை மிக்கவள் என்ற கருத்தை முன்வைத்தார்.

அதனைக் கேட்ட ரஸூல் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் “இவரை இனிமேல் இங்கே வர அனுமதிக்க வேண்டாம்” என்று உத்தரவிட்டார்கள். அந்த அரவாணி ஹிமா என்ற இடத்திற்கு அனுப்பப்பட்டு அங்கு வாழ்ந்து வந்தார். அபூபக்ர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களது காலத்தில் மதீனாவுக்கு வர முயற்சித்தார். ஆனால், அனுமதி மறுக்கப்பட்டது. உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களின் ஆட்சியின்போது அரவாணி முதுமையடைந்து வாழ்வதற்கே கஷ்டப்படுகிறார் என்பதனால் ஒவ்வொரு ஜுமுஆவின்போது மக்களிடம் யாசித்து உடன் ஊர்திரும்ப அனுமதி வழங்கப்பட்டது. (நூல் உம்மதுல் காரி)

இன்றைய சமூகத்தில் இந்த நிலையை அமுல்படுத்தினால் எத்தனை பேர் ஊருக்கு வெளியில் வைக்கப்படுவார்கள் என்று சிந்திக்க வேண்டும்.

இதே அளவு பாரதூரமானதுதான் பொய் பேசி சிரிக்க வைப்பது. பொய் பெரும்பாவங்களில் ஒன்று. இஸ்லாத்துக்கு அப்பால் நின்று பார்த்தாலும் பொய் பண்பாட்டு விரோதமான அம்சமாகும். பொதுக் கருத்தில் நோக்கினால் பொய் சொல்வது சமூகச் சீர்கேடு என்பதே மக்களின் அபிப்பிராயமாக உள்ளது. இந்த நிலையில் பொய் கூறி சிரிக்க வைப்பதற்கு எங்கும் அனுமதியில்லை. ஆனால், நாகரிகம் என்ற நியாயத்தைக் கொண்டு பலரும் இதனைச் செய்கின்றனர். உண்மையைச் சொல்லிச் சிரிக்கவும் சிந்திக்கவும் வைக்க முடியும் என்பதை நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களது வாழ்வும் ஸஹாபாக்களது வாழ்வும் சான்று பகர்கிறது.

ஒரு முறை அபூபக்ர் (ரழியல்லாஹு அன்ஹு), உமர் (ரழியல்லாஹு அன்ஹு), அலி (ரழியல்லாஹு அன்ஹு) உட்பட மூத்த ஸஹாபாக்கள் கூடியிருந்த வேளையில் ரஸூல் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுக்கு அன்பளிப்பாகக் கிடைத்திருந்த ஈத்தப்பழங்களை ஒரு தட்டில் வைத்து எல்லோரும் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். சில ஸஹாபாக்கள் தாம் சாப்பிடும் ஈத்தப் பழங்களின் விதைகளை மெதுவாக ரஸூல் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் முன்பாகத் தள்ளிவிட்டனர். எல்லா ஈத்தப்பழங்களையும் ரஸூல் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள்தான் சாப்பிட்டதாகக் கூறினார்கள். உடனே நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் “நான் விதையை வைத்துவிட்டுச் சாப்பிட்டுள்ளேன். மற்றவர்கள் விதையையும் சேர்த்தல்லவா சாப்பிட்டிருக்கிறார்கள்” என்று கூற அங்கு அடக்கமான சிரிப்பொலி எழுந்தது.

ஒரு முறை நபித் தோழர் ஒருவர் வந்து “எனக்கு ஒரு ஒட்டகம் தந்து உதவி செய்யுங்கள்” என்று நபிகளாரிடம் கேட்டார். “ஒட்டகக் குட்டி வேண்டுமானால் தருகிறேன்” என்றார் ரஸூல் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள். “குட்டியை வைத்து நான் என்ன செய்வது யா ரஸூலல்லாஹ்” என்று தோழர் சொல்ல உடனே நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) “எல்லா ஒட்டகங்களும் இன்னொரு ஒட்டகத்தின் குட்டி தானே” என்று கூறிவிட்டு அவருக்கு ஓர் ஒட்டகத்தை வழங்கினார்.

(திர்மிதி)

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் சபைக்கு வந்த ஒரு பெண்மணி “அல்லாஹ்வின் தூதரே என் கணவர் உங்களை அழைக்கிறார்” என்றார். “யார் உன் கணவர் கண்ணில் வெள்ளை நிறம் இருக்குமே அவரா?” என்று கேட்டார். “என் கணவருக்குக் கண்களில் வெள்ளை நிறம் கிடையாது” என்று அப்பெண் கூறவே, “நிச்சயமாக உன் கணவருக்கு கண்களில் வெள்ளை நிறம் உண்டு” என்று நபிகளார் அழுத்தமாகக் கூறினார். “இல்லை நிச்சயமாக இல்லை” என்று அப்பெண் அடித்துக் கூறினார். இதனைக் கேட்ட நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) சிரித்தபடியே “எந்த மனிதருக்கும் கண்களில் கருமணியைச் சுற்றி வெள்ளை நிறம் இருக்கத்தானே செய்யும்” என்று நகைச்சுவையாகக் கூறினார்கள். அப்பெண் வெட்கித்தவராகச் சிரித்தார்.

நமது மக்களில் பலர் சிரிப்பதே இல்லை. ஓரளவு மார்க்க விடயங்களில் ஈடுபாடு கொண்டவர் எனின் சிரிக்கவே கூடாது என்றிருக்கிறார்கள். சிரிப்பது ஹராமா? நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் சிரிக்கவில்லையா? ஸஹாபாக்கள் சிரிக்கவில்லையா? ரஸூலுல்லாஹ் தன் தோழர்களுடன் எப்போதும் அதீதா விடயங்களை மட்டும்தான் பேசிக் கொண்டிருந்தாரா?

ஹாஷ்யமாக ஒருபோதும் பேசவில்லையா? ஷரீஆ வட்டத்துக்குள் இருந்து கொண்டு ஸஹாபாக்களுடன் நபிகளார் ஹாஷ்யமாக பேசியிருக்கிறார்கள். ஒரு முறை ஒரு நபித்தோழர் கேட்டார் "யா ரஸூலுல்லாஹ் எங்களுடன் ஹாஷ்யமாக" பேசுகிறீர்களே என்று கேட்டார்.

"ஆம், ஆனால் நான் சத்தியத்தைத் தவிர வேறு எதனையும் கூறுவதில்லையே" என்று பதில் கூறினார். (அல் புகாரி)

நபித் தோழர்களும் ஒருவரையொருவர் நட்பு ரீதியில் நகைச்சுவையாகப் பேசியிருக்கிறார்கள். ஆனால் அது சத்தியத்துக்கு மாறானதாக, பிறர் மனம் புண்படும் வகையில் அமையவில்லை. இதயங்களை இதமாக்குவதற்காகவே அவர்கள் அவ்வாறு பேசியிருக்கிறார்கள்.

அபூபக்ர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் வியாபார விடயமாக புஷ்ரா என்ற இடத்துக்குச் சென்றிருந்தார்கள். அவருடன் நுஜமான் மற்றும் சுபையித் (ரழில்லாஹு அன்ஹுமா) ஆகிய நபித் தோழர்களும் சென்றிருக்கின்றனர். இவ்விருவரும் பத்ருப் போரில் கலந்து கொண்ட முக்கியமான ஸஹாபாக்கள். சுபையித் (ரழியல்லாஹு அன்ஹு) உணவுப் பொருட்களை பாதுகாக்கும் பொறுப்பில் இருந்தார். அபூபக்ர் (ரழியல்லாஹு அன்ஹு) சென்றிருந்த சமயம் நுஜமான் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் வந்து தனக்கு உணவு தருமாறு கேட்டார். அபூபக்ர் (ரழியல்லாஹு அன்ஹு) வரும் வரை பொறுத்திருக்குமாறு அவர் கூறினார். நுஜமான் ஒரு விகடப் பேர்வழி. பிறரைச் சிரிக்க வைப்பதில் வல்லவர். அவர் மக்கள் கூடியிருந்த இடத்துக்குச் சென்று "ஓர் என்னிடம் புத்திசாலியான அரேபிய அடிமை இருக்கிறார். யார் வாங்கிக் கொள்வார்?" என உரத்துக் கூறினார். ஒருவர் தாம் வாங்குவதாகக் கூறினார். நுஜமான் இவ்வாறு கூறினார் "அவர் புத்திசாலி தான் அடிமையல்ல, சுதந்திர மனிதர் என்று சாதிக்கக் கூடும். அவர் பேச்சைக் கேட்டு என்னிடம் திரும்ப வரக் கூடாது" என்றார்.

நிபந்தனைகளையேற்ற மனிதர் பத்து தீனார் கொடுத்து அவரை வாங்கிக் கொண்டார். நுஜமான் அந்த மனிதரை அழைத்துச் சென்று அதோ இருக்கிறார் அவர்தான் என்று தூரத்தில் இருந்தபடியே சுபையித் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களைச் சுட்டிக் காட்டினார். விலை கொடுத்து வாங்கியவர் வந்து சுபையிதைப் பிடித்தபோது "நான் அடிமையில்லை சுதந்திரமானவன். அவர் பொய் சொல்கிறார் என்னை விடுங்கள்" என்றார். "நீ இப்படித்தான் கூறுவாய் என்று எங்களுக்குத் தெரியும்" என்று கூறி இழுத்துச் சென்றார்.

அபூபக்ர் (ரழியல்லாஹு அன்ஹு) வந்ததும் விஷயத்தை கேள்விப்பட்டு உரியவரிடம் போய் விஷயத்தை விளக்கி சுபையித் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களை மீட்டி வந்தார். மதீனாவுக்குச் சென்று நபியவர்களிடம் விஷயத்தைக் கூறியபோது நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களும் சுற்றியிருந்த தோழர்களும் சிரித்தனர். (அஹ்மத்)

புன்னகையே நமக்குப் பொன்னகை. சகோதரனைப் பார்த்து புன்னகைத்தல் ஸதகா என்பது ஹதீஸ். அப்படியிருக்க நம்மில் பலருக்கு சிரிப்பு வருவதில்லை. ஏனென்றால், அவர்கள் சீரியசான தாஇக்கள். எனவே, சிரிப்பதில்லை. நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் வாழ்க்கைக் கலை, ஸஹாபாக்களின் வரலாற்றைப் படிப்பவர்கள் இதனையும் சேர்த்து படிக்க வேண்டும். இறுகிப்போன (Dry) மனதுடனன்றி நெகிழ்ச்சியாக, மகிழ்ச்சியாக இதமாக கொஞ்சம் புன்னகைப்போம். தேவைப்பட்டால் நண்பர்களுடன் கலகலப்பாகப் பேசுவோம் வாருங்கள். ■

---

16ஆம் பக்கத் தொடர்) **ஆயுதக் குழுக்களின்...**

*02.* அரபு நாடுகளின் முக்கியமான பிராந்தியங்களை சட்டமற்ற, பாதுகாப்பற்ற பகுதிகளாக மாற்றும் கட்டம்.

*03.* பாதுகாப்பற்ற பிராந்தியங்களைக் கைப்பற்றி இஸ்லாமிய தேசத்தை பிரகடனம் செய்யும் கட்டம்.

இன்றைய ஐ.எஸ் அமைப்பின் போலி கிலாபத் பிரகடனத்திலும் அபூபக்கர் நாஜியின் கருத்துச் செல்வாக்கு பாரியளவில் தொழிற்பட்டுள்ளதாக கடும்போக்கு சிந்தனை ஆய்வாளர்கள் கோடிட்டுக் காட்டுகின்றனர்.

மொத்தத்தில், வன்முறை ஆயுதக் கூட்டணியின் போக்கில் 2001- 2006 இடைப்பட்ட காலப் பிரிவில் பல சிந்தனைத் திருப்பங்கள் ஏற்பட்டுள்ளன. குறிப்பாக, தீவிர நிலைப்பாடுகளை நோக்கியும், தூர எதிரியை விட்டு விட்டு நெருங்கிய எதிரியை இலக்கு வைக்கும் புதிய தளத்தினை நோக்கியும் அல்காயிதா கூட்டணி நகர்ந்த காலப் பிரிவாகவும் அதனை ஆய்வாளர்கள் அடையாளப்படுத்துகின்றனர். அம்மாற்றங்களின் பிரதான பொறியியலாளர்களாக அல்காயிதா ஈராக்கின் தலைவர் அபூ முஸ்அப் ஸர்காவி, அவரது ஆலோசகர் அபூ ஹம்ஸா முஜாஹிர் மற்றும் அபூபக்கர் நாஜி போன்றோரைக் குறிப்பிடலாம். (மிகுதி அடுத்த இதழில்)

**திருத்தம்: கடந்த இதழில் யெமன் தொடர்பாக வெளியான கட்டுரையில் யெமனின் தற்போதைய ஆட்சியாளரின் பெயர் தவறாக இடம்பெற்றுள்ளது. அதனை வாசகர்கள் 'அப்துல் ரப்பி மன்ஸூர்' என திருத்தி வாசிக்கவும்.**

## சிறுநீரகம் தேவை

கொலன்னாவையைச் சேர்ந்த பாத்திமா முஸ்னியா (வயது 33) என்பவரின் இரு சிறுநீரகங்களும் செயலிழந்துள்ளதாகவும் அவருக்கு அவசரமாக சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சை செய்ய வேண்டியுள்ளதாகவும் கொழும்பு தேசிய வைத்தியசாலை சிறுநீரக மாற்றுப் பிரிவில் பணிபுரியும் வைத்தியர் ஏ. எல்.எம். நஸார் தெரிவித்துள்ளார்.

குருதி வகை $A^+$ அல்லது $O^+$ ஐச் சேர்ந்த சிறுநீரகம் தேவைப்படுகிறது.

தொடர்புகளுக்கு: ரின்ஸாத் ஷரீப்தீன்
தொலைபேசி: 0772588433

## மணமகன் தேவை

மாவனல்லையைச் சேர்ந்த முன்பள்ளி கற்கை நெறியைப் பூர்த்தி செய்து முன்பள்ளிப் பாடசாலையில் கற்பித்த, பொது நிறமுடைய மணமகளுக்கு (வயது 31, உயரம் 5' 1") மார்க்கப்பற்றுள்ள துணையை குடும்பத்தினர் எதிர்பார்க்கின்றனர். (விவாகரத்துப் பெற்றவர்களும் இரண்டாம் தாரமாக மணமுடிக்க விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளலாம்)

**தொடர்புகளுக்கு: 077 9580282**

கேகாலை மாவட்டத்தைச் சேர்ந்த க.பொ.த. உயர் தரம் சித்தியடைந்த மார்க்கப்பற்றுள்ள மணமகளுக்கு (வயது 24) மார்க்கப்பற்றுள்ள பொருத்தமான மணமகனை குடும்பத்தினர் எதிர்பார்க்கின்றனர்.

**தொடர்புகளுக்கு: 075 9012343**

மாவனல்லையைச் சேர்ந்த HND இறுதியாண்டில் கல்வி பயிலும் தனியார் பாடசாலையொன்றில் ஆசிரியையாகப் பணியாற்றும் பெண்கள் அரபுக் கல்லூரி ஒன்றில் மௌலவியா பட்டம் பெற்ற மணமகளுக்கு (வயது 24, உயரம் 5' 3") தஃவா பணியில் ஈடுபாடுள்ள பொருத்தமான துணையை குடும்பத்தினர் எதிர்பார்க்கின்றனர்.

**தொடர்புகளுக்கு: 077 3386013**

கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த அரசாங்கப் பாடசாலை ஒன்றில் ஆங்கில ஆசிரியையாகப் பணிபுரியும் நல்லொழுக்கமும் மார்க்கப்பற்றுமுள்ள மணமகளுக்கு (வயது 24, உயரம் 5' 6") மார்க்கப்பற்றுள்ள தொழில் புரியும் மணமகனை ஆசிரியப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். (இரவு 7.00 மணிக்குப் பின்னர் தொடர்பு கொள்ளவும்)

**தொடர்புகளுக்கு: 0768040318**

கேலை மாவட்டத்தைச் சேர்ந்த முன்பள்ளி டிப்ளோமா கற்கை நெறியைப் பூர்த்தி செய்த தனியார் பாடசாலை ஒன்றில் ஆசிரியையாக பணிபுரியும் மார்க்கப்பற்றுள்ள மணமகளுக்கு (வயது 24) ஹலாலான முறையில் சம்பாதிக்கக்கூடிய 30 வயதுக்குட்பட்ட மார்க்கப்பற்றுள்ள மணமகன் தேவை.

**தொடர்புகளுக்கு: 0777904565**

குருநாகல் மாவட்டத்தைச் சேர்ந்த 1991இல் பிறந்த சட்ட பீடத்தில் இறுதி வருடத்தில் கல்வி கற்கும் மாணவிக்கு தகுந்த துணையை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

**தொடர்புகளுக்கு: 0777874984**

மேல் மாகாணத்தைச் சேர்ந்த மௌலவியா கற்கை நெறியைப் பூர்த்தி செய்து, பயிற்றப்பட்ட ஆசிரியையாக பணி புரியும் மணமகளுக்கு (வயது 32) தகுந்த துணையைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். பொருத்தமான மணமகன் கிடைக்குமிடத்து மணமகளின் இளைய சகோதரன் (வயது 25) மாற்று திருமணம் செய்து கொள்வது குறித்தும் கவனத்திற் கொள் எப்படும்.

**தொடர்புகளுக்கு: 0773863256**

RESPECTABLE MOOR PARENTS OF WELL CONNECTED FAMILY RESIDING IN COLOMBO SEEKS FOR THEIR YOUNGEST DAUGHTER, FAIR, GOOD LOOKING, 26 YEARS OF AGE, HEIGHT 5' 3 1\2" WORKING AS A SENIOR EXECUTIVE, A WELL EDUCATED SUITABLE PARTNER.

**0772812687, 0770711108**

(39ஆம் பக்கத் தொடர்) **சோதனைகள்...**

ஆம், இந்தத் தாரக மந்திரத்தை நடைமுறைப்படுத்த முடியுமானால் எமது உள நிம்மதி வெகு தூரத்தில் இல்லை. தனக்கு வரும் இன்பதுன்பம் இரண்டையுமே சமமான மனோநிலையில் எதிர்கொள்ளும் ஒரு முஃமினின் நிலை ஆச்சரியமாக இருக்கிறது என்று நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் உரைத்தார்கள்.

ஆம், இவை எல்லாம் ஈமானியப் பெறுமானங்கள் ஆகும். ஓர் அடிமை தன்னைப் படைத்தாளும் இறைவனோடு கொள்ளும் உறவு மற்றும் அதன் ஆழத்தின் வெளிப்பாடுகளே ஆகும். எனவே, எமது வாழ்வில் இறைத் தொடர்பை அதிகரித்து, இறை சந்திப்பில் ஆசை வைத்து, உலகக் கஷ்டங்களுக்குப் பின்னால் மறுமை இலாபங்களை எதிர்பார்த்து வாழ அல்லாஹ் துணை செய்வானாக.

**எமது வெளியீடுகளான**

அல்ஹஸனாத், எங்கள் தேசம், அகரம், ப்ரபோதய, The Trend ஆகியவற்றில் விளம்பரம் செய்ய விரும்புகிறீர்களா? இன்றே தொடர்பு கொள்ளுங்கள்

0778 321116 - எம்.ஆர்.எம். ரஸ்லான்
0777 412146 - எம்.எச்.எம். ரிஸ்வான்

மின்னஞ்சல்
alhasanathadd@gmail.com

அல்ஹஸனாத் இதழுக்கு சந்தாக்கள் அனுப்ப நாடுவோர் ALHASANATH என்ற பெயருக்கு Money Order எடுத்து தபாலகம் DEMATAGODA எனக் குறிப்பிட்டு அனுப்பவும். வங்கியில் வைப்பிலிட நாடுவோர் Srilanka Jamath - E-Islami AC NO: 1320009182, Commercial Bank, Maradana அல்லது Srilanka Jamath - E-Islami AC NO: 372132, B.O.C, Maradana எனும் வங்கிக் கணக்கில் குறித்த தொகைப் பணத்தை வைப்பிலிட்டு பற்றுச்சீட்டை அனுப்பவும்.

# ஐரோப்பாவில் மருத்துவப்பட்டப்படிப்பு

## STUDY MEDICINE IN BELARUS & BECOME A WORLD CLASS DOCTOR

www.bcas.lk

### UNIQUE SERVICES BY BCAS


- **ERPM** (Sri Lankan Medical council examination) preparation course available from 2nd year
- **USMLE** (United State Medical License Examination) preparation course from 1st year
- **AMC** (Australian Medical council ) examination preparation from 2nd year
- **MCC** (Medical council of Canada) examination preparation from 1st year
- **GMC- UK PLAB** (General medical council ) examination preparation from 4th year
- European Country internship facility and working opportunity
- European Scientific and research membership
- Medical conference attendant facility in Europe and USA
- For Summer hospital practice in Europe, UK and USA hospitals.

### BCAS ஊடாக இப்பல்கலைக்கழகங்களில் கற்பதன் மூலம் மாணவர்களுக்கு கிடைக்கும் விஷேட பயன்கள்

- இலவச விமான டிக்கட்
- மாணவர்கள் முதற்பயணத்தில் பெற்றோரும் செல்வதற்கான இலவச ஏற்பாடுகள்
- பாதுகாப்பான தங்குமிட வசதி
- மேலுள்ள சர்வதேச மருத்துவ பரீட்சைகளுக்கான விசேட தயார் படுத்தல்கள்
- ஏனைய ஐரோப்பிய நாடுகளில் தொழில் வாய்ப்புகளும், வழிகாட்டல்களும்

### Belarus அரசினால் வழங்கப்படும் இம் மருத்துவப் பட்டம் பின் வரும் சர்வதேச அமைப்புக்களினால் முழு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும்.

- Sri Lanka Medical Council (SLMC)
- World Health Organization (WHO)
- General Medical Council (UK)
- Educational Commission for Foreign Medical Graduates (ECFMG) - USA
- Australian Medical Council (AMC)
- Medical Council of India




- 6 Years Duration (Doctor in Medicine - MD)
- English Medium Education
- Very Affordable Course Fee
  Less than RS. 6 Million , Including Accomadation for the entire studies (6 years)

**Belarus State Medical University - MINSK**

**The BEST Medical University in Belarus**

**Admission for other Medical Universities in Belarus also facilitated**

NEXT INTAKE **NOW ON**

**BCAS CAMPUS**
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

**Corporate Office :**
32, Dharmarama Road, Colombo 6.
Tel : 011 255 9255

16 YEARS

ISO 9001:2008 CERTIFIED

Colombo - 076 520 4503 | Jaffna - 077 744 4407 | Batticaloa - 077 416 3460 | Ampara - 077 324 7711

Colombo | Mt.Lavinia | Kandy | Batticaloa | Kurunegala | Jaffna | Ampara | Qatar

Registered as a News Paper in GPO/QD/16/NEWS/2015 Printed by AJ Prints (Pvt) Ltd. 44, Station Road, Dehiwela.

After O/L | A/L



ISO 9001: 2008 Certified Company

TURNKEY IT CAMPUS Join the No.1

சர்வதேச அங்கீகாரமுடைய

**Network Engineer**

ஆவதற்கு நீங்களும் விரும்புகிறீர்களா?

IT துறையில் அதிஉயர் சம்பளத்தை பெறக்கூடிய NETWORK துறையில் இன்றே இணையுங்கள்.

**Bsc (Hons) Computer Systems & Networking**
University of Greenwich

1½ Years

ACHNP
Advanced Certified Hardware & Network Professional
Six Recognized Certifications

- CISCO CCNA — Cisco Certified Network Associate
- Microsoft Certified Technology Specialist — Microsoft Certified Solution Associate
- CLNA — Linux Network Admin with Security
- CWNA — Windows Network Administration
- CHEN — Hardware Engineering with Networking

MCSE Server 2012 Exam 70 - 413, 70 - 414

MCSA Server 2012 Exam 70 - 410, 70 - 411, 70 - 412

MCSA Windows 8 Exam 70 - 687, 70 - 688

CISCO

CCIE Routing & Swithing written Exam 350 - 001

CCNP IP Routing, IP Switch IP Tshoot

CCNA R&S Voice, Security

CompTIA A+ N+

C|EH Certified Ethical Hacker

Microsoft Partner

PEARSON VUE-Authorised Test Centre

**Multimedia Engineering**

Graphic Designing
Web Designing
Web Development

MySQL php APACHE

**TURNKEY**
ஏன் தெரிவு செய்ய வேண்டும்?

- இலங்கையில் Hardware and Networking துறையில் அதிகமான வல்லுனர்களை உருவாக்கிய முதன்மை நிறுவனம்.
- Authorized Test Center for CISCO & Microsoft Examinations.
- வெளிநாட்டு தூதரகங்களிலும் தொழில் வாய்ப்பு வழங்குனர்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட சர்வதேச சான்றிதழ்.
- Cisco, Microsoft and Networking பாடநெறிகளுக்கு உயர்தரமிக்க பரிசோதனைக் கூடம்.
- மறைமுகக் கட்டணங்கள் இல்லை.

TURNKEY IT TRAINING
Dedicated for Professional Coaching
2 581581

COLOMBO
562/15B, Lower Bagathale Road,
(Road adjoining Premadasa Jewellers-Sea side)
Colombo 03.
Tel: 2 581581, 2 595336, 077 2286988

KANDY
504/1, Peradeniya Road, Kandy.
Tel: 081 2205678, 077 5077456
An Institution registered with Tertiary and Vocational Education Commission of Sri Lanka. Reg No. PO1/200

HOTLINE
0772 286 988

Now register for any course online @
www.turnkey.lk

info@turnkey.lk www.facebook.com/turnkeycolombo